கல்கி



30 காசு

KALKI 1.10.1961

இக்கால இல்லங்களிலே ஸர்ப்...





"எதற்காகக் காத்திருந்தேனோ
அந்த மாறுதல்..."

என்கிறார் பம்பாயிலுள்ள சமூக ஊழியரான ஸ்ரீமதி நொரீன் அமோலிக்.

'குடித்தனம் நடத்துவதற்காக ஏராளமான பெண்மணிகள் காலத்துக்கேற்ற புதுப்புது முறைகளை மேற்கொள்வதைப் பார்க்கிறேன்.

'எடுத்துக்கொள்ளுங்களேன் ஸர்ப். அன்றாட சலவைக்கு அது எத்தகைய பேருதவி என்பதை அனுபவத்தில் அறிந்தவள் நான்' என்கிறார் அவர்.

எளிதான வேலையோடு, எடுப்பான வெளுப்பு...எனவே, சட்டை, சேலை, பாவாடை...எதுவானாலும் சரி, எல்லாத் துணிமணிகளுக்கும் நான் ஸர்ப் உபயோகிப்பதில் வியப்பில்லை.

இக்கால மாதரின் தீர்ப்பு... ஆற்றல் மிகுந்த ஸர்ப், அழுக்கை அறவே அகற்றி, வெண்மைக்கு ஒப்பற்ற வெண்மை அளிக்கிறது. உங்கள் வீட்டுத் துணிகளுக்கு உகந்தது ஸர்ப்!

ஸர்ப் மூலம் உங்களுக்கு வெள்ளைவெளேரென்ற சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 17-X52 TM



போர் வீரனின்
கௌரவம்...
ஸாத்தே பிஸ்கெட்ஸ்
ஸாத்தே பிஸ்கட் அண்டு சாக்லெட் கம். லிட்., பூனா-2

பிலவ, புரட்டாசி 15


கல்கி

அக்டோபர் 1, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

ஆந்திரத்தின் குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் புகையிலை பதனிடல் நூதன முறையில் நடைபெறுகிறது. அந்த ஜில்லாக்களில் விரவியுள்ள பண்டகசாலைகளில் சிகரெட் தயாரிப்புக்காக வர்ஜீனியா புகையிலை கணப்புப் போடப்பட்டுப் பக்குவப்படுத்தப்படுகிறது. அத்தகைய புகையிலையை, அதற்கான விற்பனைத் தலமாகிய குண்டூரில், ஐக்கிய ராஜ்யம், ருஷியா மற்றும் இதர நாடுகளின் சிகரெட் தயாரிப்பாளர்கள் வாங்கி ஏற்றுமதி செய்கின்றனர்.



புகையிலையின் வரலாறு... 5



GTC

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GT.705 TM

Greens' Advtg



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 9

அடிகளின் அடிச்சுவட்டில்...

காந்தி ஜயந்தித் திருநாள்.

இன்று, இந்தநாட்டின் நிலைமையைச் சிறிது ஆராய்ந்து பார்த்தால் நெஞ்சில் நோவுதான் காண்கிறது. அண்ணல் நமக்காக வகுத்துத் தந்த வழியிலிருந்து நாம் எவ்வளவு தூரம் விலகி வந்து விட்டோம், இப்படி நம்மை விலகிவரச் செய்தவர்களுக்கு நாம் எவ்வளவு தூரம் இடமளித்து விட்டோம் என்பதெல்லாம் உள்ளத்தை உறுத்துகிறது.

காந்தியடிகள் தம் ஆயுள்காலம் முழுதும் எந்தக் கொள்கைகளை நிலைநாட்டப் பாடு பட்டாரோ அவையெல்லாம் இன்று தவிடுபொடியாகி வருகின்றன. அடிகள் உரமிட்டு, நீர் வார்த்துக் காத்து வளர்த்த காங்கிரஸ் விருட்சத்தில் புல்லுருவிகள் மண்டி வளர்ந்து அவரது புனிதப் பணி அவ்வளவையும் கேலிக்கூத்தாக்கி வருகின்றன.

'காந்தி சொற் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தினுள்ளே' என்று பாடினார் மகாகவி பாரதியார். அன்று காந்தி சொல் கேட்டோம், விடுதலையும் கண்டோம்; அதாவது அரசியல் சுதந்திரம் பெற்றோம். ஆனால் அதைவிட முக்கியமானதாக அவர் கருதிய மனிதனின் உண்மை சுதந்திரத்தைக் காத்துத் தருவதற்கு முன்பே சென்று விட்டார். இன்று நாம் தனி மனிதனின் உரிமை, சர்க்காரால் சூறையாடப்படுவதை அநுமதித்து, அடிமை நிலைக்கு வந்துவிட்டோம். நமது வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் சர்க்கார் வசம் ஒப்புவித்துவிட்டோம். 'விடிவிலாத் துன்பம் செய்யும் பராதீன வெம்பிணி'யை அகற்ற உழைத்தார் காந்தியடிகள். இப்போது சுயாட்சியிலேயே நம்மவருக்கே நாம் அடிமையாகி வாழும் இழிநிலைக்கு வந்திருக்கிறோம்.

'மெய்ஞ்ஞானத் துணிவினை .... அரசியலதனில் பிணைத்திடத் துணிந்தனை' என்று அடிகளை வாழ்த்தினார் நம் மெய்ஞ்ஞானக் கவிஞர். ஆனால் இன்றைய ஆட்சியினரின் அகராதியிலோ ஆத்மீகம், தெய்வ நம்பிக்கை, மதப் பற்று இவற்றுக்கு இடமே கிடையாது.

புராதன பாரதப் பண்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் தேசத் தந்தை காந்தியடிகள். நேரு சர்க்காருக்கோ மேலைநாட்டு வாழ்க்கை முறையிலுள்ள மோகம் சொல்லி முடியாது.

'சிறிய வாழ்க்கை, சீரிய சிந்தனை' என்பதே மகாத்மாவின் மந்திரோபதேசம். இந்த இலட்சியத்துக்கு முற்றும் முரணானது இன்றைய ஆட்சித் தலைவர்களின் போக்கு. படாடோபமான முறையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாக ஆசை காட்டுவதே அவர்களின் காரியமாகி விட்டது. சிந்தனை சிறக்கும் முறையில் கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

சிறுகக் கட்டிப் பெருக வாழ்வதிலும், நிதானமாகத் தனியார் முயற்சியால் தோன்றும் முன்னேற்றத்திலும் காந்தியடிகளுக்கு இருந்த நம்பிக்கைக்கும், அஸ்திவாரமற்ற இன்றைய திட்டங்கள், அவற்றை நிறைவேற்றுவதில் காணப்படும் அசுர வேகம் இவற்றுக்குமுள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போலாகும். கைத் தொழிலைத் தொழுதவர் காந்தியடிகள். இயந்திர பூதத்தை வழிபடுவதில் பெருமை காண்பவர்கள் இன்றைய அரசாங்கத்தினர்.

சாதி, சமயம் முதலிய மாறுபாடுகளை எண்ணாமல் மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்பதே காந்தியடிகளின் ஆணை. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகவே தமது இன்னுயிரை நீத்தார் அவர். ஆனால் இன்றோ வகுப்புவாதத்தைத் தூண்டி விட்டு

வோட்டுப் பிடிப்பதில் முனைந்து நிற்கிறது காங்கிரஸ்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பற்றற்ற பணியை வலியுறுத்திக் கூறினர் காந்தி அடிகள். கண்ணன் கீதையில் கூறியதைப் போல், பலாபலன்களில் கருத்தைச் செலுத்தாது சத்தியத்துக்காகப் போராட வேண்டும் என்று உபதேசித்தார் அவர். காங்கிரஸ் ஆட்சியோ அறத்தைச் செய்வதற்குக் கூடப் பலனை எதிர்பார்க்கிறது. தனது மாயக் கற்பனையாகிய பொய்ப் பொருளாதார முன்னேற்றத்துக்காக உலக அரங்கில் உண்மையை எடுத்துச் சொல்லவல்ல சுதந்திரத்தைக் காங்கிரஸ் அரசு அடகு வைத்து இழந்து விட்டது.

காங்கிரஸின் பண பலத்தையும், அதிகார பலத்தையும் கண்டு பயந்து போகாமல் நாம் தர்ம வழியில் செல்ல முற்படுவோமாக. 'அவர்போய் விட்டார். அவரது உபதேசங்களைப் பின்பற்றி நடக்காமல் அவையும் அவருடனேயே மறைந்து போகும்படி விட்டு விட்டால் நாம் வீழ்ச்சி அடைவோம். அதுமட்டுமல்ல; அவரைக் கொன்றவனுக்கு உடந்தையாகவும் ஆகிவிடுவோம்' என்று காந்தியடிகள் மறைந்த போது ராஜாஜி கூறினர். அந்தப் பயங்கரக் குற்றத்தை நாம் செய்யாமலிருப்போமாக.

'பலனைக் கருதாமல் பணி புரிவோம்; காந்தியம் தழைக்கச் செய்வோம்' என்று காந்தியடிகளின் பிறந்த நாளன்று உறுதி பூணுவோம். 'அவர் காட்டிய வழியில் இதய பூர்வமாக நடந்தால் நமக்கு அவர் இறந்தவராக மாட்டார்; நம்மிடையே நம் மூலமே அவர் வாழ்வார்' என்ற ராஜாஜியின் வாக்குக்கு இணங்க, அவரை நம்மிடையே வாழச் செய்ய முயலுவோம்.

போலித்தனத்தின் எல்லை

காங்கிரஸின் தேர்தல் விக்ஞாபனம் கபடத்தன்மைக்கு ஓர் இலக்கணமாக விளங்குகிறது.

அரசியல், சமூக வாழ்வு, பொருளாதாரம் எல்லாவற்றையும் தன் கையில் போட்டுக் கொண்டு மக்களின் வாழ்க்கையைப் பதினன்கு ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்டுப்படுத்தி வருகிறது. இதுவரை எந்தெந்த சூழல்களுக்கெல்லாம் தானே காரணமாக இருந்து வந்திருக்கிறதோ அதே சூழல்களைத் தீர்க்கப் போவதாகத் தேர்தல் அறிக்கையில் அது ஏமாற்றுவாதம் செய்திருக்கிறது.

இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பட்டா பெற்று விட்டால், மக்கள் எல்லாருக்கும் சமவாய்ப்புக்கள் அளிக்கப் போகிறதாம் காங்கிரஸ் கட்சி. இன்று தங்களுக்குத் தானம் போடுபவர்களுக்கு மட்டும் பர்மிட்டும் லைசென்சும் கோட்டாக்களும் வழங்கி, 'சலுகை பெற்ற ஒரு சாதி'யைச் சிருஷ்டி செய்து யாவரும் ஒரே விதமான வாய்ப்புப் பெற முடியாதபடி மக்களைப் பலவிதங்களில் பாகுபாடு செய்திருப்பது இந்தக் காங்கிரஸ் ஆட்சிதான்.

பொருளாதார முறையில் நம்மை நாமே போஷித்துக் கொள்ள வழி காணப்போவதாக வேறு காங்கிரஸ் சொல்லுகிறது. நம் மக்களின் ஞாபக சக்தியில் சிறிதாவது நம்பிக்கை இருந்தால் காங்கிரஸ் இப்படிக் கூறி இராது. நம்முடைய நாடு இப்போதே ஏழாயிரம் கோடி ரூபாய் கடன்பட்டிருக்கிறது. இன்னமும் அந்தக்கடன் தொகை உயரப் போகிறது. இக்கடன்களைத் திருப்பி அளிக்கும் வரையில் பொருளாதாரத் தன்னிறைவு என்பது சிறிதும் சாத்தியமில்லாத விஷயம். கடனைத் திருப்பித் தருவது பற்றிக் கேட்டாலோ காங்கிரஸ் மௌனம் சாதித்து விடுகிறது. இதையெல்லாம்மக்கள் மறந்துவிடமாட்டார்கள். காங்கிரஸின் சொல் ஜாலங்களில் மயங்கிப் போக மாட்டார்கள்.

உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசும் இன்னொரு கூற்றைப் பாருங்கள்: பொருளாதார அதிகாரம் ஒரே இடத்தில் குவிவதையும் ஏகபோக வியாபார உரிமையையும் தடுக்கப் போகிறதாம் காங்கிரஸ். பொருளாதார அதிகாரத்தை ஏராளமாகக் குவித்து வைத்துக் கொண்டிருப்பது காங்கிரஸ் சர்க்கார் தான்; தனிப்பட்டோர் யாரும் இல்லை. ஏகபோக உரிமை பெற்ற ஒரு சில தனி முதலாளிகளும் காங்கிரஸின் பேராதரவைப் பெற்ற செல்லப் பிள்ளைகள்தான். சர்க்காரின் நேரடி வர்த்தகமும், வர்த்தகக் கண்காணிப்பு என்ற பெயரில் நடைபெறும் மறைமுக அதிகாரமும் மூன்றும் இட்டத்தில் மேலும் வலுக்கத்தான் போகின்றன. ஆகையால் காங்கிரஸின் புது கோஷத்துக்கு ஒரு பொருளும் இல்லை.

போலித்தனத்தின் சிகரத்தையே எட்டிப் பிடித்து விடுகிறது அறிக்கையின் இன்னொரு வாசகம். புது சமுதாயம் ஒன்றை உருவாக்கி, தனி மனிதனின் மதிப்பையும் மாண்பையும் காப்பாற்றப் போகிறதாம் காங்கிரஸ் கட்சி! சோஷ

லை பாணியை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு, தனிமனிதனின் ஜீவாதார உரிமைகளையெல்லாம் காற்றில் பறக்க விடும் இந்தக் கட்சி, தன் மூடப் பிடிவாதத்தைச் சற்றும் தளர்த்தாமலே இந்த அற்புதத்தை எப்படிச் செய்யப் போகிறதென்பது புரியாத புதிராக இருக்கிறது.

உண்மை நிலைமை இப்படியிருக்கும் போது, தான் அமுல் செய்யப் போகாத தத்துவங்களைக் காங்கிரஸ் ஏன் தன் விக்ஞாபனத்தில் கூறியிருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கொள்கைகளை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லும் சுதந்திரக்கட்சியைக் கண்டு அது பயப்படுவதே இதற்குக் காரணம். உண்மையின் சக்தி வீண் போகாது. சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைத் தானும் சொல்லி வோட்டுப் பெற முயலுகிறது காங்கிரஸ்.

காங்கிரஸின்தேர்தல் விக்ஞாபனத்தில் வாய்ப்பந்தல்கள் குறைந்திருப்பதற்கும் சர்க்காரின் 'மகத்தான' சாதனைகள் பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்ளாததற்கும் சுதந்திரக் கட்சிதான் காரணம். காங்கிரஸ், தன் குறைகளை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் தொனிகூட ஒவ்வோரிடத்தில் காணப்படுகிறது.

ஆனால் இவ்வளவு எளிதில் மன்னிக்கக் கூடியதல்ல காங்கிரஸின் பிழைகள். தேசிய ஒற்றுமை, ஆட்சி மொழி, போதனா மொழி, விலைகளை மட்டுப்படுத்துவது, வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பது, தொழில் துறை முதலீடுகளைப் பெருக்குவது, மக்களின் அன்றாடத் தேவையான பண்டங்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தாமலிருப்பது, இணக்கமான ஏற்றுமதிக் கொள்கை, அந்நியக் கடன்களை அடைப்பது, எல்லைப் பிரச்னை முதலிய முக்கியமான விஷயங்களைப் பற்றி உருப்படியான ஒரு தீர்வும் இந்த விக்ஞாபனத்தில் காணப்படவில்லை. மக்கள் இதைக் கவனிக்கத் தவறமாட்டார்கள்; இதை மனத்தில் கொண்டே தங்கள் வாக்குரிமையைத் தேர்தலின்போது அவர்கள் பிரயோகிப்பார்கள் என்று நம்புகிறோம்.

கர்மவீரர் மறைவு

இந்த ஆண்டு நேர்ந்த மிகப் பெரிய சோக சம்பவம் ஐ.நா.வின் பிரதம காரியதரிசி ஹாமர்ஷீல்டின் துர்மரணமாகும். காங்கோவில் ஐக்கியத்துக்கு அடிகோலுவதற்காகச் சென்றவர் விமான விபத்துக்காளாகி விட்டார். சமாதானத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவரின் ஆன்மா அந்தப் புனிதப் பணிக்கே நிவேதனமாகி விட்டது. இந்த ஆத்ம தியாகத்தின் பலனாகவாவது காங்கோவில் அமைதி ஏற்படும் என்று நம்புகிறோம்.



ஸ்விடன் தேசத்தைச் சேர்ந்த ஹாமர்ஷீல்டின் தந்தை வழி முந்தையர்கள் ராணுவ சேவையிலும், அரசியல் பணியிலும் சிறந்து விளங்கியவர்கள். அவர்களிடமிருந்து தன்னலமற்ற சேவை மனப்பான்மையைப் பெற்றார் அவர். தாய் வழி முன்னோர்களாகிய மதகுருமார்களிடமிருந்து உலகமக்கள் யாவரும் ஆண்டவனின் குழந்தைகள் என்றஉணர்வைப் பெற்றார். சட்டக் கல்வி பட்டதாரியான ஹாமர்ஷீல்டிடம் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் திறமை சிறப்புற விளங்கியது. தத்துவ சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருந்ததால் எந்தப் பிரச்னையையும் மனங்கோணாமல் பரிசீலிக்கும் பக்குவத்தைப் பெற்றிருந்தார். திருமணம் செய்து கொள்ளாமல் ஐம்பத்தியாறாவது வயதில் அகால மரணம் அடையும்வரை சேவையிலேயே கருத்தாக இருந்தார். பொருளாதாரம், அரசியல், நிதி விவகாரம் இவற்றிலெல்லாம் அவருக்கு ஆழ்ந்த அறிவு இருந்ததால் ஐ.நா.-சபையின் ஓர் ஆதரிசக் காரியதரிசியாக விளங்கி எட்டாண்டுகள் அரும்பணியாற்றினார். ஹாமர்ஷீல்டு பகட்டின்றி அமைதியான முறையில் தொழில் புரிந்ததால், 'சாத்துவிக ராஜதந்திரம்' என்று ஒரு புதுச் சொற்றொடரே அவரால் ஏற்பட்டது.

ஆறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கக் கைதிகளை விடுவிப்பதற்காகப் பீகிங்குக்குச் சென்றதி

காந்தி பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

பிறந்த நாளாயினும் அவர் இறந்துவிட்டதே நம் உள்ளத்தில் வேதனை செய்கிறது.

இழந்த பொருளை எண்ணி யெண்ணி! வருந்துவதில் பயனில்லை. இருக்கும் பொருளைப் போற்றுவதே கடமையும் லாபமும் ஆகும்.

காந்தி இறந்துவிட்டார். ஆனால் தருமம் அழிந்துபோகவில்லை. அது அழியாத வஸ்து. அதன் சிறப்பை உணர்ந்து அதைக் காக்க வேண்டும். அதைக் குப்பைத் தொட்டியில் கிடக்க விடலாகாது.

தருமத்தைக் காக்கத் தைரியம் வேண்டும். தைரியத்தை இழந்தோமானால் மனைவி மக்களையுமே காக்க முடியாது. தருமத்தைக் காக்க அதைவிட தைரியம் வேண்டும். அச்சத்தை அகற்றி அனைத்தினும் விலையுயர்ந்த பொருளாகிய தருமத்தைக் காப்போமாக.

நம் அச்சத்தை நீக்க ஆயுள் முழுதும் காந்தியடிகள் முயன்றார். பாரதியும் அதற்காகவே பாடிப் பாடி ஆயுளைக் கழித்தார்.

அச்சம் வேண்டாம். இதுவே மந்திரம்; காந்தி பிறந்த நாளில் ஜெபம் செய்ய வேண்டிய மந்திரம் இதுவே.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

லிருந்து, ஹங்கேரிக் கிளர்ச்சி, சூயஸ் தகராறு, லாவோஸ் விவகாரம், லெபனன் கலவரம் முதலிய பல சிக்கலான பிரச்னைகளைச் சமாளித்திருக்கிறார். இவரது பதவிக் காலத்தில்தான் பல நாடுகள் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெற்றன.

அதிகாரி என்ற முறையில் வெறும் தஸ்தாவேஜுகளை மட்டும் ஆராய்ந்து கொண்டிராமல் மக்களையும் மக்கள் தலைவர்களையும் நேரிடையாகக் கண்டு அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டவர் ஹாமர்ஷீல்ட். அவரது காங்கோ பயணம் அதில் இறுதி யாத்திரையாக முடிந்தது.

இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்து அவரை மேலை நாடுகளின் கைப்பாவை என்று ருஷ்யா குற்றம் சாட்டி வந்தது. காங்கோ-கடாங்காவை ஒரே நாடாக்கி, சட்ட பூர்வமான ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறையால் சமீப காலத்தில் சில மேலை நாடுகளின் அதிருப்திக்கும் அவர் ஆளானார். இதிலிருந்தே அவர் எந்த வல்லரசுக் கோஷ்டியையும் சேராதவர் என்பது வெளிப்படையாகத் தெரிய வரும். வல்லரசுகளின் அதிகாரத்துக்கு மேம்பட்ட உலக ஸ்தாபனமாக ஐ. நா. விளங்க வேண்டும் என்பதே அவரது விருப்பம். அந்த ஸ்தாபனத்தின் கௌரவத்தையும் வெகுவாக உயர்த்தியவர் அவர். உலக சமாதானப் பரிசுகளை அவரது நினைவுக்கு வழங்கி அப்பரிசுகளின் கௌரவத்தை உயர்த்துவதே உலகம் அவருக்குச் செலுத்தக் கூடிய அஞ்சலியாகும்.

அரிய சேவை

சேலம் ஜில்லாவில் ஹோக்கேனகல் என்னும் இடத்தில் காவேரி அறுபது அடி உயரத்திலிருந்து கீழே குதித்துப் பாய்கிறது. இந்த ஹோக்கேனகல் அருவியில் அடித்துச் செல்லப்பட்ட ஸ்ரீமதி தேவானை என்னும் அறுபது வயது மூதாட்டியைக் கிராமசேவக் திரு லோகநாதனும் திரு பெரியண்ணன் என்னும் மீனவரும் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து மீட்டிருக்கிறார்கள். இந்த அரிய பணிக்கு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதற்கு மேல் ஒரு படி சென்று பாராட்டுவதற்குத் தகுந்த வார்த்தைகள் கிடைக்காதபடி செய்துவிட்டார் திரு லோகநாதன். அவருடைய சிறந்த சேவையைப் பாராட்டி வெகுமதி கொடுக்கப்பட்டபோது அதை ஏற்க அவர் மறுத்துவிட்டாராம்! எத்தகைய பண்பு!

உங்கள் கைத்தொழி
லுக்கு கடன் தேவையா?

சிறிய கைத்தொழில் நடத்துபவர்களுக்கும் ஏனைய தொழிலதிபர்களைப்போலவே பணமுடை ஏற்பட்டு வருகிறது. இதை நிவர்த்திப்பதற்காகவே பணத்தை கடனாகக் கொடுக்கும் அநேக ஏஜன்ஸிகள் மத்திய மற்றும் ராஜ்ய சர்க்கார்களிடமிருந்து உபகாரத்தைப்பெற்று ஒரு பண உதவித் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்

ஸ்டேட்பாங்க் ஆப் இந்தியா சிறிய கைத் தொழில் நடத்துபவர்களுக்கு, அவர்களது மூலப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட சாமான்கள் மற்றும் கைவசத்திலுள்ள சாமான்கள் முதலானவைகளின் மீது சட்டுக்கடனாக பணம் கொடுத்துதவ தயாராக இருக்கிறார்கள் இன்னும் வேறு இடங்களிலிருந்து கடனாகப் பெறுவதற்குள்ள வழிகளையும் மற்றும் ஆலோசனைகளையும் அவர்கள் கொடுக்கிறார்கள்.

ஸ்டேட்பாங்கின் கிளை ஆபீஸ் உங்கள் நகரத்திலும் இருக்கலாம். அந்த கிளை ஆபீஸின் ஏஜண்டிடம் சென்று உங்கள் சந்தேகத்தை ஏன் கேட்டு தெரிந்து கொள்ளக்கூடாது? அவர் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு வேண்டிய உதவியை செய்வார்.



ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா


இந்தியாவின் தலைசிறந்த பாங்க்

Sistas SB-32 TAM.





தெய்வப் புலவருக்குத் திருக்கோயில்



அழைப்பிதழ்கள் ஆரம்பமாகும் பல வகைச் சம்பிரதாயப்படி நிகழும் பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் முப்பத்தோராம் நாள் சனிக்கிழமை, அல்லது திருவள்ளுவர் ஆண்டு 1992 ஆவணி இறுதி நாள் அல்லது சுருக்கமாக 16-9-61 சனி மாலை சென்னைமாநகரத்தில் 'மாடமலி மயிலாப்பூர்' எனப் புகழ் பெற்ற மயிலையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அதிசயம் நிகழ்ந்த பகுதியில் இப்போது மாடங்கள் மருந்துக்குக்கூட இல்லையானாலும் இனிமேல் மாடமலிந்த கூட கோபுரம் ஒன்று அப்பகுதியில் தோன்றப் போகிறதென்று அன்று அங்கு நிகழ்ந்த விழாவிலிருந்து தெரிந்தது.

அன்று மாலை நான்கு மணியிலிருந்தே மயிலாப்பூர், முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவின் திருப்பத்தில் சிலரும் பலருமாகக் கூடி, 'திருவள்ளுவர், திருவள்ளுவர்' என்ற பெயர் பேச்சில் அடிக்கடி ஒலிக்க அந்தப் பக்கத்துக் கடைக்காரர்களிடமும், எதிரே வருகிறவர்களிடமும் ஆர்வமாக ஏதோ விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

'அப்படி எதுவும் இங்கே இருப்பதாகத் தெரியவில்லையே, சார்' என்ற பதில்தான் விசாரித்தவர்களுக்குப் பெரும்பாலோரிடமிருந்து கிடைத்தது. பாவம்! வந்து விசாரித்தவர்களில் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், பிரமுகர்கள், கோவில் திருப்பணி செய்யும் ஸ்தபதிகள் என்று பலவகைப்பட்டவர்கள் இருந்தார்கள். எல்லோரும்ஏமாற்றத்தோடு திகைத்துக் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தபோது புதிதாகவந்தவேறுசிலர் இவர்களிடமே வந்து இவர்கள் ஏற்கெனவே மற்றவர்களிடம் கேட்டு ஏமாந்திருந்த கேள்வியைக் கேட்டுத் திணற அடித்தார்கள். சிலர் நடந்தும், சிலர் காரிலும், சிலர் சைக்கிளிலும் வந்து வித்தியாசமில்லாமல்ஏமாந்துகொண்டிருந்தார்கள். இப்படி முண்டகக்கண்ணி அம்மன் கோவில் திருப்பத்திலேயே ஏறக்குறைய ஒரு பொதுக் கூட்டம் நடத்தத் தேவையான கூட்டம் சேர்ந்து விட்ட சமயத்தில் பக்கத்துச் சந்திலிருந்து 'வள்ளுவன் புகழ் வையகமெல்லாம் வாரி இறையடா தமிழா' – என்று ஓர் ஒலிபெருக்கி இசை கணீரென்று எழுந்தது.

அவ்வளவுதான். 'அடடா! நாம் தேடிக்கொண்டிருந்த இடம் இவ்வளவு பக்கத்திலேயா இருக்கிறது' என்ற வியப்புடன் எல்லாரும் அந்தக் குரல் எழுந்த திசையை நோக்கி ஆவலோடு ஓட்ட மெடுத்தனர். 'கூப்பிடு தூரம்' என்கிறார்களே, அதன் அர்த்தம், எனக்கு அன்றுதான் விளங்கிற்று.

இவ்வாறெல்லாம்தமிழன்பர்களைத் திணறச் செய்தவர் வேறு யாருமில்லை. திருவள்ளுவ நாயனார் தான். திருக்குறளில் அடக்கமுடைமை என்றோர் அதிகாரமிருக்கிறது அல்லவா? அதை எழுதிய வள்ளுவர் மயிலாப்பூரில் தாம் கோயில் கொண்டிருக்கிற இடத்தைக்கூட யாரும் அறிந்துகொள்ள முடியாமல் அடக்கமாக இருந்து விட்டதில் தவறில்லை. ஆனால் அவர் இனிமேல் இப்படியெல்லாம் ரொம்ப அடக்கமாக இருந்துவிட முடியாது. அது ஏன் என்று கேட்கிறீர்களா? திருவள்ளுவர் கோயிலுக்குத் திருப்பணி செய்து கோபுரமும், கல்யாண மண்டபமும் கட்டி அழகுபடுத்தப் போகிறார்கள் ஐயா! அதற்கான திருப்பணித் தொடக்க விழாவைத்தான் நமது அற நிலையப் பாதுகாப்பு அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் 16–9–61 மாலையில் திருவள்ளுவர் கோயிலில் நடத்தி வைத்தார்.

அன்றைக்குத் திருப்பணித் தொடக்க விழாவில் பேசியவர்கள் எல்லோருமே திருவள்ளுவருடைய 'அடக்கமுடைமை'யைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டார்கள். அதாவது மயிலாப்பூரில் வள்ளுவர் கோயில் இருக்கிற இடம் அதன் அக்கம் பக்கத்தில்கூட யாருக்கும் தெரியாமல் போய்விட்ட அடக்கமுடைமையைப் பற்றித்தான்! இதற்கு வள்ளுவர் கோயிலைச் சுற்றி இருந்தவர்களின் அடக்கமுடைமையும் ஒரு காரணம். அதிகமாக எதையும் தெரிந்து கொள்ள வேண்டாமென்ற அடக்கமுடைமை அவர்களுடையதுதானே?

திருவள்ளுவர் கோவில் திருப்பணிக் குழுவின் துணைத் தலைவர் அய்யா-சுப்பிரமணிய முதலியார் அவர்களின் வரவேற்புரையோடு விழாத் தொடங்கியது. திரு அய்யா - சுப்பிரமணிய முதலியாரின் உற்சாகத்தையும், மலர்ந்த முகத்தையும் பார்த்தவர்கள் திருப்பணி அமோகமாக நிறைவேறுமென்பதில் கொஞ்சமும் நம்பிக்கைக் குறைவு கொள்ள இடமே இல்லை.

பின்பு அற நிலைய ஆணையாளர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் திருவள்ளுவர் கோவில் திருப்பணியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்கள்.

ஆணையாளர் பேசிய பின் அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் விரிவான முறையில் அழகாகப் பேசினார்கள்.

திருமயிலை பேயாழ்வார், வாயிலார் நாயனார், திருவள்ளுவர் போன்றோர் தோன்றிய சிறந்த இடம் என்பதையும், ஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கிய பூம்பாவை கதையையும் அமைச்சரவர்கள் கூறிய

போது நம் சைவ வைணவ சமயங்கள் ஓங்கிப் புகழ் பெற்றிருந்த பழைய காலத்துக்கே போய்ச் சேர்ந்து விட்டாற் போன்ற உணர்வு அங்கே கூடி யிருந்தவர்களுக்கு ஏற்பட்டது. திருவள்ளுவர் ஆழ்வார் நாயன்மார்களுடைய காலத்துக்கு முற்பட்டவர் என்பதை விளக்கி வெளிநாடுகளில் பெரும் புலவர்களுக்குக் கோயிலெடுத்துப் போற்றுவது போல் நாமும் நம் நாட்டில் செய்ய வேண்டுமென்றும் தேரழுந்தூரில் கம்பர்மேட்டில் கம்பர் கோயில் கட்டியும், காவிரிப்பூம் பட்டினத்தில் தமிழ்க் கலைகள் பயிற்றும் மாபெரும் கல்லூரி அமைத்தும் நமது பழைமையைப் பாதுகாக்கவேண்டுமென்றும் அமைச்சரவர்கள் பேசியபோது, அங்கே முன்பாக அமர்ந்திருந்த தமிழ்ப் பற்றுடையவர்கள் சபாஷ்போட்டார்கள். சென்ற ஆண்டில் நமது சமய தத்துவங்களைக் கற்பிக்கப் பழனியில் தொடக்கப்பட்ட புதிய முறைக் கல்லூரி பற்றியும், அமைச்சரவர்கள் நினைவுபடுத்திப் பேசினார்கள்.

அடுத்துப் பேசிய தமிழ்ப் பேராசிரியர் வரதராசனார் தாகூரைப் படித்த மேலை நாட்டறிஞர் தாம் வங்காளியாகப் பிறக்கவில்லையே என ஏங்கியது போல் திருவள்ளுவரைப் படித்தவர்கள் தமிழனாகப் பிறக்கவில்லையே என்று ஏங்க வேண்டிய நிலை உண்டாக்க உலக மெங்கும் குறள் நெறியைப் பரப்ப வேண்டு மென்றும் உலக ஞானிகளுள் மூன்றாவது வரிசையில் சிறப்பாக நிற்பவர் வள்ளுவர் என்றும், திருவள்ளுவர் பிறந்த மண்ணிலே நாம் பிறந்திருக்கிறோம் என்பதே பெருமைப்படுவதற்குரியது என்றும் கூறித் திருப்பணிக்கு உதவி புரியுமாறு வேண்டினார்.

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் நமது வள்ளுவர் பின்னைத் தமிழிலிருந்து சில பாடல்களைப் பாடி எல்லோரையும் மகிழச் செய்தார். திரு எஸ். டி. சுந்தரம் அவர்கள் நன்றியுரை கூறிக்கூட்டத்தை முடிக்கப் போகிறார்களோ என்று நினைத்த சமயத்தில் மைக் அருகில் 'அய்யா, அய்யா' என்று பல குரல்கள் ஆர்வத்தோடு சூழ்ந்தன. திமிர்ந்து பார்த்தபோது திருப்பணி நிதிக்குச் 'செக்' அளிப்பவர்கள் 'நான் முந்தி, நீ முந்தி' – என்று முன் வந்து திரு அய்யா சுப்பிரமணிய முதலியாரை வளைத்துக்கொண்டிருந்தார்கள். காபாலீசுவரர் தேவஸ்தானத்தின் சார்பில் அளிக்கப்பட்ட ரூபாய் இரண்டாயிரத்தைத் தொடர்ந்து மணலி திரு இராம கிருஷ்ண முதலியார் அவர்கள் ரூ. ஐயாயிரம் அளித்தார்கள். திருவள்ளுவர் கோயில் தர்ம கர்த்தாக்கள் திருக்குறளின் மேல் தங்களுக்குள்ள பற்றைக் காண்பிக்கும் முறையில் ரூ. 1330 (குறளின் மொத்த எண்ணிக்கை 1330) விதம் சரிசமமாக அளித்து மகிழ்ந்தார்கள். மற்றும் பலர் சிறிதும் பெரிதுமாகத் தொகைகளை அளித்தார்கள். தொகை சிறிதானாலும் பெரிதானாலும் திருவள்ளுவர் மேலே தங்களுக்குள்ள அன்பு பெரிதென்றே எல்லோரும் நிரூபித்தார்கள். போகப் போக நன்கொடைத் தொகைகளை விடக் கொடுத்தவர்கள் பெயரின் தொகை அதிகமாகி விடவே பெயர்களைக் கேட்டு நினைவு வைத்துக்கொள்ள முடியாமற் போய்விட்டது. திருவள்ளுவருடைய அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்தேன். பெயர் நினைவு வைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகமானவர்கள் பக்கத்தில் நின்று செக்கைக் கிழித்துத் தரவும், நன்கொடைப் பெயர்களைப் படித்த அய்யா அவர்கள் களைத்துப் போனாலும் இன்னும் அதிகத் தொகையிற் களைத்துப் போவதற்காக வேகமாகப் படிக்கத் தொடங்கியதும் கண்டு ஆச்சரியப் படுவதற்கு என்னிடம் ஆச்சரியம் தீர்ந்து போய்த் திகைத்தே விட்டேன்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம்
ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்"

என்று 'ஒன்றும் – வேண்டாம்' என்பதையே நீதியாகக் கூறிய திருவள்ளுவருக்குக் 'கொடுத்தே ஆக வேண்டும்' என்பது போல் பிடிவாதமாகக் கொடுத்து மகிழத் தமிழ் மக்கள் தயங்காமல் முன்வருவார்கள் என்பதை இந்த முதல் நாள் நிகழ்ச்சியே காண்பித்தது. ஒருவேளை திருப்பணிக் குழுவினர் இட்டமிட்டிருக்கும் இரண்டு லட்ச ரூபாய்களுக்கும் மேல் 'போதும் போதும்' என்கிற அளவுக்கு உதவிகள் கிடைத்து, 'வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை' – என்ற குறளையே சொல்லி அறிக்கை விட்டு மறுக்கும்படி நேர்ந்தாலும் நேரலாம்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' என்பதைப் பாரதியார் பாடிய அர்த்தத்தில் புரிந்து கொள்ளாமல் தப்பாகப் புரிந்து கொண்டதனாலோ என்னவோ பல பேர் 'திருக்குறளை உலகத்தில் நினைவு வைத்துக் கொண்டு போகட்டும், நமக்கென்ன?' என்று இருந்த நிலை இனிமேல் நிச்சயமாக மாறி விடும். தமிழர்கள் திருக்குறள் விஷயத்திலோ, திருவள்ளுவர் விஷயத்திலோ அடக்கமாக (இருக்கும் இடம் தெரியாமல்) இருக்க வேண்டாம் என்று தயவுசெய்து மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

நமது அறநிலைய அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் போலீஸ் இலாகாவால் உடலையும், ஆலயங்களைச் செப்பனிடும் பணிகளால் ஆன்மாவையும் ஒருங்கே பாதுகாத்து வருகிறார் என்று சொல்லும் புகழுரை பொருத்தமானதென்பதை அவர் நாடெங்கும் தொடங்கி வைக்கும் திருப்பணிகள் விளக்குகின்றன.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள'– என்று திருக்குறளைப் புகழ்ந்து அந்த நாளில் ஒருவர் பாடினார். திருவள்ளுவர் ஆலய விஷயத்தில் இதை வேறு பொருளில் எடுத்துக் கொண்டு, 'அதுதான் எல்லாப் பொருளும் திருக்குறளிலேயே இருக்கிறதே' என்று தங்கள் பொருளைத் தந்து உதவுவதற்குத் தமிழ் மக்கள் தயங்கிவிட வேண்டாம்.

தெய்வப் புலவரின் ஆலயத் திருப்பணிக்குத் தாராளமாக வழங்குங்கள். முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவிலிருந்து திருவள்ளுவர் கோவில் எங்கிருக்கிறது என்று விசாரித்து அலைதைப்படும் நிலை இனிமேல் இருக்காது. 'கல்கி' காரியாலயத்துக்கெதிரே எழும்பூர் இரயில் நிலைய மிருக்கிறதென்றெழுதிய பழம் புகழைப்போல மயிலாப்பூரில் மேற்படி தெரு எங்கிருக்கிறதென்று யாராவது கேட்டால் வள்ளுவர் கோயிலுக்கு அருகில் மயிலாப்பூர் இருக்கிறதென்றுதான் வருங்காலத்தில் சொல்லத் தொடங்கி விடுவார்களோ !

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — இதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சரியமொன்றுமில்லை!

பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவீனப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!

உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது



பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:

[illegible] டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட் [illegible]

அன்பே ஆரமுதே

அத்தியாயம் இருபத்தாறு

தி. ஜானகிராமன்

மகாநாட்டு யாத்ரீகர்களின் யோசனைப்படி விமானத் தளத்துக்குச் செல்லும் நடைக்கு இரு மருங்கிலும் சிறு மலரும் பெரு மலருமாகச் சிரித்து அசைந்து கொண்டிருந்த புல் பத்தையில் ஒரு சாய்வு நாற்காலியில் சற்றுச் சாய்ந்து கொண்டான் ருக்கு. டில்லி விமானம் கிளம்பச் சிறிது நேரமாகுமாம். சென்னை, கல்கத்தா விமானங்கள் புறப்படத் தயாரா யிருந்தன. பம்பாய் விமானம் இரைச்சலுடன் ஓடு பாதையில் சீறிக் கொண்டு ஓடிற்று. ஒரு பெருமூச்சு விட்டான் அவன்.

அனில் ஜோஷி காற்றில் பறந்துவிட்டான். முள்ளை எடுத்தாலும் கொட்டு வாயில் கடுப்பு நீங்காதது போல், அவன் நினைவு இன்னும் இலேசாகத் தொல்லைப் படுத்தியது. இன்பம், இன்பம் என்ற பெயரில் இவ்வளவு அழுக்கு மூட்டைகளை அவன் சுமக்கிறான் என்று அவனை முதல் முதலாகப் பார்க்கிறவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது! கூடை கூடையாகப் பெண்களை வலை போட்டுப் பிடித்தவன் அவன். ஆனால் கடைசியில் கூடையில் மிஞ்சியது கண்ணீரும் பச்சாத்தாபத் துடிப்புக்களும்தான். என்னவோ இது ஒன்றும் முன்கூட்டி யாருக்கும் தெரிவதில்லை. அவன் தோற்றம் அவ்வளவு மரியாதை, கண்ணியம், கௌரவம் நிறைந்தது. அ..த முகத்தின் எதிர்க்க முடியாத களையையும் முதல் குளிர்ச்சியையும், மனம் முழுவதையும் திறந்து கொட்டுவது போன்ற வெகுளிப் பேச்சையும் நம்பி மீள முடியாமல் சிக்கிக்கொண்டவர்கள் எத்தனை பேர்! அவசரப்படுகிற பெண் ஜன்மங்களை, ஆழ்ந்து யோசிப்பதை அலட்சியம் செய்கிற பெண் ஜன்மங்களை அப்படியே வாரிக் கொண்டு போய்விடுவான் அவன். அவ்வளவு அசுர மாயம் அவன் கண், நிறம், நாக்கு எல்லாவற்றிலும் ஆட்சி செய்து சொக்குப்பொடி தூவிக் கொண்டிருந்தது. அவனுக்குக்கூடச் சித்தப்பா முதலில் எச்சரித்தபோது சற்று எரிச்சலாகத்தான் இருந்தது. ஆனால் அவருடைய கண்டிப்பைக் கண்டு தன்னையறியாமல் பணிந்து விட்டது அவன் மனம். அப்படிப் பணியாமல் இருந்திருந்தால்—இப்பொழுது என்னவாக இருப்போம்!..... ரத்து செய்த மனைவியாக! அல்லது அந்தக் கூடையில் துடிக்கும் ஒரு ஜீவனாக! ....அந்த நினைப்பே கசந்தது.



இந்த அசட்டு மூட்டத்திலிருந்து தப்புவதற்காக அவன் எழுந்தான். புல் பத்தையின் அந்தக் கோடியில் இன்னொரு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த ஒரு பெண்மணியுடன் பேச்சுக் கொடுத்தான். பம்பாயிலிருந்து டில்லிக்குப் போகிறவளாம் அவள். பார்ஸி மாதிரி இருந்தது. பேச யாராவது கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருந்தாற் போலிருந்தது; அவள் பதில் சொல்லி உபசாரம் செய்த உற்சாகம். முதல் முதலாக டில்லிக்குப் போகிறாளாம். அவள் தம்பி புதிதாக டில்லியில் வியாபாரம் தொடங்கியிருக்கிறானும் அவன் மனைவிக்கு உடல்நிலை சரியில்லையாம்.

இருவரும் பேச்சில் ஆழ்ந்து விட்டார்கள். டில்லி விமானத்தில் ஏறியதும் இருவரும் சேர்ந்தே உட்கார்ந்து கொண்டார்கள். வாய் வலிக்கிறவரை பேசினாள் அந்த மிஸஸ் வாடியா. அவளே களைத்துப் போகிற வரையில் பேசினாள்.



சென்னை செருகா பிளவர் மில்லின் இரண்டாவது தொழிற்சாலையை நமது முதன் மந்திரி திரு காமராஜர் தொடங்கி வைத்தார். இவ் விழாவுக்குத் தொழில் மந்திரி திரு ஆர். வெங்கடராமன் தலைமை வகித்தார். இருவருக்கும் அருகிலே செருகா பிளவர் மில்லின் அதிபர் திரு மருதைப் பிள்ளையைக் காணலாம்.

முடிவில்லாத பயணம் போவது போல் அந்தரத்தில் இரைச்சல் போட்டுக் கொண்டேயிருந்தது விமானம். சில சமயம் அந்தரத்தில் நிற்பது போலிருந்தது. கீழே நழுவியது. மேலே உயர்ந்தது. தூக்கம் வராத ருக்குவுக்குத் திமர் என்று வாடியா பேசுவதை நிறுத்தி, இலேசாகக் குறட்டை விடுவது கேட்டது. பேர் தெரியாத பயம் மறுபடியும் அவளைப் பிடித்துக் கொண்டது. 'ராம் ராம் ராம்' என்று அடிமனம் முனகிற்று. ராம ராம' என்று சொல்வதே அவளுக்கு வழக்கமில்லை. ராமன் கிருஷ்ணன், முருகன், பரமேசுவரன் - என்று எந்தக் குலதெய்வமும் இல்லை அவளுக்கு; இஷ்ட தெய்வமும் இல்லை. விவரம் தெரியத் தொடங்கிய வயதில் கிராமத்து மாந்தோப்பு, புளியந்தோப்பு, வயல் கரைகளெல்லாம் சுற்றி அலையும்போது ஊமைக் குளத்தின் கரையில் வெய்யிலிலும் மழையிலும், பனியிலும் நனைந்து கொண்டே முழங்கால் வரையில் நிலத்தில் பதிந்து கிடந்த ஒரு கருங்கல் பெண் விக்கிரகம் நிற்பதைக் கண்டிருக்கிருள். பழைய காலத்துக் கோயில் இருந்த இடம் அது. அந்தக் கோயில் எப்பொழுது இடிந்ததோ? கோவில் இருந்த சுவடே மறைந்து விட்டது. இருந்தது என்பதற்கு அடையாளம் விக்கிரகம் ஒன்று தான். இடுப்பை வளைத்து, கொசுவமும் மடிப்பான சேலையுடன் நின்ற பிம்பம் அதிக நகை நகாசுகள் இன்றிப் பூர்ண அழகுடன் இளமையின் உறுதியும் கட்டும் பொங்கித் தெறிக்க நின்றது. ஒரு நாள் குளிக்கப் போகையில், தாயாரிடம் கேட்டபோது, 'அது உம்மாச்சி' என்ருள் தாயார். 'அது நல்ல புத்தி கொடுக்கும், காப்பாற்றும்' என்று பிறகு சொன்ருள். இரவில் இருள் பயமுறுத்தும் போது 'உம்மாச்சியை நினைச்சுக்கோ' என்று அம்மா சொன்ன பொழுதெல்லாம் இந்தக் கால் புதைந்த குளத்தங்கரை உம்மாச்சியைத் தான் நினைத்துக் கொள்வாள் ருக்மிணி.

என்னை இறுக்கி முடியவுடன் அவள் புருவத்திடையே காலைப் புதைத்துக் கொண்டு நிற்கும் அது அந்த விக்கிரகத்தை ஏன் என்று கேட்பாரில்லை. அந்த நடக்காத கல்யாணம் நடக்காது போய் ஒரு வருஷம் வரைக்கும் அது அங்கேயே தான் கிடந்தது. திடீரென்று ஒரு நாள் கண்டுபிடித்து அதைப் பட்டணத்துக்குத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். தாசில்தார் வந்து பட்டாமணியத்தை வைத்துக் கொண்டு அதைப் பெயர்த்து ஒரு வண்டியில் போட்டுக் கொண்டு போய், ரயிலில் ஏற்றிப் பட்டணத்துக்கு அனுப்பி விட்டாராம்.


கடவுள், சாமி, என்ற வார்த்தையைக் கேட்கும் பொழுதெல்லாம் அந்தக் கால் இல்லாத உம்மாச்சியைத் தவிர வேறு எந்த உருவமும் அவள் நினைவுக்கு வருவதில்லை. ருக்கு அதிகமாகப் பிரார்த்தனை செய்வதில்லை. படிப்பதிலும், வேலை செய்வதிலும், களைத்துத் தூங்குவதிலுமே அவளுக்குப் பெருங்காலமும் சென்றுகொண்டிருந்தது. எப்பொழுதாவது கோயிலுக்குப் போகும்போதெல்லாம் எதிரே பார்க்கும் விக்கிரகத்தை ஒதுக்கி விட்டு, அந்தக் கண்கள் அந்த உம்மாச்சியைத் தான் வைத்துப் பார்க்கும். அவளுக்கே இது வேடிக்கையாக இருந்தது. 'கடவுள் அதைச் செய்வார். எதையும் செய்வார்' என்ற அவருடைய சர்வ வல்லமை கூட அவளுக்கு மனத்தில் பதிந்ததே கிடையாது. காரணம், தாயாரும் கவனிக்காமல், காலைக்கூட எடுக்க முடியாமல் அந்த உம்மாச்சி வருடக்கணக்கில் குளக்கரை மேட்டிலேயே நின்ற நிலை

தான். கடைசியில் அங்கும் நிலைத்து நிற்க முடியாமல் யாராலோ அது தூக்இச் செல்லப்பட்டு விட்டதும், ருக்குவுக்குக் கடவுள் எதையும் பிடிவாதமாகச் செய்ய முடியும், எதையும் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை வளராமல் அப்படியே தேங்கித் தேய்ந்தாற் போலாகி விட்டது. ஏதாவது ஒரு நாள் கடவுளை நினைக்க வேண்டும் பால் தோன்றினால் அவள் அந்த முகத்தை நினைப்பாள். அந்த முகத்தின் அருளையும் அழகையும் பார்த்துக் கொண்டே இருப்பாள். சில சமயம் வெளிச்சத்துக்கிடையே அது அப்படியே தெளிவாக முப்பது விநாடி அறுபது விநாடிகூட அசைவற்றுக் கண்முன் நிற்கும். தான் பார்க்கிறோம் என்ற உணர்வில்லாமல் அதுவாகவே தான் ஆகி விட்டாற் போலிருக்கும் அவளுக்கு. அந்த முப்பது விநாடிகளும் பல வருஷங்கள் மாதிரி தோன்றும். பல ஆயிரம் வருஷங்கள் போலவும் தோன்றும். இல்லை. அதைக் காலம் என்றுகூடச் சொல்ல முடியாது. ஏதோ இருக்கும். அவ்வளவுதான். வருஷத்துக்கு நாலைந்து தடவைகள் இந்த நிகழ்ச்சியை அவள் பார்க்கிற வழக்கம். ஆனால் இதில் பிரார்த்தனையோ பிச்சையோ, அது தன்னைக் காப்பதாகவோ— எதுவுமே அவள் மனத்தில் எழுந்ததில்லை.

இப்பொழுது 'ராம் ராம்' என்று அவள் மனம் முனகியது. எதற்கெடுத்தாலும் அதைத் தான் சொல்லச் சொல்வாராம் அனந்தசாமி. நாகம்மாள் சொன்னாள். இப்போது தன்னையறியாமல் அந்த ராம நாமாவைத்தான் அவள் மனம் முணுமுணுத்தது. ஆனால் அதில் கோதண்டமோ, கிரீடமோ, ஆண்பிள்ளையோ இல்லை. கால் புதைந்த உம்மாச்சிதான் தெரிந்தது.

விமானம் அதிர்ந்து அதிர்ந்து உயரம் இழந்து தழுவும்போதும் திடீரென்று மேலே ஏறும் போதும், தன் வசமில்லாமல் தவிப்பது போல் உலுங்கிப் பரபரத்த போதும் உம்மாச்சியின் இடையை அவள் நினைவு இறுகப் பிடித்துக் கொண்டது. அதன் காலைத் தழுவிக் கொண்டது. 'ராம் ராம்' என்று வாய் மட்டும் முனகிக் கொண்டிருந்தது.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வானத்தில் இலேசாகச் சிவப்புத் தெரிந்தது. 'மோதி பார்'க்கின் விளக்குகள் வேகமாக அவளை நோக்கிப் பாயும் போதுகூட, உம்மாச்சியின் இடையைப் பிடித்த பிடி தளரவில்லை. பெல்டைப் போட்டுக் கொள்ளென்று



விளக்கு எரிந்தது. அரை நிமிஷத்துக்குள் விமானம் தக்கென்று தரை தட்டி ஓடிற்று.

அனந்தசாமி இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார் என்று கேட்டுக் கொண்டே அவள் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள்.

சர்க்கரை மகாநாட்டுக்காரரும் மற்றவர்களும் விடுகிற வழியாக இல்லை. அவளை வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன் என்றார்கள்.

"பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்குச் சொந்த ஊர் டில்லிதான். கால் நூற்றாண்டு இதில் வளர்ந்தவள் நான். இந்த ஊர் மூலை முடுக்கெல்லாம் நன்றாகத் தெரியும் எனக்கு" என்றாள் அவள்.

"சுப்புசாமி பத்திரமாக உங்களைக் கொண்டு சேர்க்கச் சொல்லியிருக்கிறாரே அம்மா!"

"அவருக்குப் பயம். அல்லாவும், ஈசுவரனும் சண்டை போட்டுக் கொண்டு ரத்தக் காட்டேரிகளாக அலைந்தார்களே, அப்பொழுதெல்லாம் நான் இங்குதான் இருந்தேன். கல்லூரிக்குப் போய்க் கொண்டிருந்தேன்."

"சர்க்கரைக்காக மகாநாடுகள் நடக்காத நாட்களில் என்று சொல்கிறீர்கள்" என்றார் சர்க்கரை மகாநாட்டுக்காரர். ருக்மிணி சிரித்தாள். அவள் சிரிக்கும் போதே ஓடிப் போய் ஒரு டாக்ஸியைப் பேசி அழைத்து வந்து அவளை ஏற்றிவிட்டு விடைபெற்றுக் கொண்டார் அவர். (தொடரும்)



சுண்டுவிரல்

ரா.வீ

பொழுது விடிய இன்னும் நேரமிருந்தது. அஸ்தமிக்கும் சந்திரனின் ஒளி குன்றிய நிலவு இங்குமங்கும் பரந்து கிடந்த முட்புதர்களிலும் மரங்களிலும் களைப் பாறிக் கொண்டிருந்தது. இல்லாமான வர்களின் பகுதியிலிருந்து இப்பொழுது தான் கோழி கூவியது. அன்றுதான் ஆடி மாத முதல் மழைகூடப் பெய்திருந்தது. பூமியிலிருந்து இலேசாக மண் வாசனை வந்து கொண்டிருந்தது.

முக்லிகான் தோளில் கலப்பையும், கையில் தலைக் கயிறுமாக ஜோடி மாடுகளை ஓட்டிக் கொண்டு வயற்புறம் போய்க் கொண்டிருந்தான். வயல்கள் வழியே போகும்போது பூமியிலிருந்து எழுந்த மண் மணத்தை முகர்ந்து முக்லிகான் மகிழ்ச்சிக் கடல் ஆடிக் கொண்டிருந்தான். அவனால் அப்பொழுது உரக்கத் தெம்மாங்கு பாடாமல் இருக்க முடியவில்லை. அமைதி நிலவிய அந்தச் சூழ்நிலையிலே அவனது குரல் இனிமையாக ஒலித்தது. அவனது குரல் எதிரொலிப்பதே போல், அடர்ந்த மாந்தோப்பிலிருந்து பட்சிகள் கலகலவெனக் குரல் கொடுத்தன.

அவன் தன் வயல்களுக்குப் போக வேண்டு மென்றால், அந்தப் பருத்த ஆலமரத்தடி வழியாகத்தான் போக வேண்டும். அதன் கீழே தான் கிராம தேவதை 'பேச்சி' அம்மனின் சிலை வைக்கப்பட்டிருந்தது. தொலைவிலிருந்து பார்க்கும்போது அந்த ஆலமரம் இருள் மலையாகக் காட்சியளித்தது. அதன் இன்னொரு புறத்தில் கிராமத்தின் இடுகாடு இருந்தது. அங்கே ஏதோ ஒரு சிதையில் தீ தன் நாக்கை நீட்டி எரிந்து கொண்டிருந்தது. முக்னிகானுக்கும் ஹிந்துக்களின் நம்பிக்கைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென்றாலும், ஆலமரத்தை நெருங்க நெருங்க அவனையறியாமலே அவன் உடலில் இனந்தெரியாத ஒரு வித அச்சம் இடம்கொள்ளலாயிற்று. நாற்புறமும் மரண அமைதி சூழ்ந்திருக்கவே, அவன் பயம் பன்மடங்காகப் பெருகியது.

இரவு முழுதும் இங்கும் அங்கும் அலைந்து திரிந்து விட்டுப் பொழுது விடியும் நேரத்தில், இருள் பிரிவதற்கு முன்பாகப் பேய்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பும் என்று அவன் பின்னைப் பிராயத்தில் கேள்விப்பட்டிருந்தான். அந்த நினைவு அவன் மூளையைத் தாக்கியதும் அவன் வெலவெலத்துவிட்டான். அவன் இதயத்தை யாரோ இறுகப் பிடித்துக் கொண்டு விட்டது போல அவனுக்குத் தோன்றியது. தன் பயத்தைப் போக்கிக் கொள்வதற்காக அவன் ஒரு மாட்டின் வாலைப் பற்றிக் கொண்டான். ஏனெனில், மாட்டின் அருகில் இருந்தாலும் அல்லது மாட்டின் வாலைப் பிடித்துக் கொண்டாலும் பேய் பிசாசுகள் அண்டுவதில்லை என்று அவன் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருந்தான்.

ஆனால் ஆலமரத்தை நெருங்கியதும், அவன் பார்வை ஆலமரத்துக்கடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த இரு கரிய நிழலுருவங்களின் மீது விழுந்தது. அவற்றைக் கண்டதும் அவன் அலறிப் புடைத்துக் கொண்டு கூச்சலிட நினைத்தான். பிறகு எப்படியோ தன்னைச் சமாளித்து அடக்கிக் கொண்டான். அவன் உடல் வியர்த்து விறுவிறுத்து விட்டது. தொண்டை உலர்ந்து விட்டது. உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை ஒரே பேயாட்டம் ஆடத் தொடங்கி விட்டது. 'இன்று நாம் பேய் முகத்தில் விழித்தோம். வகையாக மாட்டிக் கொண்டும் விட்டோம்' என்றே அவன் தீர்மானித்து விட்டான்.

இதற்குள் அவ்விரு கரிய நிழல் உருவங்களும் தங்களுக்குள் மெதுவான குரலில் ஏதோ பேசிக் கொள்ளலாயின. 'இன்று வரை நாம் பேய்கள் பேசிக் கேட்டதில்லையே! அரிய தருணம் கிட்டியிருக்கும்போது கேட்டால் என்ன?' என்ற ஆசை அத்தனை அச்சத்துக்கும் இடையே முக்னிகானின் மனத்தில் எழுந்தது: இறுகக் கண்களை மூடிக் கொண்டு காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

''என்ன, அவன் தன் இடது கைச் சுண்டு விரலைத் தரச் சம்மதித்து விட்டானா?'' என்று கேட்டது முதல் உருவம்.

''ஆம், எப்படியோ சம்மதித்துவிட்டான்'' என்று விடையளித்தது இரண்டாவது குரல்.

''அதற்குப் பிரதியாக அவன் எத்தனை கேட்கிறான்?'' என்று முதல் உருவம் கேட்டது.

''பத்தாயிரம்!'' என்று பதிலளித்தது இரண்டாவது உருவம்.

''அடே, அவன் விரலுக்கு என்ன அவ்வளவு கிராக்கி? அவனே இத்தனை பெற மாட்டானே'' என்று முணு முணுத்தது முதல் உருவம்.

''நான் என்ன செய்வது? அவன் ஆள் கெட்டி என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! இதற்கும் கீழ் சம்மதிக்க முடியாது என்று அவன் தீர்மானமாகச் சொல்லி விட்டான்.''

''சரி, அப்படியானால் இந்தா, ஆயிரம் முன் பணம். அவனிடம் இதைக் கொடுத்து மீதியைக் காரியம் முடிந்ததும் தருவதாகச் சொல். உன்னையும் அப்புறம் கவனிக்கிறேன்.''

இவ்வாறு கூறிவிட்டு முதல் உருவம் வெகு வேகமாக நடந்து மாந்தோப்புக்குள் சென்று மறைந்தது.



இரண்டாவது உருவம் இடுகாட்டுக்கு இடையுள்ள வழியே சென்று மறைந்தது.

இந்தப் பேச்சைக் கேட்டபின் முக்லிகானின் மனத்தில் 'பேய் பிசாசுகள் உண்மையில் மனித மாமிசத்தைத் தின்கின்றன. மனிதனின் இடது கைச் சுண்டுவிரல் என்றால் அவற்றுக்கு ரொம்பப் பிடிக்கும் போலும்' என்ற எண்ணம் நம்பிக்கையாக உருப்பெறலாயிற்று.

இவ்விரு நிழல் உருவங்களும் யார்? ஏதாவது பெரிய பிசாசின் சிறிய ஏஜெண்டுகளாக இருக்கலாமோ? தங்களது எசமானப் 'பேய்'க்காக மனிதனின் சுண்டுவிரலைத் தேடி வந்திருக்குமோ?— இப்படி எண்ணியவனின் மூளையிலே இல்லாத பல எண்ணங்கள் எழுந்தன. எனவே வயலே உழும் வேலையை ஒத்திப் போட்டுவிட்டு, கலப்பையும் கையுமாக மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்கே திரும்பி விட்டான்.

வீட்டுக்கு வந்தவன் நேரே கிராமத்து மந்திரவாதியிடம் சென்று நிகழ்ந்ததனைத்தையும் சொன்னான். மந்திரவாதி ஒரு தாயத்தைக் கொடுத்து, ''இதைக் குதிரை வால் மயிரில் சுற்றி வலது கைப் புஜத்தில் கட்டிக்கொள். அப்புறம் பேய் பிசாசு உன்னைத் துன்புறுத்தாது'' என்றான்.

மறு நாள் காலே, அன்று மாலே கிராமத்து நெல் பட்டறைக்கருகில் ஒரு பெருங்கூட்டம் நடைபெறவிருக்கிறது என்றும், நகர்ப்புறத்திலிருந்து வந்திருக்கும் குடியானவர்கள் தலைவர் ஒருவர் பேசப் போகிறார் என்றும் அவன் கேள்விப்பட்டான். முக்லிகான் அன்று வரை எந்தத் தலைவரையும் தரிசித்ததில்லை. அதனால் வீட்டை விட்டுச் சீக்கிரமே புறப்பட்டான். எல்லாருக்கும் முன்னால் சென்று மேடைக்கருகில் ஓர் இடம் தேடி அமர்ந்தான். குறித்த நேரத்தில் வெள்ளையுடை அணிந்த ஒல்லியான ஒரு வாலிபன் முன்னே வருவதையும் அவனுக்குப் பின்னால் 'வாழ்க' கோஷம் இட்டுக்கொண்டு பலர் வருவதையும் அவன் கண்டான். வந்த இளைஞன் நேரே மேடைக்குச் சென்று நின்றான். பிறகு கம்பீரமாக மக்களைச் சுற்றிப் பார்வையை ஓட்டினான், தன் செருக்குப் பார்வையினாலேயே மக்களின் மனத்தை ஈர்த்து விடுபவன் போல. பிறகுதான் தன் பேச்சைத் தொடங்கினான்:

''தோழர்களே! குடியானவர்களும் கூலிகளும்தான் நம் நாட்டின் முதுகெலும்புகள். பல நூற்றாண்டுகளாக நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு வருகிறார்கள். காடுகளைத் திருத்தியவர்கள் அவர்கள். பெரும் பாறைகளை உடைத்துப் பதப்படுத்தியவர்கள் அவர்கள். சாலைகள் போட்டவர்கள் அவர்கள். பெருந் தொழிற்சாலைகளை நிறுவியவர்கள் அவர்கள். நீரிலே பெரும் கப்பல்களை மிதக்க விட்டவர்களும், வானத்திலே விமானத்தைப் பறக்க விட்டவர்களும்கூட அவர்களே. இத்தனை அரும்பெருஞ் செயல் ஆற்றிய பின்னும் அவர்கள் அதிர்ஷ்டக் கட்டைகளாக இருட்சிறையிலே அடைந்து கிடக்கிறார்கள். மடிந்து சாகிறார்கள். இதை நீங்கள் கண்கூடாகக் காண்கிறீர்கள். ஏழைமை, அறியாமை, இல்லாமை என்னும் சகதியில் சிக்கி அவர்கள் தவிக்கிறார்கள். மக்கள் அவர்களை ஏனமாகப் பார்க்கிறார்கள். அந்தப் பார்வையைக் கொண்டே அவர்கள் மீது வெறுப்பை உமிழ்கிறார்கள். அவர்கள் என்ன குற்றம் செய்து விட்டார்கள் அப்படி? காரணம் தெளிவானது. உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரிந்ததே.''

இதன் மத்தியில் கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து, ''சரியாகச் சொன்னீர்கள், சரியாகச் சொன்னீர்கள்!'' என்று ஒரு குரல் உரக்க வந்தது.

''இக்கஷ்டங்களிலிருந்து விடுதலை வேண்டினால் அதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. அதற்கு நீங்கள் அனைவரும் ஒற்றுமை என்னும் தளையில் கட்டுற வேண்டும். நெஞ்சுரமும் உற்சாகமும் பெற்று உங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளச் சலியாது உழைக்க வேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்கென்று இவ்வுலகில் ஒருசொர்க்கம் உருவாகமுடியும்.''

இந்தப் பேச்சில் மதிமயங்கிக் கூட்டம் உரக்கக் கூச்சலிட்டது. ''நாங்கள் அனைவரும் ஒன்று கூடுவோம். எங்கள் உரிமையை நிலைநாட்டப் போராடுவோம். எங்களுக்குத் தீங்கு இழைப்பவர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்போம்'' என்று கூறினர்.

''அதுதான் சரியான காரியம். இப்பொழுது நீங்கள் அமைதியாக இருங்கள். நாளை இரண்டு மைல் நீளமுள்ள குடியானவர் ஊர்வலம் புறப்பட இருக்கிறது. குடியானவர்கள் தங்கள் நிலையை உணர்ந்து விட்டார்கள். தங்கள் உரிமையை அடைந்தே தீருவார்கள் என்று நாம் அதில் தெளிவாகக் காட்டி விடுவோம். எங்களையே ஏமாற்றிப் பறித்து, எங்கள் உடைமையையே இன்று எங்களை....நன்று சகோதரர்களே, நன்று. நாளைய பெரும் ஊர்வலத்துக்குச் சில தொண்டர்கள் நமக்குத் தேவை. நம் சில நண்பர்கள் உங்களிடம் காகிதம் எடுத்துக்கொண்டு



வருகிறார்கள். தொண்டராய்ப் பணியாற்ற விரும்புகிறவர்கள் அதில் கையெழுத்திடுங்கள். தெரியாதவர்கள் பெரு விரல் குறியிடுங்கள்.''

தலைவர் பெரு விரலைப் பற்றிக் குறிப்பிட்டபொழுது முக்கனிகாலுக்குச் கண்டு விரல் நினைவு வந்தது. 'கண்டுவிரல் தரச் சம்மதித்தவனுக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு அளிப்பதாகப் பேய் சொன்னதே! அந்தப் பேய் அசைப்பில் பார்த்தால் யாரைப் போல் இருந்தது? அவ்வூர் ஜமீன்தாரைப் போலத்தானே?' கொடுமையே உருவான ஜமீன்தாரின் கனத்த அதிகாரக் குரலை அவன் கேட்டிருந்தான். ஜமீன்தாருக்குக் கட்ட வேண்டிய வரிப் பணத்தைக் காலத்தில் கட்ட முடியாமற் போகவே, அக்குற்றத்துக்காக அவனை இழுத்துப் போய் ஓர் இருட்டறையில் அடைத்து விட்டார்கள். அடிக்கிற அடியில் ஜமீன்தார் எலும்பை ஒடித்து நொறுக்கிப் போடுவார் என்று அவன் கேள்விப்பட்டிருந்தானே ஒழிய, மனித மாமிசத்தைப் புசிப்பார் என்று கேள்விப்பட்டதில்லை. 'ஒருவேளை பேய் மனிதர்களை ஏமாற்ற ஜமீன்தார் வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்குமோ? எதற்காக அந்தப் பேய் ஜமீன்தார் வேஷம் போட்டிருக்க வேண்டும்? யாருடைய கண்டுவிரலுக்கு ஆசைப்பட்டு அப்படி ஏராளமான ரூபாயைத் தோற்க அது முற்பட்டிருக்க வேண்டும்? ஒரு கண்டு விரலுக்கா அத்தனை ரூபாய்? அதனால் அதற்கு என்ன லாபம்? அல்லது ஜமீன்தார் தான் ஒரு வேளை பேய்......' யோசனை செய்து அவன் சிக்கலில் உழன்று கொண்டிருக்கும் பொழுதே தலைவர் பேசி முடித்து விட்டார்.

தலைவர் பேசி ஒரு நிமிடம்கூட ஆகியிராது. கிராமத்துப் பூசாரி எழுந்தார். ''தோழர்களே! நான் விசேஷமாக ஒன்றும் கூற வரவில்லை. ராமத்தைக் காக்கும் தெய்வமான பேச்சி ஆயியின் கட்டளையைத் தெரிவிக்கவே உங்கள் முன் எழுந்துள்ளேன். அவளே என் கனவில் தோன்றி, உங்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்குமாறு ஆணையிட்டிருக்கிறாள். உங்களுக்குக் கேட்க விருப்பம் இருந்தால் கூறுகிறேன். இல்லாவிட்டால் உட்கார்ந்து விடுகிறேன். உங்கள் நேரத்தை வீணாக்க எனக்கு உரிமை கிடையாது. அதை நான் விரும்பவும் இல்லை.''

பூசாரி இதைக் கூறி விட்டு மௌனமானார். தமது இந்தப் பேச்சுக்கு மக்கள் எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுக்கிறாகள் என்பதை அறியக் கூட்டத்தில் தமது பறவைப் பார்வையை வட்டமிட்டுப் பறக்கச் செய்தார். கூட்டத்திலிருந்து பெரும்பான்மையினர் கூச்சலிட்டனர். ''சொல்லுங்கள், சொல்லுங்கள். அவளே எங்களுக்கு என்ன கட்டளையிட்டிருக்கிறாள்? அவளுக்காக நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டனர்.

பூசாரி மீண்டும் ஆவேசமாகப் பேசினார்: ''தோழர்களே! உங்களுக்குத் தெரியும், நாம் இன்று நேற்றல்ல; அப்பன் பாட்டன் காலத்திலிருந்து,— ஏன், அதற்கும்கூட முன்னோர் காலத்திலிருந்து,— தர்மத்தின் தெய்விகக் கட்டளையைத் தலை மேல் தாங்கி வந்திருக்கிறோம். நீங்கள் இவ் விஷயத்தை அறியாதவர்களல்ல. மக்களின் மேன்மை, நன்மை முதலியவைகளை ஆண்டவன் தம் பொறுப்பாக ஏற்று நம்மைக் காத்து ரட்சிக்கிறார். தாமே நேரில் கவனிக்க முடியாத விஷயங்களைத் தமது பிரதிநிதிகளாக அரசர்கள், பேரரசர்கள், ஜமீன்தார்கள் ஆகியவர்களைப் படைத்து அவர்கள் மூலம் கவனிக்கிறார். எனவே ஆண்டவனின் உருவமான அவர்களது ஆணையை மீறுவது ஆண்டவனின் ஆணையையே அவமதிப்பதாக ஆகும். நாம் துரோகம் புரிந்து, கலகம் செய்து ஆண்டவனின் இவ்வுருவங்களுக்குத் தீங்கு விளைவிப்போமானால், இந்த வானம் இடிந்து விழுந்துவிடும், பூமி பிளந்து விடும். மக்களனைவரும் ஆண்டவனின் ஆறாக் கோபத்துக்கு இலக்காக நேரிடும். அவளே பேச்சி ஆயி எனக்குக் கனவில் தரிசனம் தந்து இதே கட்டளையைக் கூறி எச்சரிக்கை செய்திருக்கிறாள். நீங்கள் எல்லாரும் ஒன்று கூடி ஜமீன்தாரை விரோதித்துக் கொண்டால் அவள் கோபமுற்றுக் கொதித்து, பஞ்சம், வெள்ளம், வைசூரி ஆகியவற்றை ஏவிக் கிராமத்தைப் பூண்டோடு அழித்துவிடுவாளாம்.''

இடையே இரண்டொருவர் எழுந்து, ''இதெல்லாம் வெறும் பிதற்றல் ; சுத்தப் பொய்'' என்று கத்தினர்.

''இல்லை, நண்பர்களே, இல்லை! உங்கள் தார்மிகக் காரியங்களையும் நம்பிக்கைகளையும் காப்பாற்ற வேண்டியவன் நான். உங்கள் நலனுக்கும், உங்கள் குடும்ப மேன்மைக்கும் நான் ஆண்டவனை எப்பொழுதுமே வேண்டிக் கொண்டிருக்கிறேன். பேச்சி ஆயி உங்களிடம் முன்பிருந்தே கோபமாயிருக்கிறாள்.

அறிமுகப்படுத்துகிறோம்...

பாமாலிவ்
லவண்டர் டால்க்

பெருமிதமும்... வசீகரமும் தரும் பிரசித்தி பெற்ற லவண்டரின் நறுமணம் இப்பொழுது உங்களுக்குப் பிடித்தமான பாமாலிவ் டால்க் மூலம் கிடைக்கிறது. இந்த மிக நுண்ணிய சேர்த்தியான டால்க் உங்கள் சருமத்தில் பரவி நாள்முழுவதும் நீடித்திருந்து, உங்களைப் புத்துணர்ச்சியுடனும் பரிமள அழகுடனும் வைத்திருக்கும் சேர்த்தியை, நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்.



டால்கம் பவுடர்

ஏனெனில் நீங்கள் அவளது உண்மை பக்தரான ஜமீன்தார் மீது உங்கள் மனத்திலுள் தவறான அபிப்பிராயம் கொண்டு விட்டீர்கள். அதனால் அன்னையை மகிழ்விப்பதற்காகவும், உங்களை அவளது கோபத்திலிருந்து காப்பதற்காகவும் நான் என் உடலிலிருந்து ஏதாவது அங்கத்தை அவளுக்குக் காணிக்கை செலுத்துவதாக— அதுவும் இப்பொழுதே கொடுத்து விடுவதாகத் தீர்மானித்து விட்டேன். ஏனெனில் இனி அன்னை ரத்த பலி வாங்கிக் கொண்ட பின்னரே தான் சாந்தமடைவாள். ஆறாக் கோபம் கொண்ட அவள் இலேசில் அமைதியுற மாட்டாள். காரணம், அவள் கோபத்தை நீங்கள் ரொம்ப ரொம்பக் கிளறி விட்டிருக்கிறீர்கள்!''

இதைக் கூறிப் பூசாரி ஒரு கூரிய கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டார். எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே தமது இடது கைச் சுண்டு விரலை அரிந்து விட்டார். உடனே துடிக்கும் அந்தச் சுண்டு விரலைக் கையில் எடுத்துக் கொண்டு ஏதோ மந்திரம் சொல்ல ஆரம்பித்தார். கூடியிருந்தவர்களையும் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொண்டார். எல்லாரும் மந்திரவசப்பட்டவர்கள்போலத் தாமாகத் தலைகுனிந்து பயத்தோடு பிரார்த்தனை செய்யலானார்கள்.

''எங்கே போய்விட்டான் அந்த நகர்ப்புறத் தலைவன்? பிடித்து நொறுக்குங்களடா அவனை! ஒவ்வொரு தடவையும் ஏதாவதொரு உருவத்தைச் சாது போல எடுத்து வந்து நம்மைக் கெடுக்கப் பார்க்கிறான். தீய வழியில் செல்லத் தூண்டுகிறான். இந்தத் தடவை அவனுக்குச் சரியாகப் பாடம் கற்பிக்க வேண்டும். இனி ஒரு முறை அவன் நம் கிராமத்துக்குள் அடி எடுத்து வைக்கக் கூடாது. அப்படித் தீர்த்துக் கட்டுங்கள்!'' என்று யாரோ ஒருவன் உரக்கக் கூவினான்.

இதைக் கேட்டதும் மக்கள் அந்தத் தலைவனை நோக்கிப் புலியெனச் சீறிப் பாய்ந்தனர். 'அடி, கொல்லு, விடாதே' என்று நாற்புறமிருந்தும் கூச்சல்கள் எழும்பின.

இதற்குள் ஜமீன்தாரே அங்கு தோன்றினார். அவர் குதிரையிலிருந்து இறங்கிப் பூசாரியையும் கூடியிருந்த மக்களையும் வணங்கி விட்டு மிகவும் நயமான குரலில் கூறினார்:

''நான் என் குடிபடைகளைக் காக்கும் ஊழியன். என் மக்கள் ஏதாவது செய்ய விரும்பினால், சாடைமாடையாகச் சொன்னால்கூடப் போதும், நான் உடனே நிறைவேற்றி வைக்கச் சித்தமாயிருக்கிறேன். நகரத்திலிருந்து வந்துள்ள தலைவர் மனப் பக்குவமில்லாதவர். அவரை நீங்கள் மறந்து விடுங்கள். நம் நாடு புத்தரும் காந்தியடிகளும் வாழ்ந்த நாடு. எதிரிகளையும் துரோகிகளையும் மன்னிக்குமாறு கூறியுள்ள பெரியார்கள் பிறந்த நாடு. வெறுப்பதை விட்டு விட்டு அன்பு செலுத்துவதை அவர்கள் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள். நாம் செய்த பெரும் பாக்கியம் என்னவெனில், பேச்சி ஆயி மாபெரும் ஆபத்திலிருந்து நம் அனைவரையும் காப்பாற்றி விட்டாள். நான் அவளுக்கு ஒரு பெரிய கோயில் எழுப்பப் போகிறேன். அவளெதிரே தொடர்ந்து மூன்று நாட்கள் அகண்ட பஜனைக்கு ஏற்பாடு செய்வதாகவும் தீர்மானித்துள்ளேன். இந்த மூன்று நாட்களும் நீங்கள் அனைவரும் தேவியின் பிரசாதத்தைப் பெற மண்டபத்தில் கூட வேண்டும்.''

கிராமத்தார்களின் இருதயம், தங்களது தாராள மனம் படைத்த, விநயமே உருவான, தர்மத்தையே உயிர் நாடியாகக் கொண்ட ஜமீன்தாரிடம் பக்தி, மரியாதை, சிரத்தை ஆகிய உணர்ச்சிகளால் நிறைந்து விட்டது. இப்படிப்பட்ட ஜமீன்தார் கிடைத்தது தங்கள் பாக்கியம் என்றே அவர்கள் எண்ணி மகிழ்ந்தார்கள்.

ஆனால் மூக்னிகான் மட்டும் இதையெல்லாம் பார்த்து வியந்து கொண்டிருந்தான். சுண்டு விரலின் இந்த ரகசியத்தைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அவன் சிக்கலிலே உழன்று தவித்தானே தவிர, எதுவுமே அவனுக்கு விளங்கவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வித்தை அவனுக்கு வரவில்லை என்றாலும், சுண்டு விரலுக்கும் பேச்சி கோயில் பூசாரிக்கும், பத்தாயிரம் ரூபாய்க்கும் பலே கைகாரரான ஜமீன்தாருக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்றே தோன்றியது.

—ஸ்ரீ சசிராவுத் ராய் எழுதிய ஒரியாக் கதை

சுதந்திர நிதி

20—8—61 லிருந்து 15—9—61 வரை


திருச்சி சுதந்திரக் கட்சி இளைஞர் முன்னணிப் பொதுக்கூட்டத்தில் வரவு	27	69
ஜி. பாலசந்திரன்	10	00
ஜெ. எஸ். ஜி. கிருஷ்ணன்	10	00
வி. வெங்கடராமன்	10	00
வி. ஆர். மூர்த்தி	10	00
எம். எஸ். தத்தார்	5	00
கே. ஆர். அசுந்தி	5	00
என். கணபதிராமன்	1	00
ஸ்ரீமதி பாவா	5	00
கே. எஸ். ரங்கநாதய்யர்	2	00
எம். துரைசாமியும் ஜயலக்ஷ்மியும்	1	08
டாக்டர் கே. ராமச்சந்திரன்	10	00
எம். விசுவநாதன்	25	00
கே. ஆர். நாராயணன்	2	00
ஓர் அன்பர்	20	00
டாக்டர் ஸ்ரீஹரி	50	00
ஜி. பரிபூர்ண மங்கையர்க்கரசி	1	00
10-1-61 முதல் 19-8-61 முடிய	7772	15
ரூ.	7966	92

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி c/o கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.



மனஅலைகள்

எம். லட்சுமி சுப்பிரமணியம்



"கொஞ்சம் இருங்கள்!" என்று மானேஜர் டைரியைப் புரட்டினார். ராதா அவர் பாராத விதமாகக் கையை நொடித்து விட்டுக் கொண்டாள். அந்தக் கடிதத்தை அவர் திருத்தி எழுதச் சொல்லுவது நாலாம் தடவை.

அந்தக் காரியாலயத்துக்குச் சுருக்கெழுத்து வேலையில் வந்து அமர்ந்து அவளும் நான்கு வருஷங்களை ஓட்டி விட்டாள். வேலை அதிகம் என்று சொல்வதற்கில்லை; ஆனால் சுலபம் என்றும் சொல்ல முடியாது. மானேஜர் சொல்ல, எழுதிக் கொண்டு வந்து டைப் செய்து வைக்க வேண்டியது. பத்து கடிதங்களுக்கு மேல் இராது. ஆனால் அவைகளையே நாற்பது தடவைகள் டைப் செய்ய வேண்டியிருக்கும். ஒவ்வொரு தடவையும் ஏழெட்டுத் திருத்தங்கள். தூய வெண்ணிறக் காகிதத்தில் கரிக் கோலமாய் நீலப் பென்சில் குறுக்கும் நெடுக்குமாய் விழுந்து தெறிக்கும் போது அவளுக்குச் சில சமயங்களில் அழுகையே வந்துவிடும். அவை அவளுடைய தவறுகள் அல்ல. அவர் ஒவ்வொரு தடவையும் சொல்ல விட்டுப் போய்ப் புதிதாய்ச் சேர்க்கும், அல்லது மாற்றும் சொற்களே அவை. அவற்றை அவர் முதலிலேயே கவனித்துச் சரியாகச் சொல்லியிருக்கலாம்.

அவ்வளவு தூரம் திரும்பத் திரும்ப டைப் செய்த பிறகும் கடைசியில் எடுத்த கடித நகல் திருப்திகரமாய் இருக்காது. சில வேளைகளில் அதைவிட அவளே அந்தக் கடிதத்தை நன்றாக எழுதியிருக்கலாமென்றும் தோன்றும். ஆனால் அவள் எதுவும் பேசுவதற்கில்லை. அவர் மானேஜர்.

அவள் கீழ்ப்படிந்து வேலை செய்ய வேண்டியவள். கோடுகளும் வளைவுகளும் புள்ளிகளுமாகக் கடிதத்தைக் கைப் புத்தகத்தில் குறித்துக்கொண்டு தன் இடத்தில் வந்து அமர்ந்தாள் ராதா. தலையை வலித்தது. டைப் மெஷின் பிடியின் மேல் கையை வைத்த வண்ணம் சாய்ந்து கொண்டாள். யோசனையில் விரல்கள் இரகசியமாய் மூடி விரிந்தன.

அவள் அங்கே வேலைக்கு வந்து ஒரு வருஷத்துக்குப் பிறகு அவளுக்குக் கல்யாணமாகி விட்டது. கணவன் வேலையை விடச் சொல்லி வற்புறுத்தி யிருந்தால், அப்போது வேலையை விட்டிருக்கலாம். அவன் அந்த முடிவை அவளுக்கே விட்டுவிட்டான். மேல் பரீட்சையும் படித்துத் தேறி விட்டதால், சம்பள உயர்வு கிடைத்த சமயம் அது. கணவன் வேலைக்குப் போய் விட்டால் வீட்டில் வேறு வேலை கிடையாது. நூற்று முப்பது ரூபாய் சம்பளத்தை இழப்பானேன்? அவளுக்கு வேலையிலும் நல்ல பெயர். பள்ளிக்கூடச் சிறுமியைப் போல அக்கம் பக்கம் திரும்பாமல், வந்து உட்கார்ந்தால் எழுந்து போகும் வரை, வேலையை மட்டும் கருத்தாகக் கவனிப்பாள்.

அவர்களுடையது ஒரு நடுத்தரக் குடும்பம். கணவனுக்கு வேலை உயர்வு கிடைத்தால் ஒழிய சம்பளம் இறைபட முடியாது. கைக்குக் கை சில்லறை கிடைத்தாலும் குடும்பம் என்னவோ அரை முழக் கயிற்றில் ஆடும் பம்பரம் தான். இருபத்தைந்து தேதிகளை எட்டிப் பிடிப்பதற்குள் வேகம் வடிந்து விடும். எதிர்பாராத செலவுகள் வந்து விட்டால், பள்ளத்தில் சக்கரம் விழுந்து எழுந்து போகும் வண்டியைப்போல, மாதம் முழுதும் சங்கடத்தோடு தான் நகர்ந்து செல்ல வேண்டியிருக்கும்.

அவளுடைய வருமானமும் இருந்தால் கொஞ்சம் சௌகரியமாக இருக்கலாம். சற்றுக் கூடி வருவதால், இரண்டு நாற்காலிகள், சில அபூர்வ சாமான்கள், சில புத்தகங்கள், தேவைக்குச் சற்று மிதமான துணி வகைகள் — இவற்றை வாங்குவது கை மிஞ்சிய செலவாகத் தோன்றாது. அதிகக் கஷ்டமில்லை. ஆளுக்குக் கொஞ்சம் வேலை. வீட்டு வேலைகளில் அவன் அவளுக்குச் சற்று உதவியாக இருக்க வேண்டும். சம்பாத்தியத்தில் அவள் அவனுக்குத் துணை கொடுப்பாள்.

அந்தத் தீர்மானத்தில்தான் அவள் வேலையில் தொடர்ந்தாள். அப்படியே ஒரு விதமாக அனுசரித்துக் கொண்டு நாட்களையும் தள்ளி விட்டார்கள்.

சில சமயம் உடம்பு அலுப்பாக இருக்கும். வேலையின் சோர்வில் சிரித்துப் பேசத் தோன்றாமல் உட்கார்ந்திருப்பாள். வீட்டு ஞாபகத்தில் சில வேளைகளில் வேலையில் கவனம் அழுந்தாது. அந்தத் தன்னிழப்பை மறைக்க அவள் சடுபடும் விதம் ஒரு வேடிக்கையான அவஸ்தை. மனத்துக்குள் ஏதோ பலவந்தமான பிரிவின் ஏக்கம் சுமையாக நிற்கும்.


இல்வாழ்வின் மணமாக அவர்களிடையே ஜயம் தோன்றினான். அதற்கு முன்பும் பின்பும், உடல் தளர்ந்த நிலையில், வேலையையும் கவனிப்பது சிரமமாகத்தான் இருந்தது. அப்போது அவள் வேலையை விட்டிருக்கலாம், அப்படியே இருவரும் தீர்மானிக்கும் அளவுக்கும் வந்தாகி விட்டது. அந்தச் சமயத்தில் தான் தூர உறவினளாக இருந்த ஒரு பெண்ணை அவன் அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தது. குடும்பம் சற்றே பெருகி விட்ட நிலை. துணைக்கும் ஆள் இருந்தது. குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பையும் பகிர்ந்து கொள்ளலாம்.

வருவாயை விடுவானேன்?

வேலையைத் தொடர்ந்தாள். அப்படி ஒரு வருஷம். அந்தப் பெண்ணுக்கு மணமாகி அவள் அவர்களை விட்டுப் போய் விட்டாள். குழந்தையும் வளர்ந்துவிட்டான்.

''ஜயத்தை என்னிடம் விட்டு விடு. நீ எப்படி வேலையைப் பார்த்துக்கொண்டு அவனையும் சமாளிப்பாய்?'' என்றாள் அவள் தாயார். இருவரும் யோசிக்க வேண்டியிருந்தது.

கழுத்துச் சங்கிலி மேல் பிடி நழுவ, குஞ்சுக் கைகளின் நயம் முகத்தில் மெத்தென்று பரவ, கன்ன மிருதுவின் உணர்வில் தன்னை மறக்கும் நேரம், எளிதில் இழக்க மனம்



வராதது: அவனுக்கும்தான். அவர்களிடையே நாடகத்தின் நடு நூல் போலக் குழந்தை. அவர்களையறியாமலே புகுந்து தங்கிவிட்டாள். அவள் இல்லாமல் அவர்கள் குடும்பம் ஏதோ சரியாக உருவாக முடியாதது போல ஒரு தோற்றம்.

இருந்தாலும், தாய் வீடு உள்ளூரிலேயே இருந்தது: பஸ்ஸில் ஏறிப் பதின்மூன்று நயா பைசா கொடுத்தால் பார்த்து வரலாம்.

கொஞ்ச நாட்களாய் அந்த நிலையில் ஒரு விளங்காத அலுப்பு. வேலையின் அலுப்பா? வேலையில் மனம் ஈடுபட வில்லை. சிறு தொல்லைகளும் உருவெடுத்து வளர்ந்தன. வீட்டில் பழைய வசீகரம் இல்லை.

''ராதா! டிபனுக்கு நேரமாகவில்லை? எல்லாரும் போய்விட்டார்களே?''

தான் அப்படி அயர்ந்து விட்டதும் விஜயா தன்னைக் குலுக்கி எழுப்பியதும் நினைக்கும் போது ஒருகணம் வெட்கம் பிடுங்கியது.

இருவருமாகப் போனார்கள். அவன் வாய் திறக்கவில்லை. வேடிக்கையாகச் சளைக்காமல் இருவரும் பேசித் தீர்த்தபடி கழிக்கும் அரை மணி நேரம் அது. இப்போது கவிந்து விட்ட சிந்தனையில், மழை மூட்டத்தின் இறுக்கம் போல, அவர்களுக்குள் ஒரு தேக்கம். ஒரு வாரமாகவே அப்படித்தான். அன்று காலையிலிருந்தே அவனுக்கு மனம் சரியாக இல்லை.

மணி மூன்று. மிகுந்திருந்த நான்கு கடிதங்களுக்கும் பதில் எழுதும் முறை அவனுக்குத் தெரியும். அதைப் போன்ற பதில்களின் நகல்கள் அவனிடம் இருந்தன. அவனே அவைகளைப் போலத் தயார் செய்து கையெழுத்துக்கு வைத்து விடலாம். செய்தால் என்ன? வேலையும் சற்றுக் குறையும். நாலு அட்டைகளையும் கட்டி உள்ளே அனுப்பி விட்டு வேறு எதையோ கவனித்துக் கொண்டிருந்தான். காது மட்டும் உள்ளிருந்து கேட்கப் போகும் மணி ஒலியையே எதிர்பார்த்திருந்தது.

''டங்!''

அவனைத்தானோ? பையன் உள்ளேபோனான். மானேஜர் குரல் கேட்டது.

''ஸ்டெனோவைக் கூப்பிடு!''

பென்சிலும் நோட்டுப் புத்தகமுமாகப் போனான் ராதா. அவர் எதிரே அந்த நாலு அட்டைகள் இருந்தன.

''இவைகளை நான் உனக்கு 'டிக்டேட்' பண்ணவில்லையே?''

தலையை அசைத்தான். பேசத் துணிவில்லை.

''பின்னே எப்படிச் செய்தீர்கள்?''

பாராட்டா, கண்டிப்பா என்று அர்த்தம் பிரிக்க முடியாத குரல்.

''நானே செய்து வைத்தேன் சார்!''

புகைச்சிரிப்பு. அலட்சியக்குரல் தொடுக்கல்.

''நீங்கள் மானேஜராகி விட்டது எனக்குத் தெரியாது போயிற்றே? இது உங்கள் வீடு இல்லை. உங்கள் வேலையைத் தான் நீங்கள் செய்யலாம். அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்வதோ, செய்ததைத் திருத்துவதோ மேலதிகாரிகள் பொறுப்பு. அதிகப் பிரசங்கித்தனம் வேண்டாம். நீங்கள் போகலாம்!''

மணி மறுபடியும் அடித்தது: அவர் பேசி முடித்து விட்டதை அறிவிப்பது போல, அவனை வெளியே போகச் சொல்வதைப் போல.

காகிதங்களைக் கட்டி வைத்து விட்டான். விழிகளில் கண்ணீர் விளிம்பு கட்டியது. ஐந்து மணி அடித்த சத்தம் ஆறுதலாகத் தான் இருந்தது.

அவள் வீடு திரும்பிய போது வாசல் கதவு பூட்டியிருந்தது. அவள் கணவன் இன்னும் திரும்பவில்லை. பையையும் குடையையும் வைத்து விட்டு ஒன்றும் தோன்றாதவளாய்ச் சாய்வுநாற்காலியில் படுத்து விட்டாள்.

பிறகு செயலில் கை ஓடாமல் அடுப்பை மூட்டினாள். சமையல் ஏதோ நடந்தது. தலைவலியின் முனுமுனுப்பு ஓயவில்லை.

மணி ஏழரை யிருக்கலாம். கிருஷ்ணன் வீடு திரும்பி விட்டான். அவள் வாசற்புறம் போகவில்லை. அந்தப் பக்கத்து அறையிலிருந்து டிராயரை இழுப்பதும் பெட்டியைக் குடைவதுமாகச் சத்தம் வந்தது.

எதைத் தேடுகிறான் அவ்வளவு அவசரமாய்? அதுவும் வந்த வேகம் தணிவதற்குள்?

''ராதா! ராதா!''

அவளுக்கே அழைப்பு வந்துவிட்டது. அறை வாசலில் கதவைப் பிடித்தபடி நிற்கின்றான். அவன் முகத்தில் வியர்வை அரும்பிற்று.

''இன்ஷூரன்ஸ் பாலிஸி எங்கே?''

''பார்த்துக் கொள்ளலாமே? இப்போது என்ன அவசரம்? காலைக் கழுவிக்கொண்டு...''

''அவசரம்தான்! முக்கியமான காகிதங்களைக்கூட ஒரு பையில் போட்டு வைப்பதில்லை. ரசீதுகளும் ஒழுங்காக இருப்பதில்லை. நாளைக்குப் பணமே கட்டவில்லை என்று நோட்டீஸ் வந்தால்கூட நம்மால் பதில் சொல்ல முடியாது. இத்தனைக்கும் நீயும் ஒரு ஆபீஸில் வேலை செய்கிறவள்!''

அது கடைசியாக விழுந்த அடி. ஏற்கனவே அடிபட்டு நொந்த இடத்தில் விழுந்ததும் வேதனை சுருண்டெழுந்தது. ''போதும் என்னை மட்டம் தட்டினது! எனக்கும் இந்தக் குடும்பத்தில் பொறுப்பு உண்டு. வீட்டு வேலையைப் பொறுத்த மட்டிலுமாவது எனக்கும் அந்தச் சுவாதீனம் உண்டு.''

ஒருகணம் சிந்தித்து விட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பேசாமலிருந்து விட்டான். பொரிந்து தள்ளிய வேகத்தில் ராதை உள்ளே போய் விட்டாள்.

பாத்திரங்கள் மோதும் ஒலியைத் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. காலைக் கழுவிக் கொண்டு உட்கார்ந்ததோ, சாப்பிட்டதோ இருவருடைய மனத்திலும் நிற்கவில்லை. எங்கேயோ ஆங்கிலச் செய்தி அறிக்கை கேட்டது. ரேடியோவில் கையை வைக்கக்கூட மனமில்லை. இம்சையான ஒரு நெருக்கடி. வாசலில் போய் உட்கார்ந்து கொண்டான். உள்ளே ராதை விளக்கை அணைத்து விட்டுப் படுத்தது. காற்றில் திறந்து கொண்ட ஜன்னல் வழியாகத் தெரிந்தது. ஏதோ சொல்ல எழுந்து வந்தவன் கதவருகே வந்ததும் தயங்கினான். தூக்கம் பிடிக்காமல் சற்று நேரம் உலாவிக் கொண்டே யிருந்தான். இருளில் தனிமை பெருகித் தோன்றியது போல இருந்தது. மனத்தில் நிம்மதிக்காக ஏங்கும் தவிப்பு.

விடிந்து விட்டது.

அவனே அடுப்புப் பற்ற வைத்து வெந்நீர் போட்டுக் குளித்து விட்டான். அது அவன்

வழக்கமான பங்கு. அவர்களிடையே பகிர்ந்து கொண்ட வேலைகளில். பையை எடுத்துக் கொண்டு போய்க் கறிகாய் வாங்கிக் கொண்டு வந்து சமையல் அறை மூலையில் கொட்டினான். மேஜை மேல் பிரிபடாமல் இருந்த அன்றையச் செய்தித் தாளை எடுத்துக் கொண்டு போய் வாசலில் அமர்ந்தான்.

அடுப்பில் உலைநீர் கொதித்தது. ராதையின் மனத்தில் எவ்வளவோ எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. கை மட்டும் கரண்டியைப் பிடித்துக் கலக்கிக் கொண்டிருந்தது.

அதுவரை கிருஷ்ணன் அவளிடம் பேச வில்லை. மறுபடியும் கோபிக்கவும் இல்லை. கோபித்துக் கொண்டால்கூடத் தேவலை; இந்த அலட்சியத்தை விட.

தன்னுடைய வேலைகளை அவன் இயந்திர இயக்கமாகச் செய்து முடித்த வேகம், அவள் உணர்வைக் குத்தியது. ஆபீஸில்தான் எவ்வளவு வேலையோ? வீட்டிலும் வேலை வாங்குவ தோடு, நிம்மதியும் இன்றி அடித்து விட்டாள்.

அவளுக்குத்தான் பொறுமை இல்லை. தணிந்து போயிருக்கலாம். ஏன் கூடாது? ஆபீ ஸில் அப்படிப் போகவில்லையோ? எதிர்த்தா பேசினாள்? அங்கே இருந்த பொறுமை இங்கே ஏன் போக வேண்டும்? அவன் திருத்தினால் என்ன குறைந்து விட்டது? மேலதிகாரி திருத்தவில்லையோ? அதைப் போல் வெறும் குற்றச்சாட்டா இது? குடும்பத்தில் இருவருக் கும் இருக்க வேண்டிய அக்கறையைத்தானே அவன் அவளுக்கு எடுத்துச் சொன்னான்?

அந்தத் திருத்தம் வீம்பாய் வந்தது. அவள் மனத்தைக் குத்தி வருத்தியது. அதன் மேல் இந்தத் திருத்தம் மீண்டும் விழுந்து அவள் ரோஷத்தைத் தூண்டியது. அவ்வளவுதான்.

இலை போட்டாயிற்று. கூப்பிடும் பாவனை யில் வாசல் அருகே போய் நின்றாள். அவன் எழுந்து வந்தான். இலையில் உட்கார்ந்தவன் தலை நிமிரவில்லை. மௌனச் சாப்பாடு. அவள் கவனத்தைத் திருப்புவது போல் அவளும் பேசாமலே பரிமாறினாள். 'ஏன் பேசாமல் இருக்கிறாய்?' என்று கேட்கமாட்டாரோ?

அவன் புறப்பட்டு விட்டான். அவளும் கிளம்ப வேண்டும். இன்னும் அரை மணியில். கடைசி வரை அவன் பேசவில்லை; டிபன் பையைக் கொண்டு வைத்தபோதும்கூட.

செருப்பை மாட்டிக் கொள்ளும் சத்தம் கேட்டது. ஆபீஸ் பையை எடுத்துக் கொண்டு போனான். விரலுக்குள் மடித்த தாம்பூலம் அதுங்கியது. பையை வாங்கிக் கொள்ளும் போது, அவன் புறங்கையில் மனம் குழைந்த கனிவாய்த் துளி நீர் தெறித்த சூடு.

"ராது!" — அவன் போகத் திரும்புமுன், அவள் கையைப் பிடித்துக் கொண்டான். அதுவரையில் இடங் கொடாமல் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி, அவளுக்குத் திடீ ரென்று பொங்கிக் குரலை இழுத்தது.

"அசடே! எதற்கு—"

"ஒன்றுமில்லை! தப்பு என் மேல்தான்... நீங்கள் திருத்த வேண்டியதுதான்... திருத் துங்கள்....அதுவே சுவாதீனமாக இருக்கும்."

அவள் குரல் விக்கிற்று.

"எனக்குக் கோபமா என்ன? நீயாக எதை யாவது நினைத்துக் கொள்ளாதே! ராத்திரி சொல்வதற்கு நீ சரியாக இல்லை. ஆபீஸில் உனக்கு என்ன தொல்லையோ? எனக்கு உத் தியோக உயர்வு கிடைக்கப் போகிறது. நீ இன்னும் வேலைக்குப் போய்ச் சிரமப்படுவா னேன்? குழந்தைகூட இல்லாமல் 'வீடே வெறிச்சென்றிருக்கிறது. நேற்று இரவு மறுபடியும் அதைச் சொல்லி விட வந்தேன். நீ தூங்கி விட்டாய். சொல்லத் தோன்றி யதை உன்னிடம் சொல்ல முடியாமற் போன ஏமாற்றம். அதைத்தவிர......"

என்றும் அறியாத ஒரு பச்சாத்தாபமும் இரக்கமும் அவனை உலுக்கின. 'அவளைச் சமா தானப்படுத்த, கண்ணீருக்கிடையே சிரித்தவ னாய் "கன்கிராஜுலேஷன்ஸ்!" என்று கூறித் தாம்பூலத்தை அவன் வாயில் போட்டாள்.

'டெட்டால்'



தொற்றுநோயிலிருந்து அவனைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது



அவன் மிகவும் சுத்தமாகத்தான் இருக்கிறான். ஆனால், அவன் வசிக்குமிடத்தின் தரை எப்படி இருக்கிறது? போதிய அளவிற்கு சுத்தமாகக் காணப்பட்டபோதிலும், கோடிக்கணக்கான, கண்ணுக்குத் தெரியாத விஷக்கிருமிகள் தயாராகப் பதுங்கி இருக்கின்றன. அசட்டை செய்து விடாதீர்கள். உலகத்திலேயே மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமிநாசினி 'டெட்டாலை,' தரைகளை அலம்பிவிடவோ துடைக்கவோ உபயோகிக்கப் படும் தண்ணீருடன் கலந்துகொள்ளுங்கள். 'டெட்டால்' விஷக்கிருமிகளை கொல்ல கூடியது.

DL. 4A

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTAEL 3569



புதிதாகத் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்த இரு தாய்மார்கள் பேசிக் கொண்டனர்:

''நான் சொல்றது ஒன்னு விடாம அவ விடம் ஒப்பிச்சுடறுன் என் பிள்ளே.''

''அது தேவலேயே, நான் சொல்லாததையும் சொன்னதாகச் சொல்லிடறுன் அவளிடம்.''

●

''ஒருவன் வாழ்க்கையில் தனக்கு என்று விருப்பு வெறுப்புக்கள் இல்லாதவனுக இருந்தால் அதற்கு என்ன காரணம்?''

''அவன் கல்யாணமானவனுக இருப்பான்.''

●

''நீங்கள் ஏதோ புதிதாகப் பெரிய அளவில் ஒரு இரும்புப் பெட்டி செய்திருப்பதாகச் சொன்னுர்கள். அதைப் பார்க்கலாமா?''

''ஓ! பேஷாகப் பார்க்கலாம்!''

''எங்கே வைத்திருக்கிறீர்கள்?''

''என்ன சார், நீங்கள்? நாம் இரண்டு பேரும் அந்த இரும்புப் பெட்டிக்குள்தானே இப்போது உட்கார்ந்திருக்கிறேம்!''

●

ஜெயில் அறையில் ஒரு கைதி மற்ருெரு கைதியிடம்: சும்மா மூக்காலே அழாதேடா! இந்தப் பட்டணத்திலே ஒரு 'ரூம்' கிடைக்காத கஷ்டகாலத்திலே வாடகைகூட இல்லாமல் இலவசமா நமக்கு ஒரு அறை கிடைச்சிருக்கே, அதுக்கு சந்தோஷப்படு

●

''உங்க தாத்தாவுக்குக் காது செவிடாகி விட்டதாமே! அதைக் குணப்படுத்திக் கொள்ளப் போகிருரா?''

''சமீபத்தில் இல்லே!''

''ஏன்?''

''அவர் சங்கீத சீஸனுக்கு டிக்கெட் வாங்கியிருக்கிருர்!''

●

''ஏனய்யா, என்னிடம் கடன் வாங்கி விட்டு ஒளிந்து கொண்டிருக்கிறீரா, வா, ஐயா, வெளியே!'' என்ருர் கடன்காரர்.

சிறிது நேரத்துக்குப் பதில் இல்லே.

கடன்காரர் மறுபடியும், ''ஓய், வீட்டுக்குள்தான் இருக்கிறீர்! உம்முடைய செருப்பு இங்கே வாசலில்தானிருக்கிறது!'' என்று கத்தினுர்.

''ஏன் நான் பூட்ஸ் போட்டுக்கொண்டு வெளியே போயிருக்கக் கூடாதா?'' என்று ஒளிந்திருந்தவரிடமிருந்து பதில் வந்தது.

●

''என் மாமா பெண்ணே அந்த அதிகாரி கல்யாணம் செய்து கொண்டு 'உடனே பெண்ணே அழைத்துப்போய் விடுகிறேன்! சம்மதமா?' என்று கேட்கிருர்.''


''அது தேவலேயே! என் மாமா பெண்ணே ஒருவர் அழைத்துப் போய் விட்டுப் பிறகு 'உடனே கல்யாணம் செய்து கொள்கிறேன். சம்மதமா?' என்ருர்!''

●

கொல்லர் பட்டறையில் வேலேக்கு ஆளெடுக்க ஏற்பாடு நடந்தது. வந்தவர்களில் ஒருவனேக் கேட்ட கேள்வி இதுதான்: ''உலேயில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை எடுத்துப் பட்டறையின்மேல் நான் வைப்பேன். நீ கையில் ஒரு பெரிய சம்மட்டியைத் தூக்கிப் பிடித்தபடி இருக்க வேண்டும். உம்...என்று தலேயை அசைப்பேன், ஓங்கி ஒரு அடி சம்மட்டியால் அடிக்க வேண்டும். இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேள்.''

''இருக்கு சார்! தலேயை அசைத்தவுடன் அடிக்க வேண்டும் என்றீர்களே, தலேயைத்தானே?'' என்ருன் வந்தவன்.

அவனே உடனே வேலேக்கு அமர்த்திக் கொண்டார்கள். நல்ல காலமாக அவனுக்குச் சந்தேகம் வந்ததோ, தலே தப்பியதோ!



கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.


கால்கேட்டில் கிடைத்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

சிலர் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 32 QT-TAM



நல்லவன் வாழ்வான்

ஆரம்பத்திலிருந்தே ஒரு நல்லவனைப் படைக்கப் பலவிதத்திலும் முயன்றிருக்கிறார்கள். கடன்பட்டு மனம் கலங்கியவனின் மகளுக்குத் தன் பணத்தைக் கொடுத்து மணம் செய்து வைக்கிறான் அந்த நல்லவன். அவன் வாழ்க்கையில் வேண்டிய மட்டும் கேடுகள் சூழுகின்றன. ஓர் அயோக்கியன் தான் செய்த கொலை பாதகத்தை நல்லவன் மீது சுமத்தி அவனைத் தூக்குமேடை வரையில் கொண்டு போகிறான். ஆனால் கடைசியில் நல்லவன் தூக்குமேடைக்குச் செல்லாமல் வாழ்ந்தே தீருகிறான்.

கொலையைப் புனைந்த விதமும் அதை நல்லவன் மீது சுமத்திய விதமும், நல்லவன் தான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கும் ருசுவைத் தேடி அலைந்த விதமும் படத்தில் சிக்கல் சிறிதுமின்றிக் காட்டப்பட்டிருக்கிறது. நல்லவன் காப்பாற்றப்பட்டதும் நன்றாகப் புனையப்பட்டிருக்கிறது.

அடிதடி சண்டைகளுக்கு நிறைய இடம் இருப்பது போலவே, இந்தப் படத்தில் கண்ணீருக்கும், காதலுக்கும், நடனத்துக்கும், சந்தேகக் குழப்பங்களுக்கும் நிறைய இடம் இருக்கிறது. நல்லவனாக வரும் எம். ஜி. ஆர். எல்லாக் கட்டங்களிலும் மிக நன்றாக நடித்திருக்கிறார். தான் செய்யாத கொலைக் குற்றத்துக்குத் தண்டனை அடைந்தபோது அவர் அடைந்த மனவேதனை உருக்கம் தருவதாக இருக்கிறது. அந்தப் பழியைத் துடைப்பதற்கு அவர் காட்டும் பரபரப்பு நன்றாயிருக்கிறது. கடைசி வரையில் அந்தப் பரபரப்பும் உருக்கமும் அவர் நடிப்புக்கு ஏற்றம் தருகின்றன.

அடிதடிச் சண்டைகளில் எம். ஜி. ஆர். வழக்கம் போல் மிகவும் லாகவமாகச் சமாளித்திருக்கிறார். மாறு வேடம் பூண்டு, தாடி, மீசையுடன் பட்டை பட்டையாகத் திருநீறு அணிந்து "ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்" என்று பாடிப் 'புரட்சி' செய்திருக்கிறார். ஆனால் வேடம் வெகு நேரம் வரையில் பெற்ற தாய்க்குக்கூட அவரைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தது எப்படியென்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

நல்லவனைக் கடைசி வரையில் கெடுக்கும் வில்லன் நல்லசிவமாக வருகிறார் எம். ஆர். ராதா. நல்ல வேலை அதிகமாகக் கத்திப் படத்தைக் கெடுக்கவில்லை!

எம். என். நம்பியார் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் மாதவனாக வந்து கடமையில் கண்ணாயிருப்பதோடு காதலிலும் கருத்தாயிருக்கிறார்.

இ. வி. சரோஜா போலீஸ் இன்ஸ்பெக்டர் மாதவனின் மனைவியாக வருகிறார். கல்யாணத்துக்குமுன்பு அவளும் மாதவனும் சமையலறையில் நடனமாடுவது நன்றாகவே இல்லை.

ராஜசுலோசனா கதாநாயகி. ஆகவே ஆடுகிறார்; பாடுகிறார். கதாநாயகியாக வந்ததற்காகக் கணவனைப் பிரிந்து கண்ணீர் உகுத்துக் கடைசியில் கணவனோடு சேர்ந்து விடுகிறார்.

திரைக் கதை சற்றுப் புதுமையாகப் புனையப்பட்டிருக்கிறதே என்று மகிழுகின்ற போதில் பல பழைய சம்பவங்கள் படத்தில் புகுந்து கொண்டு அந்த மகிழ்ச்சியைக் கெடுத்து விடுகின்றன.

தேர்தல் சமாசாரம், நடனமாடிய பெண்ணைப் பணக்கார நல்லசிவம் கெடுக்க முயலுதல், அவள் அவனிடமிருந்து தப்பியோடி நல்லவனை அடைதல்—கதாநாயகி ஆணுடையில் கதாநாயகனோடு கொஞ்சிக் குலாவுதல், கட்டின மனைவியை வீணாகச் சந்தேகித்தல்—இவைகளையே கூறுகிறேன். புதிதாக ஏதாவது புகுத்தும் நோக்கமே நம் படாதிபதிகளுக்கு இல்லையே! மேற்படி நிகழ்ச்சிகளெல்லாமே பல தமிழ்ப் படங்களில் பலமுறை வந்திருக்கின்றன என்பதையும் கூடச் சிந்தித்துப் பார்க்கவில்லையே!

பாடல்கள் ஒன்றுமே எடுப்பாயில்லாதது வருந்தத்தக்கது.

டைரக்ஷன் பொறுப்பை, ப. நீலகண்டன் நன்றாய் வகித்திருக்கிறார்.

நல்லவன் பழியிலிருந்து தப்ப ஒரே சாட்சியாக இருந்த கிழவியும் இறந்து விட்ட பிறகு உண்மைக் குற்றவாளியைப் பிடிக்க இன்ஸ்பெக்டர் செய்யும் தந்திரம் மிகவும் நன்றாய்ப் புனையப்பட்டிருக்கிறது. படத்தில் அந்தக் கட்டம் ஒரு சஸ்பென்ஸாகவே வைக்கப்பட்டிருப்பது நல்ல உத்திதான்.

நல்ல கருத்தைப் புனைய முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பாராட்ட வேண்டியதுதான்.

"நல்லவன் வாழ்வான்" படத்தில் பாராட்ட வேண்டிய நல்ல அம்சம் படத்தின் நீளம்தான்—15,133 அடிகள்! பதினெட்டாயிரம் அடிகளுக்கு மேலே போய்ப் பழகிவிட்ட தமிழ்ப் படங்கள் இந்த அளவுக்குக் குறைந்ததே நல்லதில்லையா? — காந்தன்



நாவல் பிறக்கிறது

சோமு

சாதாரணமாக இரண்டு கண்களையும் நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டே சில அசட்டுக் காரியங்களைச்செய்துவிடுவதுண்டு அல்லவா? அப்படி ஒரு காரியத்தை 1952-ஆம் ஆண்டில் நான் செய்தேன். திருச்சி வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி நிர்வாகஸ்தராகப் பணிபுரிந்து கொண்டிருந்த சமயம் அது.

திரைப்பட உலகிற்குள் என்னைக்கொண்டு போய் நிறுத்தி விடுவது என்று சில புண்ணியாத்மாக்கள் எனக்குக் கொம்பு சீவினார்கள்! அந்தச் சபலத்தில் இரண்டு வாரங்கள் இரவும் பகலும் இடுப்பு ஒடிய உட்கார்ந்து, ஐந்து நெடுங் கதைகளுக்குக் குறிப்புக்களை உருவாக்க முனைந்தேன்!

ராமசுப்பிரமணியம் என்று ஒரு நண்பர். 'ஷார்ட் ஹாண்ட்' என்ற குறுக்கு எழுத்தை எத்தனை வேகமாக எழுத முடியுமோ, அத்தனை வேகமாக டைப்பே அடித்து விடுவார். எதிரே டைப்ரைட்டரோடு அவர் உட்கார்ந்து 'கடகட' என்று டைப் அடிக்கவும், நான் திரைப்பட மேகத்தில் 'மளமள'வென்று என்னுடைய கற்பனைகளைச் சொல்லிக் கொண்டு போகவும், 'டைப்ரைட்டர்' மணி வரிக்கு வரி 'கணகண' என்று ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் கொட்டவும், லட்சக்கணக்கான வார்த்தைகளைத் தட்டெழுத்திலே தட்டித் தள்ளி, அந்தக் காகிதங்களை யெல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்களைப் போல் கத்தை கத்தையாக அள்ளி எடுத்துக் கொண்டு சென்னைப் பட்டினத்துக்கு ரயிலேறினேன்! திரைப்பட உலகின் நல்லதிருஷ்டத்தினால் சில முக்கிய நிகழ்ச்சிகள் குறுக்கிட்டு அந்தக் கதைகள் படமாக்கப்படாமல் நின்றன! அந்தக் கதைக் குறிப்புக்களில் ஒன்றுதான் ''ரவிசந்திரிகா''!

இந்தச் சம்பவம் நடந்த சில மாதங்களுக்கெல்லாம் நான் சென்னை வானொலியில் நாடக நிகழ்ச்சித் தயாரிப்பாளராகச் சேர்ந்தேன். அதன்பிறகு வானொலிப் பணியோடு சேர்த்துக் கல்கி ஆசிரியராகவும் பணி ஏற்றேன்.

1955 ஏப்ரில் மாதம் மூன்றாம் தேதிக்கு உரிய கல்கி இதழ் அச்சாகிக் கொண்டிருந்தபோது, பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல் பழைய கதைக் குறிப்புக்களை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். அப்போது 'ரவிசந்திரிகா' கண்ணில் பட்டது. ஸ்ரீ சதாசிவம் அவர்களிடம் இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். கதையின் பெயர் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. சங்கீதக் கலைஞன் ஒருவனைப் பற்றிய கதை என்று அறிந்ததும், ''பேஷா ஆஆப்போச்சு! வருகிற புத்தாண்டு இதழிலேயே கதையை ஆரம்பித்து விடலாமே!'' என்றார்கள். அச்சாகிக்கொண்டிருந்த ஏப்ரில் மூன்றாந் தேதி இதழிலேயே ஓர் அறிவிப்பை வெளியிட்டோம்!

எதிர்பாராமல் திடீரென்று ஆரம்பித்த கதை. கையிலிருந்த ஆங்கிலக் குறிப்பு என்ற எலும்புக் கூட்டுக்குள்ளே தசையும் நரம்புகளும் திணித்து,இரத்த ஓட்டத்தை இயக்க வேண்டும். இந்த நிலையில் கதையை ஏப்ரில் 17ந் தேதி இதழில் ஆரம்பித்து விட்டேன்! வாசகர்கள் இதை எப்படி வரவேற்பார்களோ என்ற கவலை எங்கள் எல்லோருக்குமே இருந்தது. ஆசிரியர் பதவி ஏற்ற பிறகு முதல் முதல் நான் எழுதுகிற கதையானதால், எனக்கிருந்த பொறுப்புணர்ச்சியும் அச்சமும் அளவற்றவை! இதற்கு மத்தியில் ஏஜெண்ட் தோழர்களின் கோரிக்கைகளையும், வாசகர்களின் ஆசாபாசங்களையும் கையிலே கை வைத்து நாடி பார்ப்பது போல் பார்க்கிற இரண்டு 'ஏஜன்ஸி இன்ஸ்பெக்டர்கள்' அடிக்கடி காரியாலயத்துக்கு வந்து போவார்கள். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு உடம்பு பதறும்!

கதை ஆரம்பமாகிற்று. இரண்டு இதழ்கள் வெளி வந்ததும் இன்ஸ்பெக்டர்கள் சென்னைக்கு வந்தார்கள். ''அஞ்ச வேண்டாம்!'' என்று அபயப் பிரதானம் அளித்தார்கள்.

இதன் பிறகு என்னுடைய உற்சாகத்துக்குச் சொல்லவாவேண்டும்! ஏப்ரில் மாதம் ஆரம்பித்த 'ரவிசந்திரிகா' கதை அடுத்த வருஷம் பெப்ருவரி மாதம் முடிய யாதொரு விக்கினமுமின்றித் தொடர்ந்தது!

'இலக்கிய சேவை' என்றும், 'கலை உத்தாரணம்' என்றும், பெரிய பெரிய வார்த்தைகளை உபயோகித்து உங்களிடம் பொய் புளுக நான் விரும்பவில்லை. ரவிசந்திரிகா சம்பந்தப்பட்ட வரை முழுக்க முழுக்க ஏஜெண்ட் தோழர்களை என் கண் முன்னால் நிறுத்திக் கொண்டே கதையை எழுதினேன் என்பதுதான் உண்மை. டைப் அடித்து வைத்திருந்த கதைக் குறிப்பானது இத்தனை விசாலமாகக் கிளை வீசிப் படர்ந்ததற்குக் காரணம், வாரந்தோறும் ஸ்ரீ சதாசிவம் அவர்களின் மேஜைக்கு மேல் அம்பாரம் அம்பாரமாக வாசகர்களிடமிருந்து வந்து குவிந்த கடிதங்கள்தான்!

இத்தனை ஆண்டுகள் கழித்து மூலக் கதையின் ஆங்கிலக் குறிப்பையும், கல்கியில் நான் எழுதி முடித்த ரவிசந்திரிகா கதையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். இரண்டுக்கும் சம்பந்தமே இல்லை! ஆங்கிலக் குறிப்பிலுள்ள கதை பத்தே இதழ்களில் முடிந்திருக்கும். ஆனால் ரவிசந்திரிகாவோ நாற்பத்தைந்து வாரங்கள் வெளிவந்திருக்கிறது. இதன் இரகசியம் என்ன? என்னிடம் கேட்டால் அந்த இரகசியம் வாசகர்களாகிய உங்களிடம் இருக்கிறது என்றுதான் பதில் சொல்லுவேன்!

''கன்றை நோக்கியதும் பசுவுக்குப் பால் சுரப்பது போலத்தான் இலக்கியம் பிறப்பதும்'' என்று டி. கே. சி. அடிக்கடி சொல்லுவார்கள். வாசகர்களின் கடிதங்களைப் பார்க்கப் பார்க்கப் புதிய புதிய அத்தியாயங்கள் சுரந்தன என்பது என் அனுபவம்.

கதைக்குறிப்பு பிறந்ததும், அது வளர்ந்ததும் இவ்வளவே. ஆனால் இந்தக் கதையிலே நிகழும் சம்பவங்களை உருவாக்கக்கூடிய இதய அனுபவங்கள் எனக்கு எப்படி ஏற்பட்டன? அவையில்லாமல் கதை ஏது? பானையில் உள்ளது தானே அகப்பையில் வரும் என்று கேட்கலாம். சொல்லுகிறேன்.



என்னுடைய சொந்த ஊரான மீனாட்சிபுரம் ஒரு சிறிய கிராமம். திருநெல்வேலிக்கு அருகில் இருப்பதால், நகரத்தின் வசதிகளும் கிராமத்தின் இயற்கை யழகும் ஒருங்கே இணைந்த ஊர் அது. தாமிரவருணியின் கரையில் பிள்ளையார் கோவில், அரசமரம், படித்துறை! எங்கு பார்த்தாலும் பசுமையான வயல்கள்! இந்தச் சூழ்நிலையில் என்னுடைய இளமை நாட்கள் கழிந்ததால், நாட்டுப்புறக் காட்சிகளும், கிராம மக்களின் வாழ்க்கையும், இயற்கை எழிலும் என்னுடைய இளம் உள்ளத்தில் நன்கு பதிந்தன. இந்த அனுபவங்களோடு திருக்குற்றாலம், இலஞ்சி, பாபநாசம், பொதிகை மலைக் காடு, பளிஞர் குடியிருப்பு முதலிய பிரதேசங்களில் எல்லாம் என்னுடைய பள்ளிக்கூட விடுமுறை நாட்களைக் கழித்திருக்கிறேன். இவையனைத்தும் சேர்ந்தே ரவிசந்திரிகா கதையில் வருகிற கிராமக் காட்சிகளுக்கும், பளிஞர்களின் குடியிருப்புக்கும் பின்னணியாக உதவின.

நான் பிறந்து வளர்ந்தது நெல்லை மாவட்டமே என்றாலும், உத்தியோக முறையில் திருச்சியிலே பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் கழித்து விட்டேன். எனவே, மலைக்கோட்டையும், தாயுமானவர் வீதியும், பீமநகரும், நான் வசித்த மார்சிங்பேட்டை வீதியும் என்னுடைய கதையில் நிகழ்ச்சிக் களங்களாக அமைந்தன! திருச்சியில் நான் குடியிருந்த வட்டாரம் முஸ்லிம் சகோதரர்கள் நிரம்பிய பீமநகர். ரவிசந்திரிகாவில் வரும் உஸ்தாத் மீரானும், மஜீதும் நான் பீமநகரிலே கண்டெடுத்த வைரமணிகள்!

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள மேலப் பாளையம் என்ற மகுதிப் பட்டணம் ஏற்கனவே ஒரு முறை என் கற்பனைக்குக் கைகொடுத்து உதவியிருக்கிறது. 1940-ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற என்னுடைய 'கல்லறை மோகினி' என்ற கதை, தமிழ் நாட்டு முஸ்லிம் சகோதரர்களின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டது. இந்த வாழ்க்கை முறைகளை ஆராய்ந்திருந்த என் அனுபவம், உஸ்தாத் மீரானுடைய மகளின் காதலைச் சித்திரிப்பதில் இப்பொழுது உதவிற்று.

எங்கள் மீனாட்சிபுரம் கிராமத்தில்





கொழும்பு நகரில் முதன் முறையாகச் சென்ற ஞாயிறு காலை தம்பையா சத்திரத்தில் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம லட்சார்ச்சனை நடைபெற்றது. பேராசிரியர் எஸ். ஆர். துரைஸ்வாமி சாஸ்திரியார் தலைமையில் நடைபெற்ற அர்ச்சனையில் ஆஸ்திகர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

ஆண்டுதோறும் உலகம்மன் கோவிலிலே "தசராப் பண்டிகை" நடக்கும். அங்கே இரண்டு மூன்று சிலம்பப் பள்ளிக்கூடங்களிருந்ததால், பண்டிகையின் போது சிலம்பப் போட்டிகள் பிரமாதமாக இருக்கும்! நானும் சிறு வயதில் சிலம்பம் கற்றிருந்ததால், இந்த அனுபவங்களை யெல்லாம் திருச்சிக்கு ஏற்றுமதி செய்து, உஸ்தாத் மீரானின் பரந்த தோள்களிலே ஏற்றி வைத்தேன்!

ரவிசந்திரிகாவில் பல இடங்களிலே சித்தர்களின் பாடல்களும், அவர்களுடைய சாஸ்திர முறைகளைப் பற்றிய குறிப்புக்களும் வருகின்றன. இது பற்றி ஒரு வார்த்தை. இளமையிலிருந்து எனக்குச் சித்தர் பாடல்களிலே ஒரு மோகம் உண்டு. இமயமலையில் நீண்ட நாள் வாழ்ந்து திரும்பிய ஒரு சித்தரின் ஆன்மநேயத் தொடர்பினால் இந்த மோகம் மேலும் மேலும் வளர்ந்தது. இந்த ஆர்வமே பலப் பல வடிவங்களில் இந்தக் கதையின் பொதிகைமலைக் காட்சியிலே தோன்றுகிறது.

ரவீந்திரன், சந்திரிகா ஆகிய கதாபாத்திரங்களின் வார்ப்பிலே ஆதார நாதமாக ஒலிக்கிற சங்கீதத்துக்கு அடிப்படை, என்னுடைய வாழ்விலும், வளர்ச்சியிலும் ஏற்பட்ட இசைச் சூழ்நிலையாகும். என் உறவினர்களில் சிலர் சிவ பூஜைக்குத் திருமுறைகளையும் மந்திர கீதங்களையும் ஓதி இசையோடு வழிபாடு செய்யும் ஸ்தானிகர்கள். இந்தத் தேசிகர்கள் தமிழ் நாட்டின் பழைமையான பண்களையும் இசை நுணுக்கங்களையும் வழிவழியாகப் பயின்றவர்களாதலால் சிறு வயதிலிருந்தே சங்கீதம் என் இதயத்தோடு இணைந்து விட்டது. எனவே ஒரு சங்கீதக் கலைஞனை என் கதாநாயகனாகவும், ஒரு நடன நங்கையைக் கதையின் நாயகியாகவும் உருவாக்குவதில் இந்த இசை அனுபவங்கள் எனக்குப் பெரிதும் துணை செய்தன.

என்னுடைய கல்லூரி நாட்களிலும், பிறகு திருச்சி நாட்களிலும் எனக்குக் கிறிஸ்தவ நண்பர்கள் சிலர் ஏற்பட்டார்கள். இத் தொடர்பு காரணமாக, ரவிசந்திரிகாவில் மாதாகோவிலும், கிறிஸ்துவ வாழ்க்கையும் இணைந்தன.

நாடி சோதிடமும் இந்த நாவலில் இடம் பெற்றிருக்கிறது. திருச்சிக்கு அருகிலுள்ள திருத்தாந்தோணி என்ற ஊரில் அந்தக் காலத்தில் சபாபதி முதலியார் என்று ஒரு சுவடிச் சோதிடர் இருந்தார். உயர்ந்த பண்பாடு படைத்த இந்தக் கிழவரின் நட்பினால் இந்தச் சாஸ்திரத்தின் ரசமான செய்திகள் சிலவும் என் கதையில் இடம் பெற்றன.

நாட்டுப் பாடல்களில் எனக்குள்ள ஈடுபாடு காரணமாக இவற்றைத் தொகுத்து வைத்திருந்தேன். அந்தத் தொகுப்பும் இந்த நாவலுக்கு உதவியது.

ரவிசந்திரிகாவை ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் 'சர்ப்பகந்தி' என்ற மூலிகையைப் பற்றிய ஆராய்ச்சி வெளி வந்தது. என்னுடைய கதாநாயகனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்

டால், அதற்காக அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை என்றும், மூலிகை கிடைத்து விட்டது என்றும் மனத்தில் உற்சாகம் பிறந்தது. அதோடு 'சர்ப்ப கந்தி' என்று நாம் அழைக்கிற மூலிகைக்கு நமது ராஷ்ட்ர பாஷையில் 'சந்திரிகா' என்றே பெயர் என்பதை, அந்த ஆங்கிலப் பத்திரிகையில் படித்ததும், கதாநாயகியின் பெயருக்குத் தேசிய அங்கீகாரமே ஏற்பட்டு விட்டது என்று எண்ணிக் கற்பனைக் குதிரைக்குச் சாவி கொடுத்து முடுக்கினேன்.

சனிக்கிழமைதோறும் இந்தக் கதையின் 'பாரம்' அச்சேறும். வெள்ளிக் கிழமை மாலையிலேயே கல்கி போர்மன் ஸ்ரீ ராஜாபாதர் பக்குவமாக வந்து ஞாபகப்படுத்திச் செல்லுவார். படுக்கப் போகும் முன், கம்பாஸிடரையும் அவருடைய கருநீல அங்கியையும் கண் முன் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு தான் இமைகளை மூடுவேன். விடியற் காலை நான்கு மணிக்குச் சொப்பனத்திலே வந்து அவர் குரல் கொடுப்பார். அதாவது அலாரம் ஒலிக்கும். உடனே எழுந்து முகத்தைத் தண்ணீரிலே துடைத்துக் கொண்டு எழுத உட்காருவேன். அச்சு இயந்திரம் 'மாட்டரைக் கொண்டா கொண்டா' என்று முழங்குவது போல என் கற்பனைச் செவியிலே கேட்கும். அந்த ஒலிதான் என்னுடைய மன எழுச்சி! வேடிக்கைக்குச் சொல்லவில்லை. உண்மையாகவே அப்படி ஒரு பழக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே கதை நன்றாக இருந்தால் அந்தப் பாராட்டு இரும்பு விக்கிரகமாகிய அச்சு இயந்திரமூர்த்தியையே சேர வேண்டும்!

இதுதான் ரவிசந்திரிகா பிறந்த கதை. பிறந்த கதை என்று சொல்லுவதைவிட அது வளர்ந்த கதை என்றே சொல்லலாம். ஏனென்றால் அந்தக் கதை பிறந்து வளரவில்லை; வளர்ந்து கொண்டே பிறந்தது!


கதை முழுதும் முடிவாகி அதைப் புத்தகமாகப் பார்த்த போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. என்றாலும் அந்த மகிழ்ச்சியைவிட அதற்குக் கிடைத்த முன்னுரையைப் படித்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியே பெரிது. ''நான் ரவிசந்திரிகையைப் படிக்கவில்லை. ஏன் படிக்க வேண்டும்? எழுதிய ஆசிரியரைப் படித்து விட்டேன். அவருக்கும் நூலுக்கும் என் ஆசிகள்!'' என்று ராஜாஜி வாழ்த்தினார்கள். அவர்களுடைய முன்னுரையில் மனித மனத்தின் இயல்புகளை நுட்பமான முறையிலே ஆராய்ந்திருக்கிறார்கள். அந்த முன்னுரை அற்புதமான ஒரு மனத் தத்துவக் கட்டுரையே யாகும். அதைப் படித்த போது, இப்படிப்பட்ட ஓர் அரிய கட்டுரை பிறப்பதற்காகவே ஒரு நாவல் பிறந்தது போலும் என்று எண்ணி மகிழ்ந்தேன்.

''பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் சரித்திரத்திலே இதுவே பொன்னான நாள்'' என்று அதன் தலைவர் வால்சந்த் ஹீராசந்த், அபிவிருத்திக்கான அமெரிக்க சர்க்காரின் கடன் திட்டத்திலிருந்து 3·43 கோடி ரூபாய் பெறும் உடன்படிக்கையில் கையெழுத்திடும்போது கூறினார். அவரோடு, அமெரிக்க சர்க்கார் சார்பிலே கையெழுத்திட்ட அமெரிக்கத் தூதர் கால் பிரெய்த்தையும், கம்பெனி டைரக்டர் சினுபாய் கிலாசந்தையும் படத்தில் காணலாம்.





தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122, கன்ஸராசால்...பம்பாய்-2.


திருமணமக்கள்



பெரணமல்லூர் திரு எத்திராஜுலுவின் குமாரரும் கல்கி ஏஜண்டுமான திரு ஆதிகேசவலுக்கும் சௌ. பேபிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



பாலக்காடு டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ராஜலக்ஷ்மி திரு பி. எஸ். ராமன் அவர்களை மணம் புரிந்து கொண்டார்.




சேஷசாயி பிரதர்ஸ் ஸ்தாபன டைரக்டர் திரு எச். கே. ராமசாமி அவர்களின் புதல்வி சௌ. நிர்மலாவுக்கும் டாக்டர் ஏ. நாகபூஷணத்துக்கும் விவாகம் நடந்தது.



ஸ்டாண்டர்டு மில் ஸ்டோர்ஸ் பாகஸ்தர் திரு ஆர். வைத்தியநாதன் அவர்களின் சகோதரி சௌ. கௌரிக்கும் திரு பட்டாபிராமனுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



பம்பாய் திரு ராமநாதன் அவர்களின் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திரு பாலசுப்பிரமணியத்துக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது.



வக்கீல் திரு எஸ். சீதாபதி அவர்களின் புதல்வி சௌ காந்திமதிக்கும் திரு எஸ். கிருஷ்ணனுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.



கிராமத்தில் சரியான ரஸ்தா வசதி ஏற்பட்டு விடாமல், ஊர்ப் பெரிய மனிதரான சங்கரலிங்க மூப்பனுர் தடையாக நிற்கிறார். காரணம், ரஸ்தா ஏற்பட்டால் அவரது கரும்புத் தோட்டத்தை இழக்க நேரிடும் என்பது தான். அவருடைய எண்ணத்துக்குக் காளி கோவில் பூசாரி வேப்பிலே அடிக்கிறான். சங்கரலிங்க மூப்பனுரின் மகன் வரதனும், முஸ்லிம்களின் செல்வாக்கைப் பெற்ற அப்துலும், யாருக்கும் நன்மையையே கோரும் தபால்கார நம்மாழ்வாரும் கப்புரத்தினத்துக்கு உதவியாக நிற்கின்றனர். சமுதாயப் போராட்டம் தனிப்பட்டவர்களின் மனப் போராட்டமாகத் திரும்புகிறது. பொது ரஸ்தா ஏற்பட வேண்டும் என்பதற்காக அப்துல் தன் வளர்ப்புத் தந்தையின் சமாதியையே அப்புறப்படுத்தத் தயாராகிறான்; அதன் காரணமாக முஸ்லிம்களின் தலைவரான உசேன் ஷாவின் வெறுப்புக்கு ஆளாகிறான்; அதனுல் அவரது மகள் மீராபியின் காதலே அவன் துறக்க நேரிடுகிறது.

நாடகத்துக்குத் தேவையான விசேஷத் திருப்பங்கள் எதுவும் இந்நாடகத்தில் இல்லே; சஸ்பென்சும் இல்லே. வேறு சங்கடங்களும் அதிகமாக இல்லே. ஆனுல் எப்படியோ நாடகம் மனத்தை உருக்குகிறது. பாத்திரங்களின் படைப்பில் மனம் லயித்து விடுகிறது.

அப்துலும், மீராபியும் ஒருவரை யொருவர் சிறு குழந்தைப் பிராயம் முதலே அறிந்து அன்பு கொண்டு பழகி வந்ததும், காலப் போக்கில் காதலர்களாகி வாழத் துடித்ததும் ஒரு சில காட்சிகளிலேயே தெற்றென விளங்குகிறது.

வடநாட்டிலிருந்து கிராமத்துக்குத் திரும்பிய கப்புரத்தினம் தன் தமக்கை ஊரில் ஆஸ்பத்திரி வசதி யில்லாததால் உயிர் துறக்க நேர்ந்ததைத் தன் தாயின் மூலமாக அறிந்துகொண்டு கிராமத்தைச் சீர்திருத்த முனேகிறான். நாடகத்தின் இந்த முதல் காட்சி மிகவும் உருக்கமாகப் புனேயப்பட்டிருக்கிறது.

தபால்காரர் நம்மாழ்வார் பாத்திரம் ஒரு விந்தையான படைப்பு. இரக்கமும், தெய்வ பக்தியும், நல்லதையே நினேக்கும் நற்பண்பையும் கொண்ட நல்ல மனிதன் அவன். எஸ். வி. சகஸ்ரநாமம் அந்தப் பாத்திரத்தைத் தாங்கி அதற்குத் தனி மதிப்புத் தந்துவிட்டார். அவர் கையில் வேலுடனும், முதுகில் தபால் பையுடனும், கூனிக் குறுகித் தோன்றுவதும், ஒவ்வொரு தடவையும் பாசுரத்தை முணு முணுத்துக் கொண்டே வருவதும் மறக்க முடியாதவை. இயல்பான நடிப்பு. பொருத்தமான 'மேக்கப்'.

அப்துல் பாகத்தை முத்துராமன் ஏற்று உணர்ச்சி பொங்க நடித்தார். உசேன்ஷாவிடம் சவுக்கடி வாங்கியபோதும், மீராபியை யாரும் அறியாமல் கிணற்றங்கரையில் சந்தித்துப் பேசிக் கண்ணீர் உகுத்த போதும் அவரது நடிப்பு சிறந்து விளங்கியது.

சாந்தினியின் தோற்றமே நிஜமான முஸ்லிம் பெண்ணுக மாறிவிட்டது. முதல் காட்சியில் துள்ளிக் குதித்துக் கும்மியடித்ததிலிருந்து கடைசியில் அப்துலுக்காகக் கண்ணீரும் கம்பலேயுமாகக் கலங்கி நின்றது வரையில் சாந்தினி நன்ருக நடித்தார். அவரது உணர்ச்சி மிகுந்த நடிப்பின் மூலம் மீராபியின் பாத்திரம் நன்கு களேகட்டி விட்டது.

நல்ல நடிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, கப்புரத்தினம், உசேன் ஷா, பூசாரி ஆகிய பாத்திரங்களே ஏற்ற கோபால கிருஷ்ணன், வீராசாமி, முருகன் ஆகியவர்களேக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மிகவும் நன்ருகப் பாத்திரத்தை உணர்ந்து நடித்தனர்.

சங்கரலிங்க மூப்பனுரின் தடபுடலுக்கும், அகம்பாவத்துக்கும், இறுதி மனமாற்றத்துக்கும் ஏற்றவாறு சந்திரசேகரன் நடித்தார்.



ஒரு சின்ன விஷயம் கூடக் கிராமத்தில் பெரும் போரைக் கிளப்பி விடும் என்பதை இந்த நாடகம் நன்கு விளக்குகிறது.

கடைசியில் நாடகம் மங்களமாகவே முடிந்து விடுகிறது. கிராமத்தில் புதிய பாதையும் ஏற்பட்டு விடுகிறது.

கிராமங்களில் நிகழும் பூசல்களே ஆதாரமாக வைத்துக் கொண்டு நல்லதொரு நாடகமாகப் பின்னியிருக்கும் சேவா ஸ்டேஜைச் சேர்ந்த கோமல் சுவாமிநாதன் பாராட்டுக்குரியவர்.



இப்பொழுது
நடைபெறுகிறது
சாந்தி
(ஏர்கண்டிஷன்)
ஸ்ரீ. கிருஷ்ணா
உமா
மற்ற நகரங்களிலும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
பாலும்
பழமும்
சரவணா வின் இரண்டாவது தயாரிப்பு.
தயாரிப்பு:
G.N.வேலுமணி
டைரக்ஷன்:
A.பீம்சிங்
MOHAN ARTS

வாழும் வர்ணனைகள்

4. பேராசிரியர் கல்கி

உடன்பிறந்தே வெல்லும் நோய்

குளக்கரையை அடைந்ததும் துணிகளை வரிந்து கட்டிக் கொண்டு குளிப்பதற்காகப் படிக்கட்டில் இறங்கினேம்... ஆனல் பாதிப் படிகள் இறங்கியதும் எங்கள் ஐயம் பறந்தே போய் விட்டது. ஒன்று மட்டும் உண்மை. அந்தக் குளத்து நீரில் இறங்கி விட்டால் எப்படிப்பட்ட நோயும் விடைபெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அவ்வளவு பயங்கரமான பாசியைக் கண்டு எந்த 'வியாதிதான் பயப்படாமல் இருக்க முடியும்?

அப்போது (உடன் வந்திருந்த) அறிஞர் சற்று நின்று ஏதோ யோசித்து விட்டு, "ஏன் ஐயா! எதற்காக இந்தக் குளத்தில் இப்போது குளிக்க வேண்டும்?" என்ருர்.

"இதில் குளித்தால் சகல நோய்களும் பறந்து விடும்" என்ருர் உள்ளூர்வாசி.

"ஓகோ! பார்த்தீர்களா! ஞாபக மறதியாக என்னுடைய நோயை வீட்டில் வைத்து விட்டு வந்து விட்டேன். போகட்டும், இன்னெரு முறை வரும் போது எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்றுகூறிவிட்டு அறிஞர் கரையேறினர். நாங்களும் சற்று நின்று யோசனை செய்தோம். "இவ்வளவு நாட்கள் நம்முடன் உறவு கொண்டாடி வாழும் நோய்களைக் கேவலம் இந்தப் பாசிக்கு இரையாக்கலாமோ?" என்று தோன்றிற்று. எனவே குளிக்காமலே கரையேறி விட்டோம்!

தமிழ் மணம்

"தமிழ் மணம் கமழ வேண்டும்" என்று 'மணிரங்கு' ராகத்தில் கீர்த்தனம் பாடுகிருர்களே, உண்மையில் தமிழுக்கு என்று ஒரு தனி மணம் உண்டா என்று கேட்டால் கட்டாயம் உண்டு என்று நான் தயங்காது சொல்வேன். தமிழ் மணம் என்பது புகையிலைச் சுருட்டைப்புகைக்கும் போது உண்டாகும் மணமாகவே இருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்கள் இருக்கிருர்களே, அவர்களுடைய வாய்கள் சிறிது நேரம் கூடச் சும்மா இருப்பதில்லை. ஒன்று அவை அழகிய தமிழில் 'கதைத்து'க் கொண்டிருக்கும். அல்லது நறுமணச் சுருட்டைப் புகைத்துக் கொண்டிருக்கும். அவர்கள் பேசும் தமிழில் இனிய புகை மணம் கமழும் என்பதில் ஐயமில்லை.



கோஹினூர் வைரம்

கீழ்த் திசையில் உதித்து மேலே சிறிது தூரம் பிரயாணம் செய்து வந்திருந்த விடிவெள்ளியானது உதயகன்னியின் நெற்றிச் சுட்டியில் பதித்த கோஹினூர் வைரத்தைப் போல் டால் வீசிற்று. அது மட்டுமல்லாமல் வானத்தை மறைத்திருந்த மேகத்திட்டுகள் விலகி விட்டபடியால் ஆகாச வெளியெங்கும் கோடானுகோடி வைரச் சுடர்களை வாரி இறைத்தாற் போன்ற காட்சி தோன்றியது.

வர்ணனை மின்னல்கள்

உலகம் தோன்றிய நாள் தொட்டுக் காதலர்களுக்கு வேதனை தருவதையே தொழிலாகக் கொண்ட பூரண சந்திரன்.

நீல வானத்திலிருந்து ஒரு பெரும் பருதியைப் பூமியில் வைத்தது போல் இருந்தது ஏரி.

நிலமாகிய உத்தரீயத்தின் ஓரங்களில் அமைந்த பச்சை வர்ணக் கரையைப் போல ஏரிக்கரை ஓரமாகப் பசும் புல் படர்ந்திருந்தது.

நிலாமதியின் இளங் கதிரையும், மல்லிகைப் பூவின் இன்ப மணத்தையும்; அன்னப் பட்சியின் இறகிலுள்ள மென்மையையும், இந்தோள ராகத்தின் இன்னிசையையும் கலந்து உன் தூய திருமேனியைப் பிரமன் படைத்திருக்கக் கூடும் என்று கருதினேன்.

இடறி விழுந்தால்..?

யாழ்ப்பாணத்தில் இடறி விழுந்தால்.....இது என்ன? இடறி விழுவதற்கு யாழ்ப்பாணத்துக்குப் போக வேண்டுமா? உள்ளூரிலேயே இடறி விழக் கூடாதா? விழலாம், ஐயா! விழ

லாம்! ஆனால் உள்ளூரிலே இடறி விழுந்தால் எங்கேயாவது நடுச் சாலையில் விழுந்து தொலைப்போம். ஒரு டிராம் வண்டி அல்லது ரயில் வண்டி மீது விழுந்து தொலைப்போம். வண்டிகள் வீணில் சேதமடையும். போக்குவரத்துத் தடைப்படும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இடறி விழுந்தால் ஓர் உபாத்தியாயர் அல்லது கல்விமான் மீதுதான் விழுவோம். அப்படி விழுவதினால் அவர்களுக்குச் சேதம் ஏதேனும் ஏற்பட்டால் யாரும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். ஆயிரம், பதினாயிரம் பேரில் ஒருவர் இருவர் குறைந்து போனால் என்ன பிரமாத நஷ்டம்? ஒரு வேளை நாம் இடறி விழும் போது பக்கத்தில் ஓர் ஆசிரியர் அல்லது கல்விமான் இல்லாமற் போனாலும் நாம் தரையில் விழுந்துவிட முடியாது. ஏனெனில் அப்படி நீங்கள் இடறிக் கீழே விழப் போகிறீர்கள் என்பதற்கு அறிகுறிகள் காணப்பட்டவுடன் ஒரு சுகாதார அதிகாரி ஓட்டமாய் ஓடி வந்து கீழேவிழாமல் தாங்கி எடுத்துக்கொண்டு போய்க் குப்பைத்தொட்டியில் போட்டு விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்!

பார்க்கும் பாட்டு!

கேட்கக் கூடிய பாட்டு இருக்கிறது. கேட்க முடியாத பாட்டும் இருக்கிறது. ஆனால் பார்க்கக்கூடிய பாட்டு உண்டா?

அடையாறு கலாக்ஷேத்திரத்தில் மழவராயனேந்தல் சுப்பராம பாகவதரின் கச்சேரியைக் கேட்ட பிறகு, "பார்க்கக் கூடிய பாட்டும் உண்டு" என்று எனக்குத் தெரிய வந்தது.

மழவராயனேந்தல் சுப்பராம பாகவதரின் பாட்டை, "பார்க்கக் கூடிய பாட்டு" என்று நான் சொல்லும் போது, அந்த வயோதிக வித்வானுடைய முகத் தோற்றத்தையோ, வைரக் கடுக்கனையோ குறிப்பிடவில்லை. அவர் பாட்டின் பாணியைத்தான் சொல்கிறேன்.

தள்ளாமை காரணமாக வித்வான் பாடும் போது சில சமயம் நெஞ்சை அமுக்கிக் கொள்கிறார். 'அம்மா!' 'அப்பா!' என்கிறார்.

ஆனால் என்ன அதிசயத்தைச் சொல்ல? பாடஆரம்பித்துவிட்டால், எங்கிருந்தோ ஜீவசக்தியும் நவ யௌவனமும் குரலில் வந்து விடுகின்றன.

திருமூலர் தவ மொழி

ராஜாஜி - சோமு

25

உடம்பினுள் நின்று இயக்குகிற ஆன்மாவோடு இறைவனும் உடனிருக்கிறான். அப்படி எப்போதும் உடன் நிற்கிற இறைவனுடைய சொரூபத்தை ஆன்மா அறிவதில்லை. இதைப் பாடுகிறார் திருமூலர்.

உள்ளத்து ஒருவனை
உள்ளுறு சோதியை

[உள்ளம்—ஆன்மா. ஒருவனை—ஒப்பற்ற தலைவனை. உள்ளத்து ஒருவனை—ஆன்மாவுக்குள் நிற்கிற ஒப்பற்ற தலைவனை. உள்ளுறு சோதியை—ஒளி மயமாக உள்ளே நிற்கிற அந்தப் பரஞ்சுடரை.]

உள்ளம்விட்டு ஓரடி
நீங்கா ஒருவனை

[ஓரடி நீங்கா—ஓர் அடிகூட விலகிப் போகாத இறைவனை. அதாவது சற்றும் நீங்காதவனை.]

உள்ளமும் தானும்
உடனே இருக்கினும்

ஆன்மாவும் அவனும் கூடவே இருந்தபோதிலும்.

உள்ளம் அவனை
உருஅறி யாதே

ஆன்மா இறைவனுடைய உருவத்தைத் தரிசனம் பெறுவதில்லை. அறியாமல் நிற்கிறது.

உள்ளத்து ஒருவனை
உள்ளுறு சோதியை
உள்ளம்விட்டு ஓரடி
நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும்
உடனே இருக்கினும்
உள்ளம் அவனை
உருவறி யாதே!

* * *

இந்த மாயையின் தன்மையை இன்னும் விரிவாக விளக்குகிறார் முனிவர். ஆன்மாவாக நிற்பதும் அந்தப் பரம்பொருளே என்று மேலும் விளக்கிக் காட்டுகிறார். அதற்கு அழகான ஓர் அனுபவ உபமானமும் சொல்லுகிறார்.

மண்ணொன்று தான்பல
நற்கலம் ஆயிடும்

[கலம்—பாத்திரம்]

மண் ஒன்று என்றாலும் அது ஆகும் உருவங்கள் பல.

உண்ணின்ற யோனிகள்
எல்லாம் இறைவனே

[யோனிகள்-பிறவிகள். ஆகுபெயர்.]

பல உருவங்கள் எடுத்துள்ள உயிர்கள் எல்லாம் அவனே. ஒரு மண் பல கலங்கள் ஆவதுபோல் ஒரு பரம்

பொருள் பல யோனிகள் ஆகின்றது. அதாவது பல பிறவிகளாகவும் தோற்றம் தருவது ஒரே பொருள்தான்.

கண்ணென்று தான்பல
காணும் : தனைக்காணா

[கண்ணென்று–நம் உடம்பில் பார்வைக்கு உரிய பொறியாகிய கண்ணானது. பலகாணும்–பிற பொருள்கள் பலவற்றையும் பார்க்கும். தனைக்காணா — தன்னைத்தான் பார்க்க இயலாது.]

அண்ணலும் அவ்வண்ணம்
ஆகின்றானே

[அண்ணலும்–இறைவனும். அவ்வண்ணம் ஆகி நின்றானே—அந்தக் கண்ணைப் போல் நமக்குள் நிற்கும் உயிராகிப் பிற பொருள்களைப் பார்க்குமே யன்றி, இறைவனாகிய தன்னைக் காணாமல் நிற்கிறது.]

மனித சொரூபம் எடுத்துக் கொண்ட பரம்பொருள் பிற பொருள்களை உணருமேயன்றித் தன் உண்மைச் சொரூபத்தை உணராது. மாயையினால் உண்டாகும் இந்தக் குறையை, காட்சிக்குக் கருவியாகிய கண்ணை உபமானமாக வைத்து முனிவர் விளக்குகிறார்.

மண்ணென்று தான்பல
நற்கலம் ஆயிடும்
உண்ணின்ற யோனிகள்
எல்லாம் இறைவனே
கண்ணென்று தான்பல
காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம்
ஆகின்றானே!

இந்த அற்புதமான பாட்டில் உள்ள இரண்டு சிறந்த உவமைகளோடு, 'மண்' 'கண்' என்ற இரண்டு சொற்களிலுமுள்ள எதுகையை வைத்து, மிக அழகான முறையில் முனிவர் செய்யுளுக்கு உருவம் தந்திருக்கிறார். மெய்ப் பொருள் விளக்கத்தோடு அதன் கவிதை யழகையும் உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

புது வெள்ளம்

அத்தியாயம் பதினேழு

கொள்ளைக்காரனும் வெள்ளைக்காரனும்


நேரம் சென்றதே தெரியாமல் அந்தத் தோட்டத்துத் தென்னை மரத் தடியில் நினைவிழந்த நிலையில் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் முருகையன். பண்ணையாட்கள் இருவரும் தங்களுடைய வேலைகளைக் கவனிப்பதற்காகச் சென்றனர்.

பெரியபாளையம் கிராமத்தில் இனி ஓர் அடி மண்கூட அவனுக்குச் சொந்தமில்லை என்ற செய்தியைக் கேள்வியுற்ற பிறகு அவன் வேரற்ற செடியானான். நீரிலிருந்து நிலத்தில் எடுத்தெறியப் பட்ட மீன் ஆனான். இனி அவன் எந்த வயல்களில் விதை விதைப்பது, நாற்று நடுவது, பயிர் வளர்ப்பது, களை பிடுங்குவது, அறுவடை செய்வது? எந்த மூலதனத்தை வைத்துக்கொண்டு அவன் கிராமத்தில் நெசவுத் தொழில் தொடங்குவது?

ஊரில் பலருக்கு வேலை கொடுக்கநினைத்தானே, பலருக்குச் சோறு போட நினைத்தானே, இனி அவனுக்கு வேலை கொடுப்பவர்கள் யார்? சோறு போடுபவர்கள் யார்?

முருகையனுக்குஏற்பட்ட பேரதிர்ச்சியைச் சிறிதும் சட்டை செய்யாமல் அவனுடைய வயிறு பசிக்கத் தொடங்கியது. தன்னுடைய தகப்பனார் ஊருக்கு வெளியே ஒரு களத்துமேட்டருகில் குடியிருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டதால் மெதுவாக அந்த இடத்தை விட்டு எழுந்தான் முருகையன். அவனுடைய உடைகளில் ஒட்டிக் கொண்டிருந்த தோட்டத்து மண்ணைக் கண்டவுடன் அவனுக்கு வருத்தம் தோய்ந்த சிரிப்பு வந்தது. இனியும் அந்த மண் அவனிடம் ஒட்டிக்கொள்ள விரும்புகிறதா!

திடீரென்று முருகையனுக்கு ஓர் ஆசை பிறந்தது. கீழே குனிந்து ஒரு பிடி மண்ணைக் கையிலெடுத்து உற்றுப் பார்த்தான். அந்த மண்ணை அப்படியே பழைய உறவின் நினைவுச் சின்னமாகப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டால் என்ன? வெறும் மண்ணா அது! அவ



ளைப் பெற்று, வளர்த்து, வாழ் வளித்த தாய்!

தோட்டத்தை ஒருமுறை தன் ஆவல் தீரத் திரும்பிப் பார்த்து விட்டு மெது வாக நடந்தான் முருகையன். வெளியே வரும்போது, அதன் முள் வேலியின் முனையொன்று, அவன் வேஷ்டியைப் பற்றி இழுத்தது. திடுக்கிட்டுத் திகைத் தான் அவன். - ஏன், அவனை வெளியே செல்ல விடாமல் அது தடுத்து நிறுத்து கிறது? பழகிய பாசத்தை அந்த மண்ணு லேயே மறக்க முடியவில்லையா?

'தாயே! என்னை மன்னித்து விடு, தாயே! என்னைப் போக விடு!' என்று, தனக்குள்ளாகவே ஒருமுறை சொல் லிக் கொண்டான். அந்த வேலியில் அவன் கீழே பறித்துப் போட்ட இள நீர்கள் அவன் கண்ணில் பட்டன. 'ஆமாம், நான் திருடன்! நான் திருடன்! அதனால்தான் நீ என்னைத் தடுத்து நிறுத்துகிறாய்!' என்று அலறி யது அவன் மனம்.

பாவம்! மண்ணை மாதாவாக எண் ணிக் கொண்டு வந்த பரம்பரையைச் சேர்ந்தவன் அவன். மண் எனும் பெண் ணாள் மாதாவாக இருந்திருந்தால் தனக் குப் பிறந்த மக்கள் அனைவரையுமல் லவோ வஞ்சனையின்றி வாழ வைத்திருப் பாள்? அன்னக் களஞ்சியமான அவள், எத்தனையோ சொத்துக்களுக்கு அதிபதி யான அவள், தங்கத்தையும் வைரத் தையும் தன்னிடம் மூடி மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் அவள், அவற்றை யாருக்குக் கொடுக்கிறாள்?— தன்னை விலைக்கு வாங்குகிறவர்களிடமும் தட்டிப் பறிக்கிறவர்களிடமும்கைமாறிப் போய்க் கொண்டே இருக்கும் ஒருத்தி எப்படித் தாயாவாள்? மண் என்பவள் மாதாவா, மாயமோகினியா?

'முருகையா! நீ எடுத்துக் கொண்டு போகிறாயே, அந்த ஒரு பிடி மண் இப் போது உன்னுடையதல்ல; குமரவேலி னுடையது!' என்று எச்சரிப்பதற்காகவே அவள் அவனைத் தடுத்தாளே தவிர, அவன்மீதுள்ள பாசத்தால் அல்ல.

கையில் வைத்திருந்த ஒரு பிடி மண்ணைக் கீழே போட்டான் முருகை யன். அவனது பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து இரத்தத்தோடு இரத்த மாய்க் கலந்து விட்ட உயிர் ஊற்றைக் கீழே வீசி எறிந்தான். அந்த மண் தரை யில் விழவில்லை. அவனுடைய ஆசையில், நம்பிக்கையில், பாசத்தில், பற்று தலில், எதிர்கால வாழ்க்கைத் திட்டத் தில் விழுந்தது.

வயல் வரப்புகளைக் கடந்து தள்ளா டித் தடுமாறித் தன்னுடைய புது வீட் டைத் தேடிக் கொண்டு சென்றான் முரு கையன். வழியில் எதிர்ப்பட்ட குடியான வர்கள் சிலர் அவனிடம் துக்கம் விசா ரித்தார்கள்; சிலர் குமரவேல் அப்போது ஊருக்குள் செய்து கொண்டிருந்த அக் கிரமங்களைப் பற்றி வயிறெரிந்து திட்டி னார்கள். முருகையனுக்கோ நெஞ்சு கொதித்தது; வயிறு பசித்தது.

களத்து மேட்டுக்குப் பக்கத்தில் தெரிந்த ஒரு கூரைக் குடிசைக்கு முன் னால், 'முருகன் டீக்கடை' என்ற ஒரு பலகை தொங்கியது. அதைத்தான் அவ னுடைய வீடென்று யாரோ சற்றுமுன்பு சுட்டிக் காட்டினார்கள். ஒரு கணம் அந் தப் பலகையை உற்றுப் பார்த்துவிட்டு, உள்ளே நுழைந்தான் முருகையன். கட்டிலில் சாய்ந்து கொண்டு உட்கார்ந் திருந்த ஒரு மெலிந்த உருவம், ''முரு கையா!'' என்று கிணற்றுக்குள்ளிருந்து கொண்டு பேசுவது போல் அழைத்துக் கொண்டே, அதிலிருந்து எழுந்திருக் கப் பார்த்தது. அதனால் முடியவில்லை.

ஓடிப் போய்த் தன் ஆவல் தீரத் தழுவிக் கொண்டே ''அப்பா, அப்பா!'' என்று கதறினான் முருகையன். கண்ணீ ரால் அவரைக் குளிப்பாட்டினான். அவ ருடைய உடல்போன போக்கைக் கண்டு வெகு நேரம் தேம்பினான்.

தந்தையும் மகனும் துயரத்தின் உணர்ச்சி வெள்ளப் பெருக்கில் கட் டுண்டு கிடந்தபோது, வெளியிலிருந்து திரும்பிய பாட்டி, ''இப்போ என்ன வந்திடுச்சு? ஏன் வீணாகக் கவலைப்பட றீங்க?'' என்று கேட்டு விட்டு உள்ளே நுழைந்தாள். சிவப்பிரகாசத்திடம், ''முருகையன்தான் பத்திரமாகத்திரும்பி வந்திடுச்சே. இனிமே அதோட முகத் தைப் பார்த்து நடந்ததை யெல்லாம் மறந்திடுங்க!'' என்று அன்பு கலந்த கண்டிப்போடு கட்டளையிட்டாள்.

அந்த ஒரு நாளைக்குள் முருகையன் அங்கு நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் விவரமாகத் தெரிந்து கொண்டான். குமரவேல் தாம் பல ஆண்டுகளாகக் கொடுத்து வந்த கடன் தொகைகளைப் பெருக்கிக் காட்டி, அவற்றுக்கு வட்டிக்கு வட்டிபோட்டு, சிவப்பிரகாசத்தைக் கட னுக்குச் சிறையில் தள்ளி விடுவதாகப் பயமுறுத்தி, அவருடைய சொத்துக்கள் முழுவதையும் எழுதி வாங்கிக் கொண்டு விட்டார். அத்துடன் அவர் நிற்க வில்லை. இன்னும் சில ஆயிரம் ரூபாய்கள் பாக்கி என்று கணக்குக் காட்டி, சிவப் பிரகாசத்தை நிரந்தரக் கடனாளியாக வும் செய்து வைத்திருந்தார். முருகை யனும்தான் இப்போது கடனாளி!

''அண்ணாவைச் சொல்லிக் குத்தம் இல்லே; அவர் வாழத் தெரிஞ்சவர்; நான் வாழத் தெரியாதவன்'' என்று

குமரவேலைக் குறை கூறாமல், தம்மையே குறை கூறிக் கொண்டார் சிவப்பிரகாசம். ''உழுதவன் கணக்குப் பார்த்தாலே உழவுகோல்கூட மிஞ்சாதென்று சொல்வாங்க. நான் கணக்குப் பார்க்கத் தெரியாதவன்; கடனாளியாப் போயிட்டேன்'' என்று கூறினார் அழாக்குறையாக.

தேநீர் வியாபாரம் என்பது கூடச் சிவப்பிரகாசத்தின் ஏற்பாடல்ல. பாட்டி அவரைப் பெயரளவில் முன்னே வைத்துக்கொண்டு, தன்னுடைய திறமையால் கடையை ஓட்டப் பார்த்தாள். வயல் வரப்புக்களில் வேலை செய்து களைத்தவர்கள் சிறிது நெல்லைக் கொடுத்து விட்டுத் தேநீர் பருகிச் சென்றார்கள். கடனுக்குக் குடித்தவர்களில் பாதிப் பேர் மறுபடியும் அங்கு எட்டிப் பார்ப்பதே இல்லை. அவர்களிடம் நெல்லோ பணமோ இருந்தால் தானே கொண்டு வந்து கொடுப்பதற்கு? புதுக் கடனில் குடிப்பதற்குப் புதுக் கடைகளுக்குச் சென்று விடுவார்கள்.

நான்கைந்து நாட்களுக்குப் பித்துப் பிடித்தவன் போல் வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டிருந்தான் முருகையன். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. எப்படி வாழ்வதென்று புரியவில்லை. நாட்டின் விடுதலையைப் பற்றிப் பேசிய பேச்சு, அவனைக் கல்லூரியிலிருந்து விரட்டியதுமல்லாமல் அவனுடைய சொந்த எதிர்காலத்தையுமல்லவா பாதித்துவிட்டது? படித்தவர்களுடைய ஒரே வழி அப்போது அரசாங்க உத்தியோகம். சிறைக்குப் போனவனுக்கு அங்கே வேலை கிடையாது.

முருகையனுக்கு முன்பே பெருமாள்சாமி வேறொரு ஊர்ச் சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்திருந்தான். இருவரும் ஒரு நாள் சந்தித்தார்கள். முருகையனைக் கட்டாயப்படுத்திக் கிராமத்துக்குள் இழுத்துக் கொண்டு சென்றான் பெருமாள்சாமி.

கிராமம் அதற்குள் எவ்வளவோ மாறிப் போயிருந்தது. உலகத்தின் மூலையில் எங்கோ சில பகுதிகளில் நடந்த யுத்தத்தின் கொடுமை, அந்தக் கிராமத்தில் வாழ்ந்த பெரும்பாலான மக்களின் முகங்களில் தெரிந்தது. அரசாங்கத்தாரே களங்களுக்குத் தங்கள் ஆட்களை அனுப்பி நெல்லைக் கொள்முதல் செய்து கொண்டு போனார்கள். கிராமத்தின் வீதியில் இரண்டு மூன்று இடங்களில் 'நியாய விலைக் கடை' என்னும் பலகைகள் தொங்கின. குமரவேலின் கடை முன்பு ஒரு பெரிய கூட்டமே சாமான்களை வாங்குவதற்குத் திரண்டு நின்றது.

கடை வாசலில் போர்டுகளில் ஏதேதோ எழுதிப் போட்டிருந்தார்கள். அதை முருகையனுக்குப் படித்துக் காண்பித்தான் பெருமாள்சாமி.

''சீமை எண்ணெய் கிடையாது! அரிசி தீர்ந்து போய் விட்டது!''

முருகையன் சிரித்தான். ''உள்ள சரக்குகளுக்குத்தான் விளம்பரம் செய்வார்கள். இல்லையென்பதற்கு ஏன் இந்த விளம்பரம்?''

''முருகையா! உலகப் போர் காரணமாகப் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் சாமான்களை எல்லாருக்கும் பங்கிட்டுத் தரச் சொல்லிச் சட்டம் போட்டிருக்கிறான் வெள்ளைக்காரன். அப்படிக் கொடுக்கும் உரிமைகளைக் குமரவேலும் அவருடைய கையாட்களும் எப்படியோ லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். சட்டப்படி நியாய விலைக்கு விற்றால் இவருக்குக் குறைந்த லாபம்தான் கிடைக்கும். அந்த லாபத்



தைக் கொண்டு அவர் லஞ்சம் கொடுத்த தொகையைச் சரிக்கட்டவும் முடியாது. அதனால்தான் மாய மந்திரங்கள் நடக்கின்றன. திடீர் திடீரென்று சாமான்களெல்லாம் தீர்ந்து போகின்றன.''

''புரியவில்லையே, பெருமாள்சாமி!'' என்றான் முருகையன்.

''எந்தச் சாமான்களை இல்லையென்று எழுதியிருக்கிறார்களோ, அந்தச் சாமான் நியாய விலைக்குக் கிடைக்காது என்று பொருள். ஒன்றுக்கு மூன்று பங்கு விலை கொடுக்கிறவர்களுக்கு மட்டிலும் ரகசியமான இடங்களிலிருந்து அதே சாமான்களை எடுத்துக் கொடுப்பார்கள். நியாயத்தைப் பார்த்துக் கொண்டாயா?''

''ஏன், கிராமத்து மக்கள் இதைப் பற்றிப் புகார் செய்தால் என்ன?''

''அந்த அளவுக்கு அறிவும் இல்லை; துணிவும் இல்லை. யாராவது துணிந்து செய்தால் செய்தவர்கள் குற்றவாளிகளாகி விடுவார்கள். ஆனால் நான் துணிந்து விட்டேன் முருகையா. இந்தக் குமரவேலின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்டப் போகிறேன்.''

''பெருமாள்சாமி!'' என்று கத்தினான் முருகையன்.

''வெள்ளைக்காரன் ஓரளவு மனச்சாட்சி உள்ள கொள்ளைக்காரன். அவன் போடுகிற சட்டங்களில் பாதி நியாயமாவது இருக்கிறது. அந்தச் சட்டங்களை நிறைவேற்றும் நம்மவர்கள் இருக்கிறார்களே, அவர்களில் பலர் மனச்சாட்சியில்லாத கொள்ளைக்காரர்கள். வெள்ளைக்காரன் மனிதனை வைத்துச் சாப்பிட நினைக்கிறான்; இவனோ மனிதனைப் பிய்த்துச் சாப்பிடத் துணிந்து விட்டான்.''

கிராமத்துக்குள் மறைமுகமான நரபலி நடப்பது போன்ற ஒரு பயங்கர உணர்ச்சி முருகையனுக்கு அப்போது ஏற்பட்டது. வலிமையுள்ள மனிதன் எளிய மனிதனை மென்று தின்னத் தொடங்கி விட்டான்.


அத்தியாயம் பதினெட்டு

செல்வரத்தினம்

பெரும்பாலான மனிதர்கள் அவரவர்களுடைய சொந்த வாழ்க்கையைக் கொண்டுதான் சுற்றியிருக்கும் உலகை அளவிடுகிறார்கள். தங்களைவிட உயர்ந்து விட்டவர்களை நினைத்து ஏங்குகிறவர்கள் பலர்; தாழ்ந்த நிலையிலிருப்பவர்களைக் கண்டு இரங்குகிறவர்கள் சிலர்.

'மாடி வீட்டுத் தம்பி'யாக முருகையன் இருந்தபோது, அவன் மாடியின் உச்சியிலிருந்து கொண்டுதான் தன்னுடைய கிராமத்து ஏழை மக்களின் நிலையைக் கண்டு இரக்கப்பட்டான். ஆனால் அவர்களுடைய அன்றாட வாழ்க்கை எவ்வளவு துன்பம் நிறைந்தது என்பது, அவனும் அவர்களில் ஒருவனாக மாறிய பின்னரே தெளிவாகத் தெரிந்தது.

கிராமத்தின் மதிப்புக்குரிய மாடி வீட்டுப் பிள்ளையாக இருந்தவன் இப்போது களத்துமேட்டுக் கந்தனின் நிலைமைக்கு வந்து விட்டான். என்றாலும் ஏழைகள் அவனைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளவில்லை. அவன் படித்தவன்; பணக்காரனாக இருந்தவன். பண வசதி படைத்த ஒரு சிலரோ அவனைக் கண்டு முகம் திருப்பிக் கொண்டார்கள். அவன் இரண்டுங்கெட்டான் இளைஞன் ஆனான்;



உழைப்பவர்களும் அவனைச் சேர்த்துக் கொள்ளவில்லை. உத்தரவிடுபவர்களும் ஒதுக்கித் தள்ளினார்கள்.

மாட்டுத் தொழுவங்களைவிடக் கேவலமான குடிசைகளில் உழவர்கள் வாழ்ந்தார்கள். மாடுகளுக்கும் கன்றுகளுக்குமாவது வேளா வேளைகளில் புல்லும் தண்ணீரும் கிடைத்தன. மனிதர்களுக்கு அதுவுமில்லை. வேலைக்குக் கூலியாக முன்பு நெல்லைக் கொடுத்தவர்கள், இப்போது பணத்தைக் கொடுத்தார்கள்.

அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் குமரவேலின் கடைக்கு வந்து 'ரேஷன் அரிசி' கேட்டபோது, அவர்களுக்குக்கிடைத்த பதில் என்னதெரியுமா?

''கம்பங்கூழையும் கேப்பைக் கூழையும் கரைச்சுக் குடிச்ச பயல்களுக்குக் கையிலே நாலு கிடைச்சா அவன் சும்மாயிருப்பானா? நெல்லைப் போட்டுவிட்டுக் கம்பு வாங்கிட்டுப் போன பயல்கள் இப்ப என்னிடம் காசு நீட்டி அரிசி கேட்க வந்திட்டான்.''

நெற் களஞ்சியங்களையே உற்பத்தி செய்து வந்தவர்கள் அரிசிச் சோறு சாப்பிடத் தொடங்கியது எவ்வளவு அபாயகரமான விஷயம்! பங்கிட்டு அரிசியைப் பதுக்கி விற்பதற்காக அவர் மேற்கொண்ட வியாபார தந்திரங்களில் ஒன்று இது.

முருகையன் வீட்டுக்குள்ளேயும் அரிசிப் பஞ்சம் நுழைந்து விட்டது. குன்றுகளைப் போல் களங்களில் போர்களைக் குவித்து வைத்திருந்த சிவப்பிரகாசத்தின் வீட்டுக் கலயத்தில் உழக்கரிசி இப்போது இல்லை. முதன் முதலாகப் பாட்டி முருகையனுக்கு முன்னால் கம்பங் கூழைக் கரைத்துக் கொண்டு வந்து வைத்து விட்டு, அவனுக்குத் தெரியாமல் தன் கண்களைத் துடைத்துக்கொள்ள முயன்றாள்.

முருகையன் சிரித்தான். ''ஊருக்கு உள்ளது நமக்கும் வந்து விட்டுப் போகிறது, பாட்டி! தைரியமாக இருங்கள். இந்த நாட்டுக்கு விடுதலை கிடைத்து விட்டால் எல்லாருக்கும் வேலையும் கிடைக்கும்; சோறும் கிடைக்கும்.''

பாட்டிக்குத் தெம்பு கொடுத்த பேரனால் உண்மையிலேயே அந்தக் கூழைக் குடிக்க முடியவில்லை. பழக்கமில்லாத உணவு அவனை என்னவோ செய்தது. அது வயிற்றுக்குள்ளிருந்தபோது அதைக் குடித்துக் கொண்டே வாழ்நாளைக் கழித்து வரும் மற்றவர்களைப் பற்றி நினைத்தான்.

உழவுத் தொழில் செய்தவர்களுக்கு ஆண்டில் பல மாதங்களுக்கு வேறு வழியில்லை. சோம்பலும், மரத்தடிப் பேச்சுக்களும், வேண்டாத விவகாரங்களும் எங்கும் நிலவியிருந்தன. பெருமாள் சாமி இடையில் சிறைக்குப் போய்விட்டதால் ராட்டினம் சுற்றி வந்தவர்களும் அவற்றைத் தூக்கி மூலையில் போட்டு விட்டார்கள். திரும்பவும் அவர்களிடம் வந்து உற்சாகமூட்டி உழைப்பைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தான் அவன். அத்துடன் நிறுத்தாமல் குமரவேல் போன்றவர்களின் செய்கைகளையும் எடுத்து விளக்கலானான்.

முருகையனுக்குக் குளித்தலையிலோ, கரூரிலோ ஏதாவது ஒரு வேலை தேடிக் கொடுக்கும்படி குமரவேலிடம் கேட்டார் சிவப்பிரகாசம். அல்லது அவருடைய கடையிலாவது வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி வேண்டினார்.

''எல்லாத்தையும் எங்கிட்டேயிருந்து எடுத்துக்கிட்டிங்க. அவனுக்குப் பிழைப்புக்கு ஒரு வழி காட்டினால் அதுவே எனக்குப் பெரிய உதவி'' என்றார்.

''எந்த இடத்திலேயும் முருகையனுக்கு வேலை கொடுக்கச் சொல்ல முடியாது. போன அங்கே என் பெயரைக் கெடுத்துட்டு வந்துவிடுவான். அப்படிப் பட்டவனை நான் மட்டும் வேலைக்கு வச்சுக்கலாமா தம்பி?'' என்று நியாயம் பேசினார் அவர்.

வேலையில்லாத முருகையனுடைய நேரம் அடிக்கடி பெருமாள்சாமியுடன் கழிந்தது. இருவரையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்த போதெல்லாம் குமரவேல் காரணமின்றிப் பயந்தார். 'ஏதாவது ஒரு வழி செய்து இந்தப் பயல்களை ஊரை விட்டு விரட்ட வேண்டும்' என்ற எண்ணம் அவருக்கு வந்துவிட்டது.

ஒரு நாள் கிராமத்துச் சாலையில் முருகையன் தனியே நடந்து சென்றபோது, அவன் எதிரில் ஒரு சின்னஞ்சிறு கார் வந்து நின்றது. புத்தம் புதிய கார். ஏதோ நினைவாக இருந்த முருகையன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

காரோட்டிக் கொண்டு வந்த குமரவேலின் மகன் செல்வரத்தினம் கீழே இறங்கினான். முருகையனின் தோள் மீது கை வைத்து, ''முருகையா! நானே உன்னைப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன். காரில் ஏறிக் கொள். எங்கேயாவது போய்ப் பேசுவோம்'' என்றான்.

வெள்ளைக்காரன் போல் உடை உடுத்துக் கொண்டு, செல்வத்தின் வளம் உடலில் மினுமினுக்கத் தன் முன்னே நின்ற செல்வரத்தினத்தை எவ்வித உணர்ச்சியுமின்றி உற்றுப் பார்த்தான் முருகையன். முருகையனை விட அவன் வயதில் மூத்தவன் என்றாலும் இருவருமே சிறு வயதில் ஒன்றாக ஓடி விளையாடியவர்கள். முருகையனுக்கு அவனைக் கண்டவுடன் பேச நா எழவில்லை.

''என்ன முருகையா! ஏன் பேசமாட்டேனென்கிறாய்? என் மீது கோபமா?'' என்று கேட்டான் செல்வரத்தினம்.

''கார் எப்போது வாங்கினாய்?'' என்று கேட்டான் முருகையன்.

''இன்ஜினீயரிங் கல்லூரியில் படித்துத் தேறி விட்டேன். வேலையும் கிடைத்து விட்டது. அதனால் அப்பா கார் வாங்கிக் கொடுத்திருக்கிறார்.''

''மகிழ்ச்சியடைகிறேன், ரத்தினம்!'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறி விட்டு, ''சரி, நான் வருகிறேன்'' என்று வேகமாகத் தன் வழியில் நடந்தான் முருகையன்.

''முருகையா!'' என்று செல்வரத்தினம் ஓடிச் சென்று அவனைப் பற்றி இழுத்தான். ''காருக்கு வா, சிறிது நேரம் பேசி விட்டுப் போகலாம்.''

''வேண்டாம், இனிமேல் நாம் எதையும் பேசிக் கொள்ளாமல் இருப்பதே இருவருக்கும் நல்லது. நீ உன் வழியில் போ; நான் என் வழியில் போகிறேன்.''

முருகையனுக்கு முன்னால் ரத்தினம் தான் ஒரு குற்றவாளி என்று உணர்ந்தான். முருகையனின் குடும்பத்துக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு அவனையறியாமலே தான் ஒரு காரணமாகி விட்டது போல் அவன் மனம் உறுத்தியது.

''என் அப்பா உங்களுக்குத் துரோகம் செய்து விட்டார் முருகையா! அது எனக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது தெரியுமா? ஆனால் அவரிடம் எதையுமே என்னால் தட்டிப் பேச முடியவில்லை.'' செல்வரத்தினம் நாத் தழுதழுக்க இதைக் கூறி விட்டுத் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''என்னுடைய அப்பா கடன் வாங்குவார் என்று எனக்குத் தெரியாது. அதற்காக உன்னுடைய அப்பா இப்படிச் செய்வாரென்றும் தெரியாது. நடந்ததை இனி கிளற வேண்டாம், ரத்தினம்!''

செல்வரத்தினம் முருகையனைப் பிடிவாதமாகக் காரில் ஏறச் சொல்லிக் கொண்டிருந்தான். முருகையன் பிடிவாதமாக மறுத்தான். இந்தச் சமயத்தில் பெருமாள்சாமியின் ஒற்றை மாட்டு வண்டி அவர்களுக்கு முன்னால் வந்து நின்றது. செல்வரத்தினத்தைக் கண்டவுடன் அவன் கோபமாக உருட்டி விழித்து விட்டுத் தரையில் காறித் துப்பினான்.

''முருகையா! சீமான் வீட்டுப் பிள்ளையோடு உனக்கு நடுத்தெருவில் என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? வண்டியில் ஏறு, போகலாம்.''

''பெருமாள்சாமி! இது உனக்கு நியாயமில்லை'' என்றான் முருகையன். ''ரத்தினத்திடம் உனக்கென்ன விரோதம்?'' என்றான்.

''எனக்கென்ன விரோதம்? இவனுடைய இந்தக் கார் இருக்கிறதே, இது உங்கள் வீட்டுச் சொத்தைக் கொள்ளையடித்து வாங்கிய கார். இதற்குப் பெட்ரோல் ஊற்றுகிறானே இவன், அது இந்தக் கிராமத்து மனிதர்களின் ரத்தம்!''

முருகையன் பெருமாள்சாமியை அதட்டினான். ஆனால், செல்வரத்தினமோ சிறிதும் ஆத்திரப்படவில்லை. ''அவன் பேசி விட்டுப் போகட்டும், முருகையா! அவன் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. நான் என் அப்பாவுக்கு மகனாய்ப் பிறந்தது என் குற்றமில்லையே!''

''ஏன் அவரை நீ தடுத்து நிறுத்தினால் என்ன? அவர் செய்கிற பித்தலாட்டங்களை வெளிப்படுத்தினால் என்ன?'' என்றான் பெருமாள்சாமி.

''அதற்கு எனக்குத் துணிவுமில்லை; மனமும் இல்லை. என்ன இருந்தாலும் அவர் என் தகப்பனார். என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருப்பதற்கு அவர்தான் காரணம்.''

''முருகையன் இந்த நிலைக்கு வந்திருப்பதற்கு வேறு யார் காரணம்?''

செல்வரத்தினம் பதிலளிக்கவில்லை. பெருமாள்சாமியே மேலும் பேசினான்: ''இவனுடைய அப்பாவுக்கு உன் அப்பா தானே மந்திரியாக இருந்தார்? ஏன் அவருக்குச் சிக்கனமாய் வாழச் சொல்லிக் கொடுத்திருக்கக் கூடாது? ஏன் அவருக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தியிருக்கக் கூடாது? அப்படிக் கொடுத்தாலும் ஏன் பொய்க் கணக்கு எழுதி அவரைப் பாதாளத்தில் தள்ளணும்?''

''முருகையா! நீ வருகிறாயா, இல்லையா?'' என்று கேட்டு விட்டு, முருகையன் வாராததால், வருத்தத்துடன் காரில் கிளம்பினான் செல்வரத்தினம்.

அதே போல் பெருமாள்சாமியும் கேட்டு விட்டு, முருகையன் மறுத்ததால் தன் வண்டியை எதிர்ப்பக்கம் தட்டி விட்டான். போகிற போக்கில், ''சீக்கிரமே அந்தக் குமரவேலுக்கு இந்த ஊரில் என்ன கதி நேரப் போகிறது, பார்!'' என்று கத்தினான்.

கார் ஒருபுறம் சிட்டெனப் பறந்தது. மாட்டு வண்டி மறுபுறம் தரை அதிரச் சென்றது. இடையில் நின்ற முருகையன் இரண்டையும் மாறி மாறிப் பார்த்தான். (தொடரும்)

மணிபல்லவம்



நா. பார்த்தசாரதி

12 - குறுகிய பார்வை

இந்திர விழாவின் இரண்டாவது நாள் காலையில் நாளங்காடியில் இவ்வளவு நிகழ்ச்சிகளும் பரபரப்பாக நிகழ்ந்து கொண்டிருந்தபோது இவற்றுக்குக் காரணமான இருவரோ பட்டினப்பாக்கத்துப் பெரு மாளிகையிலிருந்தே வெளியேறாமல் தங்களுக்குள் அந்தரங்கமாகப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

வெயில் குறைவாக இருந்த அந்தக் காலை நேரத்தில் மேக மூட்டத்தினால் கவிந்திருந்த வானத்தின் கீழே பட்டினப்பாக்கத்துப் பெரு மாளிகையின் ஏழாவது மாடத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள் பெருநிதிச் செல்வரும், நகைவேழம்பரும். தாங்கள் நின்று கொண்டிருந்த உயரத்திலிருந்து பார்த்தபோது கடல், காவிரிப்பூம்பட்டின நகர் ஆகியவற்றின் தோற்றம் கீழே அவர்களுக்கு மிகத் தாழ்ந்து தெரிந்தது. தொலைவில் நீல நிறம் கன்றிப் பாளம் பாளமாக மின்னும் கடல் அலைகள்வரை நீண்டு படரும் பார்வையைத் திருப்பிக் கொண்டு பக்கத்தில் நின்ற நகைவேழம்பரைப் பார்த்துக் கேட்டார் பெருநிதிச் செல்வர்:

''சமய நூல்களின் முடிந்த பயன் மோட்சத்துக்குப் போவது தானே? அந்தப் பயன் இதற்குள் அவனுக்குக் கிடைத்திருக்கும். பூக்குடலைக்குள் சிறைப்பட்டுக் கிடந்த கரு நாகம் குடலை கவிழ்ந்ததும் சீறிக் கொண்டு பாய்ந்திருக்கும். நாம் எதிர்பார்த்த காரியத்தையும் தவறாமல் செய்திருக்கும்.''

''ஆனால் பூக்குடலையைச் சுமந்து கொண்டு போனவனைத் தவிர மற்றவர்கள் ஒன்றும் புரியாமல் திடுக்கிட்டுப் போயிருப்பார்கள். பாவம்! உங்கள் பெண் சுரமஞ்சரி நன்றாக ஏமாந்து போயிருப்பாள். தன் மனத்தைக் கவர்ந்தவனுடைய பாதங்களில் மலர்களைக் குவிக்கப் போவதாய் எண்ணிக் கொண்டு சென்றிருப்பாள்.''

''எல்லாம் உங்களுடைய சூழ்ச்சிப் பயன்தான் நகைவேழம்பரே! அழிப்பதற்கும், கெடுப்பதற்கும், பாழாக்குவதற்கும் வேண்டிய சிந்தனைகளை நயமாக உருவாக்கிச் சொல்வதில் உங்களுக்கு இணைதான் இல்லவே இல்லையே?'' என்று பெருநிதிச் செல்வர் கூறிய வார்த்தைகளில் பாராட்டோடு சிறிது குத்தலும் இருப்பதை நகைவேழம்பர் உணர்ந்தார். அதாவது, 'உன்னை வைத்து ஆதரித்து வளர்த்துக் கொண்டு வரும் என்னைக் கவிழ்க்க வேண்டுமென்று உனக்குத் தோன்றினால்கூட அதற்கும் இப்படி ஏதாவது நயமான சூழ்ச்சியைச் செய்வதற்கு நீ தயங்க மாட்டாய்'– என்று அவருடைய வார்த்தைகளில் தனக்கு' ஒரு தொனி இருப்பதை நகைவேழம்பரால் ஊடுருவிக் காண முடிந்தது.

''சூழ்ச்சிகளைக் கேட்பதற்கும், செயலாக்குவதற்கும் உங்களைப் போல் துணிந்த கட்டைகள் இருக்கும்போது நான் சொல்லிக் கொடுப்பதுதானா பெரிய காரியம்?'' என்று தொனிப் பொருள் உள்ளடங்குகிற விதத்திலேயே பதிலும் கூறினார் நகைவேழம்பர். 'துணிந்த கட்டை' — என்ற பதச் சேர்க்கைக்கு மட்டும் 'துணிவில்லாத கட்டை' என்கிற குறிப்புக் கொடுத்து ஒலித்தாற் போலிருந்தது.

தங்கள் இருவருக்கும் இடையே உரையாடல் தொடங்கியதும் தொடர்வதும் விரும்பத் தக்க வழியில் அமைந்ததாகப் படாததனால் பேச்சை நிறுத்திக் கொண்டு மறுபடியும் பார்வையைத் தொலைவில் கடல் அலைகள் வரை படர விட்டார் பெருநிதிச் செல்வர். ஆனால் நகைவேழம்பர் அவரை அப்படியே விடவில்லை. உரையாடலைத்

தொடர்வதன் மூலமாக அவருடைய கவனத்தை மறுபடியும் தம் பக்கமாகத் திருப்பினார்.

''இப்போது செய்திருக்கும் சூழ்ச்சியில் இரண்டு வகையிலும் பயன் உண்டு. யார் கடியுண்டு சாக வேண்டுமென்று பாம்பை மலர்களில் சிறை செய்து அனுப்பினோமோ, அவனைக் கடிக்காமலே அது அடிபட்டு இறந்து போனாலும், வேறு ஒரு பயன் நாம் நினைத்தது போல் விளையும். அந்தப் பயல் உங்கள் புதல்வி சுரமஞ்சரியை இனிமேல் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான்: 'சுரமஞ்சரி மிகக் கொடியவள்' என்று இந்த நிகழ்ச்சி அவனை எண்ணச் செய்யும்....''

''எப்படிச் செய்யுமோ? எப்படிச் செய்யாமற் போகுமோ? 'பாம்போடு விளையாடுவது' என்று கேள்விப்பட்டதில்லையா? என்ன நடந்ததென்று முடிவாகத் தெரிகிற வரை என் நெஞ்சு அடித்துக் கொண்டு தான் இருக்கும். அந்தப் பூக்குடலையைச் சுமந்துகொண்டு போன யவனத் தடியனிடம் நன்றாகச் சொல்லியிருக்கிறீரோ, இல்லையோ? அயர்ந்து மறந்து குடலையை அவன் இந்தப் பெண்களில் யார் கையிலாவது கொடுத்துத் தொலைக்காமல் இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை...''

''எதை எதிர்பார்த்துச் செய்கிறோமோ அதுவே நடக்குமென்று பிடிவாதமாக நம்புவதோடு சிந்தனையை நிறுத்திக்கொள்ளுங்கள். அதற்குமேலும் ஒரு படி அதிகமாகப் போய் 'இப்படியும் இது நடக்கலாமோ?' என்று நினைத்தாலே வம்புதான். வேறு வேறு கோணங்களில் மாற்றிச் சிந்திக்கும் போது கவலையும் பயமும்தான் அதிகமாகும். அதிகமாகச் சிந்தனை செய்தால் அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியம் உண்டாகும்.....''

''இது நீர் அடிக்கடி சொல்லுகிற வார்த்தை தான், நகைவேழம்பரே. ஆனால் 'எதை எதிர்பார்த்துச் செய்கிறோமோ அதுவே நடக்கும்' என்று எதிர்பார்த்து இரண்டு மூன்று முறை ஏமாந்து விட்டோம் நாம். சுடுகாட்டுக் கோட்டத்துப் பேய் மகளாகிய பைரவியே எதிர்பார்த்ததைச் செய்ய முடியாமல் அலறிக் கொண்டு ஓடி வந்ததை அதற்குள் மறந்து போய்விட்டீரா?'' என்றார் பெருநிதிச் செல்வர்.

மேக மூட்டம் கலைந்து மேல் மாடத்தில் வெயில் பரந்தது. நகைவேழம்பர் மறுமொழி கூறாமல் இருந்தார். தொலைவில் கடல் அலைகள் வெள்ளியம் உருகினாற் போல் நன்றாக மின்னின. நகரத்தின் நாற்புறமும் மரங்களிலும் மன்றங்களிலும் சிறு வீடுகளிலும் பெருமாளிகைகளிலும், அரண்மனைகளிலும், ஆலயங்களிலும் இந்திர விழாவுக்காக ஏற்றிய கொடிகள் வெயிலில் பட்டொளி வீசின. தனித்தன்மை தெரியாமல் கலப்புற்ற பலவகை ஒலிகள் காற்றில் மிதந்து வந்தன. கண்களுக்கு எட்டின தொலைவில் தென்பட்ட நாளங்காடி மரக் கூட்டத்தின் மேற்பரப்பைப் பார்த்த போது அவற்றின் கீழேயிருந்து பாம்பு கடிக்கப் பெற்று அலறும் இளைஞன் ஒருவனுடைய குரல் பெரிதாய் எழுந்து ஒலித்து நகரத்தின் நான்கு காதமும் பரவுவது போன்ற பிரமையை உணர்ந்தார் பெருநிதிச் செல்வர். நாளங்காடியில் ஒலிக்கின்ற குரல் அந்த மரக் கூட்டத்தைக் கடந்து இவ்வளவு தொலைவுக்குக் கேட்காதென்று நிச்சயமாகத்



மயிலை ஆர். ஆர். சபாவில் சென்ற மாதம் என். சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி குமாரி மாலதியின் அரங்கேற்றம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. குமாரி மாலதி வழுவூர் இராமையாப் பிள்ளை அவர்களின் மாணவி. திரு ஈ. கிருஷ்ணய்யர் இவரது பரத நாட்டியத்தைப் பாராட்டிப் பேசினார்.

தெரிந்திருந்தும் அப்படிக் கேட்பதுபோல அவர் நினைத்துப் பார்க்க விரும்பியதாலோ அல்லது செய்த கொடுமையின் பயத்தினாலோ அந்தப் பிரமை உண்டாகியது. பூம்புகார் நகரத்திலேயே உயரமான 'நிழல் கால் நெடுங்கல் நின்ற மன்றம்' என்ற சதுக்கத்தின் தூண், நகர்ப் பரப்பின் ஒரு பகுதியில் தனியாகத் தெரிந்தது. இன்னொரு பக்கம் தரை வழியாகப் பூம்புகாருக்கு வருவோர் நுழையும் கட்டளை வாயில் தொலைவில் தோன்றியது. 'இந்த இடத்துக்கு உள்ளே இனிமேல் சோழ நாட்டுக் கோநகரத்தின் கட்டளைக்கு உட்படுகிறீர்கள்' என்று வருகிறவர்களுக்கு எல்லாம் தன் பெயராலேயே சொல்லுவது போலக் கட்டளை வாயில் என்று அழைக்கப்பட்டுக் கொண்டிருந்தது அது. வேறு எதைப் பேசி நகைவேழம்பரோடு உரையாடலை வளர்ப்பதென்று தோன்றாமல் முன்பு பார்த்துக் கொண்டிருந்த திசையிலிருந்து திரும்பி நெடுந்தூண் நின்ற மன்றத்தையும், வெளிப் பக்கம் போகிறவனுக்கு அந்தக் கோநகரத்தின் கட்டளைகள் முடிகிற இடமாகவும் உள்ளே வருகிறவனுக்கு அதே கட்டளைகள் தொடங்குகிற இடமாகவும் இருந்த கட்டளை வாயிலையும் மாறி மாறிப் பார்த்தார் பெருநிதிச்செல்வர்.



நாமக்கல் பிரபல அட்வகேட் திரு ஆர். ரங்கசாமி அய்யர் அவர்களின் ஷஷ்டி அப்த பூர்த்தி செப்டம்பர் 11ந் தேதி விமரிசையாக நடைபெற்றது. காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ராம நாமம் பொறித்த சால்வை யொன்றை அனுப்பி. தம்பதிகளுக்கு ஆசியருளினார்.

'உண்மைகள் எல்லாம் வெளிப்படுமானால் இவ்வளவு உயரமான மாளிகையின் மேலிருந்து இந்த அழகிய நகரத்தைப் பார்க்க முடியாதவனாகப் போய் விடுவேன் நான்' என்று ஒரு கணம் நினைக்க வேண்டாததும், நினைத்தாற் கசப்புத் தருவதுமான ஞாபகம் ஒன்று தன்னைப் பற்றியே அவருக்கு உண்டாயிற்று. மேல் மாடத்திலிருந்து கீழே இறங்கிப் போனாலொழிய அந்த ஞாபகத்தை மறைக்க முடியாததுபோலிருந்தது. கண்ணுக்கு முன்னால் தென்படும் விரிவான காட்சிகளிலிருந்து பார்வையைக் குறுக்கிக் கொண்டு விரிவாக எதுவும் தென்படாத இடமாகத் தேடி மாளிகையின் கீழ்ப் பகுதிக்குப் போய் விட்டால் நிம்மதியாக இருக்கலாமென அவர் எண்ணினார். பூனை கண்ணை மூடிக் கொள்வது போல் மனத்தில் எண்ணமாய் இறுகியிருந்த புற்றுக்களை உடைத்துக் கொண்டு கிளர்ந்த பழைய பாவ உணர்வுகளை ஒளித்து வைக்க ஏதோ ஓர் இருள் — அந்தச் சமயத்தில் அவருக்குத் தேவையாக இருந்தது. பார்வையையும் பார்க்கப்படுகிறவற்றையும் குறுக்கிக் கொண்டு விட்டாலே அந்த இருள் கிடைக்கும் என்று நம்பியவராய் ''வெப்பம் மிகுதியாகி விட்டது. கீழே போகலாம்! வாருங்கள்'' என்று நகைவேழம்பரையும் அழைத்துக் கொண்டு படிகளில் இறங்கினார் பெருநிதிச் செல்வர். அப்படி இறங்கிக் கீழே செல்லும் சமயத்தில் கடுகாட்டுக் கோட்டத்திலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும் போது நகைவேழம்பர் தன்னைக் கேட்ட கேள்வி யொன்றை மீண்டும் நினைவு கூர்ந்தார் அவர்.

''பயப்படுகிற எதையுமே நீங்கள் செய்வது இல்லையோ?'' — இந்தக் கேள்வியைத் தொடர்ந்து ஒற்றைக் கண் கொலைகாரன் இதைச் சொல்லியதன் மூலமாகத் தனக்கு எதை ஞாபகப்படுத்த விரும்பினான் என்ற சந்தேகம் மீண்டும் வந்தது. தன்னுடைய வாழ்க்கை இரகசியம் மட்டுமல்லாமல் வேறு பல இரகசியங்களையும் இந்தக் கேள்வி அடக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவர் உணர்ந்தார். அந்த இரகசியங்களில் பெரும் பகுதி அவரைப்போலவே நகைவேழம்பருக்கும் தெரிந்தவை என்பதனால்தான் கேள்வியினால் ஞாபகப் படுத்தப் பெறுகிற 'பயங்கர நிகழ்ச்சி'— எதுவாக இருக்குமென்று அவர் சந்தேகப்பட்டார். நகைவேழம்பரும், பெருநிதிச் செல்வரும் கீழே இறங்கி, மாளிகையின் முன் பகுதிக்கு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் பூக்குடலையைச் சுமந்து கொண்டு போன யவனப் பணியாளன் வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்து அவர்களுக்கு முன்னால் நின்றான்.

நெஞ்சு வேகமாக அடித்துக்கொள்ள மனமும், கைகால்களும் நடுங்கிப் பதற,



Arvind
QUALITY FABRICS
•SANFORIZED•
REGISTERED TRADE MARK
மர்ஸிரைஸ்ட் சான்பொரைஸ்ட்
வெள்ளை பாப்ளின்
கோல்ட் டிரிங்
மர்ஸிரைஸ்ட் சான்பொரைஸ்ட்
கலர் பாப்ளின் ப்ளூபெர்ட்
சலவை செய்யப்பட்ட
கேமபிரிக்
J 173 (ரிஜிஸ்.)
சலவை செய்யப்பட்ட
வேஷ்டிகள்
ஸொலிஸிட்டர் (ரிஜிஸ்.)
புட்டாஸ்
அரவிந்த் மில்ஸ் லிட்.
REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'



பளிங்குபோன்ற
பற்களுக்கும்,
சுத்தமான
சுவாசத்திற்கும்
Remy
TOOTH
PASTE
Remy
TOOTH
POWDER
ரெமி
டூத் பேஸ்ட்
(அஸுலின் கலந்தது)
பவுடராகவும் டின்களில் கிடைக்கும்

''போன காரியம் என்ன ஆயிற்று?'' என்று அவனைக் கேட்டார் பெருநிதிச் செல்வர். அவன் நாளங்காடியில் நடந்ததை எல்லாம் சொன்னான். சுரமஞ்சரி, வானவல்லி முதலியவர்கள் பூக்குடலை கீழே விழுந்ததும் ஏற்பட்ட பரபரப்பிலேயே அந்தப் பணியாளன் ஓடிவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்தாலும், அவன் அதற்கு அப்புறமும் நடந்தவற்றை அங்கிருந்து கவனித்து விட்டே வந்திருந்தான். பூக்குடலையுடனே அங்கே போனதிலிருந்து சுரமஞ்சரி பல்லக்கின் அருகே வந்து தன் அணிகலன்களைக் கழற்றி எறிந்து, 'மாளிகைக்கு வரமாட்டேன்' என்று இப்போது முரண்டு பிடித்துக்கொண்டிருப்பது வரை எல்லாவற்றையும் அவருக்குச் சொன்னான் யவனப் பணியாளன்.

''பாம்பாட்டிக்குக் கொடுத்தனுப்பிய பொற்கழஞ்சுகள் தண்டமாகப் போனதுதான் கண்ட பயன்'' என்று நகைவேழம்பருக்கு உறைக்கிறாற்போல அவரைப் பார்த்துச் சினத்தோடு இரைந்துசொன்னார் பெருநிதிச்செல்வர்.

''நான் என்ன செய்வேன்? எல்லா இடத்திலும் அந்த ஆலமுற்றத்து முரடன் உதவிக்கு வந்து நின்று காரியத்தைக் கெடுக்கிறானே?'' என்று பதிலுக்குச் சீறினார் நகைவேழம்பர். ''தேரில் குதிரையைப் பூட்டிக் கொண்டு வாரும். அந்தப் பெண் எதையாவது உளறி, அங்கே நாளங்காடிக் கூட்டத்தில் என் மானத்தைக் கப்பலேற்றி வைக்கப்போகிறாள். உடனே போய் அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு வரலாம்'' என்று அப்போதே நாளங்காடிக்குப் போவதற்குப் பறந்தார் பெருநிதிச் செல்வர். அவர் அவசரப் படுத்தியதற்குச் செவிசாய்த்தும் அவசரம் அடையாதது போல — அதே சமயத்தில் அந்தக் கட்டளையை மறுக்கவும் துணியாதவராக நகைவேழம்பர் தமது இயல்பான நடையிலேயே தேரில் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு வருவதற்காகச் சென்றார். வந்து நிற்கும் பணியாளனுக்கு முன்னால் அவர் இப்படி அலட்சியமாக நடந்து கொண்டது பெருநிதிச் செல்வரைத் திகைக்கச் செய்தது.

13 — உள்ளக்கனலும் நெல்லிக்கனியும்

கெட்ட கனவு கண்டது போல இவ்வளவும் நடந்து முடிந்ததும் சுரமஞ்சரி முதலியவர்கள் பல்லக்கை நோக்கிச் சென்ற பின்னர் கூட்டத்தில் இருந்தவர்கள் இளங்குமரனை மிக அருகில் நெருங்கி மொய்த்துக் கொண்டுவிட்டார்கள். நெற்றிப் பொருத்தில் இரத்தம் கசிய நின்று கொண்டிருந்த அவன் நீலநாகமறவர் மேல் சாய்ந்தாற்போல் இருந்தான். அன்று காலை படைக்கலச் சாலையிலிருந்து நாளங்காடிக்குப் புறப்பட்டபோது தண்ணீரும் பருகாத வெறும் வயிற்றோடு புறப்பட்டிருந்தான் அவன். பசிச் சோர்வும் சேர்ந்துகொண்டது. நெற்றியில் இரத்தம் கசிவதைத் தமது மேலாடையால் துடைத்துவிட்டார் நீலநாக மறவர். கூட்டமே இளங்குமரனுக்காக அலமந்தது. அலைபாய்ந்து பரிந்தது. பதறியது.

''பாவி! இத்துணைப் பொறுமை ஆகுமாடா உனக்கு? இவ்வளவு கெட்ட எண்ணத்தோடு வந்தவர்களைச் சுகமாகத் திரும்பிப் போக விட்டு விட்டாயே? அப்படியே கழுத்தை முறித்துப் போட்டிருக்க வேண்டாமோ?'' என்று அவன் மேலுள்ள அன்பை அவனுக்கு வேண்டாதது செய்தவர்களிடம் வைரம் பாராட்டுவது மூலமாகக் காட்டிக் குமுறிக் கொண்டிருந்தார் நீலநாக மறவர்.

சில நாழிகைக்கு முன் இளங்குமரனோடு சமய வாதம் புரிந்து தோற்ற சாங்கியன் கூட இப்போது அநுதாபம் பொங்க அருகில் நின்றான். அவன் நீலநாகரைப் பார்த்துச் சொல்லலானான்:

''ஐயா! ஒளி மயமான இந்த அழகிய இளைஞரே ஓர் அதிசய புருடர். சமயங்களுக்கு எல்லாம் மேலான பக்குவம் ஒன்று உண்டு. அதுதான் சான்றாண்மை. 'எல்லா உயிரும் இரங்கத் தக்கவை, எந்த உயிரையும் கொல்லக் கூடாது' என்பதுதான் தவம். ஆனால் பிறர் தீமையை வாய் திறந்து சொல்வதும் கூடக் கொலை போன்றதென்று தயங்கும் தயக்கமே சான்றாண்மை. தவத்தைக் காட்டிலும் உயர்ந்ததான அந்தச் சான்றாண்மையையே இவரிடம் பார்க்கிறேன். பிறருடைய உடம்பைப் புண்ணாக்குவது மட்டும் உயிர்க்கொலை என்று நினைப்பதற்கும் அப்பால் போய்ப் பிறருடைய மனத்தைப் புண்ணாக்குவதும் கொலை என்று கருதி வார்த்தைகளைச் சொல்லும்போதும் கடுமையைத் தவிர்த்து விரதம் காக்கிறவர்களான சான்றோர்களின் சாயலை இந்தச் சுந்தர இளைஞரிடம் காண்கிறேன்'' என்று இளங்குமரனைப் புகழ்ந்து சாங்கியன் இந்த வார்த்தைகளைக் கூறியபோது, 'ஆகா! ஆகா!' என்ற குரல்கள் சுற்றி

யிருந்தவர்களிடமிருந்து உருக்கமாக எழுந்து ஒலித்தன.

கண்களில் விழிகள் சொருகுவதும், திறப்பதுமாக இளங்குமரன் நீலநாகமறவரின் மார்பில் முன்னிலும் தளர்ந்து சாய்ந்தான். உயரமும் பருமனுமாக இறுகி வைரம் பாய்ந்த அந்த முரட்டு உடலில் ஒளிமயமாக இளங்குமரன் சரிந்த காட்சி மலை முகட்டில் மின்னல் சரிந்து நெளிவது போல் தோன்றியது.

''ஐயோ பசி மயக்கம் போலிருக்கிறது'' என்று பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் பதறினார்கள். ''விலகி நில்லுங்கள்.... காற்றுப் பட்டாலே தெளிவு வரும்'' என்றார் நீலநாகர். கூட்டம் விலகியது. காற்று வந்தது. ஆனால் தெளிவு வரவில்லை. அப்போது தற்செயலாகப் பூத சதுக்கத்தில் படையலிடுவதற்குத் தன் மகள் முல்லையோடு வந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வீரசோழிய வளநாடுடையார் யாரிடமோ அரைகுறையாக இந்தச் செய்தியைக் கேள்வியுற்றுப் பதறிப் போய் ஓடி வந்தார். அவரோடு அவர் மகள் முல்லையும் வந்தாள். கேள்விப்பட்ட செய்தி அரைகுறையானது என்றாலும் மனத்தில் சந்தேகங்களுடனும், துடிப்புடனும் பறந்து பதறித் தவித்துக் கொண்டே வந்திருந்தார்கள், முல்லையும், வளநாடுடையாரும். இதற்குள் கூட்டத்தில் யாரோ ஒருவர் பக்கத்தில் இருந்த ஒரு முதிய முனிவரிடமிருந்து தண்ணீர்க் கமண்டலத்தை வாங்கிக் கொண்டு வந்து இளங்குமரன் முகத்தில் தெளித்தார். பொற் பேழையில் வெண் முத்துக்களாக நீர்த் துளிகள் அந்த நெற்றியில் உருண்டன. அதில் சில துளிகள் காயம்பட்ட இடத்து இரத்தத்தைக் கலந்து கொண்டு மாணிக்கங்களாகவும் உருண்டன.

எதிரே நெஞ்சம் பதற நினைவுகள் பதற நின்ற முல்லையின் வலது கை அந்தக் காயத்தை நோக்கி உயர்ந்து தீண்டுவதற்கும் நெருங்கி விட்ட விநாடியில் அவனுக்குத் தெளிவு வந்து கண்களை மலர்த்தி முன்னால் பார்த்ததனால் அவளுடைய கை பின்வாங்கி விட்டது. தேவருலகத்துக் கற்பகப் பூவைத் திருட்டுத்தனமாகப் பறிக்க உயர்ந்த மனிதக் கையை அந்தப் பூவே கற்பக மரத்துக்குச் சொந்தக்காரனின் கண்கள் போலத் தோன்றிப் பயமுறுத்திப் பின்வாங்கச் செய்யும் பிரமையைப் போல் இளங்குமரனின் நெற்றியைத் தீண்டும் ஆசையும், தீண்டலாமா என்ற பயமுமாகப் பின்னால் நகர்ந்தாள் முல்லை.

''என்ன ஐயா இது? நான் கேள்விப்பட்டது மெய்தானா? தருமத்துக்கும் நியாயத்துக்கும் பெயர் பெற்ற சோழர் கோநகரத்தில்கூட இப்படி அநியாயங்கள் நடக்குமா? இந்தக் கொடுமை செய்தவர்களைப் புடைத்து உண்ணாமல் பூதசதுக்கத்துப் பூதங்கள் ஏன் இன்னும் தங்கள் கைகளில் பாசக் கயிற்றை வைத்துக் கொண்டு வீணுக்கு உட்கார்ந்திருக்கின்றன? கொடுமைகள் அதிகமாகி விடும்போது தெய்வங்கள் கூடச் சோம்பி இருந்து விடுகின்றனவே?'' என்று கொதித்தார் வளநாடுடையார்.

''மனிதர்களே சோம்பிப் போயிருந்து விட்டு அதற்குச் சான்றாண்மை என்று பெயர் சூட்டிப் பெருமையும் கொண்டாடுகிறபோது தெய்வம் என்ன செய்யும் ஐயா?'' என்று அதே கொதிப்போடு பதில் சொன்னார் நீலநாகர். ஆத்திரத்தில் அவர் சான்றாண்மையையே சோம்பலாகச் சொல்வதைக் கேட்டுப் பக்கத்தில் நின்ற சாங்கியன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

முல்லையின் கைகளில் இருந்த தட்டில் கனிகளைப் பார்த்துவிட்டு, ''இதிலிருந்து ஏதாவது பழங்களைக் கொடுத்து அவரை உண்ணச் சொல்லுங்களேன் அம்மணி! பசி மயக்கமாவது தணியும்...'' என்றான் சாங்கியன். அப்படியே தட்டோடு கனிகளை இளங்குமரனுக்கு முன்னால் நீட்டி ''எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் முல்லை. அப்போதும் இளங்குமரனின் முகத்தை நேரே எதிரிட்டுப் பார்க்கும் தெம்பு அவளிடம் இல்லை. 'என்னைப் பார்' என்று தூண்டும் ஆசையும், 'பார்க்காதே' என்ற பயமுறுத்தலும் சேர்ந்தே அவன் கண்களில் இருப்பது போல உணர்ந்தாள் அவள். அந்தக் கண்களின் அழகு அவளை அவன் முகம் பார்ப்பதற்குத் தூண்டியது. தூய்மை பார்க்கவிடாமல் அவளைப் பயமுறுத்திப் பின்னால் நகரச் செய்தது.

எங்கோ பார்த்தாற்போல் அவனையே பார்க்க முயன்றவளாய்க் கனிகளை அவனுக்கு முன் நீட்டினாள் முல்லை. எல்லாக் கனிகளையும் பார்த்து விட்டுத் தட்டின் ஒரு மூலையிலிருந்து ஒரே ஒரு நெல்லிக் கனியை மட்டும் எடுத்துக் கொண்டு 'போதும்' என்ற பாவனையில் கையசைத்தான் இளங்குமரன்.

''இன்னும் எடுத்துக் கொள். காலையிலிருந்து தண்ணீர்கூடப் பருகவில்லையே நீ?'' என்றார் நீலநாகர். முல்லை மறுபடியும் தட்டை அவன் அருகில் நீட்டினாள். அவன் சிரித்தபடியே மறுத்துவிட்டான்.

''மனம் நிறைந்திருக்கிற சமயங்களில் வயிறு நிறையாதது ஒரு குறையாகத் தெரிவ




தில்லை ஐயா! இந்த நகரத்தில் உலக அறவியிலும், இலஞ்சி மன்றத்தின் கரையிலும் பசித்துக் கிடப்பவர்களைப் பற்றி நினைத்து நினைத்து என் பசியை நான் மறந்துபோன நாட்கள் பல. உலகத்தில் மற்றவர்களுடைய பசிகளையெல்லாம் உணர முடியுமானால் ஒவ்வொரு நியாயமான மனிதனுக்கும் தன் பசி மறந்துதான் போய்விடும். ஆனால் அப்படி மறந்து போவதற்கு விசாகையின் மனம் வேண்டுமே?'' என்று இளங்குமரன் சொல்லிக் கொண்டே வந்த போது...சொல்லுவதைச் சில கணங்களுக்கு நிறுத்திக் கொண்டு விசாகையின் முகத்தை மனக் கண்ணில் நினைவுக்குக் கொண்டு வர முயன்றான்.

அவனுடைய மனக் கண்ணில் உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காகத் தன் கண்களில் நீரைச் சுமந்து கொண்டு அட்சயபாத்திரமும் கையுமாக விசாகை தோன்றினாள். நாவில் நெல்லிக் கனியின் சுவையும், நெஞ்சில் விசாகையைப் பற்றிய நிர்மலமான நினைவுகளும் பூரண நின்றான் இளங்குமரன்.

''போகலாம், வா! நீ திருநாங்கூரிலேயே மேலும் சிறிது காலம் இருந்தால்கூட நல்லதுதான். இங்கே உன்னை அழித்துவிட முயல்கிறவர்கள் இன்னும் ஊக்கத்தோடு முனைந்து திரிகிறார்கள். ஒளியன் மணிமார்பன் முன்பு என்னிடம் கூறியது பொய்யல்ல....'' என்று அவ்வளவு நேரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த எதையோ வெளியிடுகிறவர் போலப் பேசினார் நீலநாகமறவர்.

''ஐயா! ஒரு காலத்தில் என்னுடைய உடல் வலிமைக்கு எதிரிகளாக வருகிறவர்களையே நான் தேடினேன். அப்போது அவர்கள் மிகக் குறைவாகத்தான் எனக்குக் கிடைத்தார்கள். இப்போதோ நான் ஞான வீரர்களையே எதிரிகளாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், முன்பு என்னிடம் வந்திருக்கவேண்டியவர்கள் பலர் இப்போது வந்து தொல்லை கொடுக்கிறார்கள்'' என்று இளங்குமரன் நீலநாகர், வளநாடுடையார் இருவரையும் பார்த்துச் சொல்லி விட்டு ஊன்றியிருந்த ஞானக் கொடியைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட முற்பட்டான். (தொடரும்)



பூசுங்கள் !

பூசுங்கள் !!

மரச்சாமான்
களுக்குப்
பூசுங்கள் !!!



50 ஆண்டுகளுக்கு மேலாகவே தனிச்சிறப்பு வாய்ந்த ரெடி மிக்ஸ்ட் பெயின்ட் என்று நீடித்த பெயர் வாங்கியிருப்பதன் காரணம்—

- மிக ஸன்னமாக அறைக்கப்பட்டு விசேஷமான வார்னிஷையும் (மெருகிடும் எண்ணெயையும்) சாதனமாகக் கொண்டிருப்பதால் நன்கு பரவி இறுகிக்கொள்வதற்கும் நீடித்து உழைப்பதற்கும் உத்தரவாதம் அளிக்கிறது.
- சாமான்களுக்கு உறுதியையும் மிக பளபளப்பையும் கொடுக்கிறது.
- உள்பூச்சுக்கும் வெளிப்பூச்சுக்கும் நன்கு ஏற்றது.
- 26 மிக அழகான நிறங்களில் கிடைக்கின்றன.

முழு விவரங்களுக்கு தபால் பெட்டி நெ் 68, கல்கத்தா-1க்கு எழுதி டேட்டா ஷீட் நெ் DS. 1/3/60யைப் பெற்றுக்கொள்ளவும்

SHALIMAR PAINT

ஷாலிமார் ஸுபெர்லாக் ஸின்தெடிக் எனுமல் தயாரிப்பாளர்கள்

JWTSPW 615 TK

கல்லும் கடவுளே!

பி.எஸ்.வேலன்

“மாமன்னரே! ‘வீராதி வீர தத்துவ சிம்மம்’ ‘சூராதி சூர தர்க்க நிபுணர்’, ‘அபாண்ட தேசத்து இணையற்ற புலவர்’, ‘பூஸ்வானந்த சமத்துவ மதத்தின் போதகன்’ என்றெல்லாம் விருதுகளால் போற்றப் பெற்ற கவிராய விவேகர் என்பது நான்தான்” என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார் கவிராயர் விவேகர்.

ஆர்ப்பாட்டம், கைதட்டல், பலத்த வரவேற்பு-இவைகளைக் கண்டு ஒருவன் இறுமாப்பு அடைந்து விடுவது இயல்புதானே? சுற்றி நின்றோரை ஒருமுறை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டார் கவிராயர். சபையோர் மீண்டும் கை தட்டினர்.

மன்னர் சுத்தோதனரும், அமைச்சரும் கவிராயரை முறைப்படி வரவேற்றனர்; ஒரு நல்ல இருக்கை அளித்துக் கௌரவித்தனர்.

“புலவரே! உமது வருகையின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ளலாமா?” என்று பணிவோடு கேட்டார் அமைச்சர் மன்னரின் சார்பாக.

“வேந்தரே! எனது தேசம் அபாண்டத் தீவு. அங்கேயும் இவ்விந்துஸ்தானத்தைப் போலவே மக்கள் பல தெய்வ வணக்கமுடையவர்களாக இருந்தார்கள். நூற்றாண்டுகளுக்கு முன், பூஸ்வானந்தர் என்ற ஒரு தீர்க்கதரிசி தெய்வ வரப்பிரசாதத்தால் அவதரித்தார். அவர் ஆண்டவனுல் மக்களைச் சீர்திருத்தம் செய்ய இம்மாநிலத்துக்கு ஒரு காரியப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர். ‘இறைவன் ஒருவனே. அவன் அருபமாக இருக்கிறான். வடிவங்களை வணங்குவது மூடத்தனம்’ என்று அவர் நிவெங்கும் பிரசாரம் செய்தார். அவருக்கு நாள்தோறும் ஆண்டவன் செய்திகளையும், கட்டளைகளையும் அனுப்பி வந்தான். அத்திவ்விய திருவசனங்களை ஒன்றாகத் தொகுத்து “இறையருள்” என்ற வேதத்தை எங்களுக்கு நல்கி அருள் செய்தார் பூஸ்வானந்தர். அவர், அதனை மக்களிடையே ஓதி, அவர்களையும் ஓதச் செய்தார். இப்போது வடிவ வழிபாடு எங்கள் அபாண்டத் தீவில் அறவே ஒழிந்து விட்டது. எல்லோரும் பூஸ்வானந்த மதத்தையே பின்பற்றுகின்றனர். அப்புனித பூஸ்வானந்த மதத்தை இப் பரத கண்டம் எங்கும் பரப்பவேண்டும் என்பது என் அவா. எங்கும் தர்க்க வாதங்கள் செய்து வருகிறேன். எங்கும் நான் தோற்றது இல்லை. இனியும் தோற்க மாட்டேன்.”

“மிக்க மகிழ்ச்சி.”

“நன்றி! யாரும் துணிந்து தர்க்கிக்க வேண்டுமானால் முன்வரலாம்” என்று அறைகூவி அழைத்தார் கவிராயர், கம்பீரத்தோடு சபையைப் பார்த்து.

யாராவது முன் வருவார்களா என்று மன்னர் புலவர் குழுவை நோக்கினார்; தத்துவ வேதாந்திகளைப் பார்த்தார். யாரும் முன் வருவதாக இல்லை.

“தந்தையே! அனுமதித்தால் நான் வாதிடுகிறேன்” என்று எழுந்து கேட்டார் இளவரசர் சித்தார்த்தர்.

மாணவப் பருவத்தில் இருக்கும் மைந்தன், இத் தர்க்க நிபுணரிடம் எப்படி எதிர்த்து நிற்கப் போகிறான் என்ற பயம் மன்னருக்கு. இருப்பினும் தலையசைத்து, அனுமதியளித்தார், மைந்தனின் வேட்கையைத் தணிக்க.

இளவரசர் அடலேறு போல் சபை நடுவே வந்து நின்றார். சிறுவன்தானே என்ற அலட்சியம் கவிராயருக்கு. புன்முறுவல் பூத்த வண்ணம் தாமும் வந்து நின்றார்.

“இளவரசே! தர்க்கத்தில் நீர் வென்றால், நான் உங்கள் இந்து சமயத்தைத் தழுவிக் கொள்கிறேன். நான் வென்றால், நீர் எமது பூஸ்வானந்த சமயத்தைத் தழுவ வேண்டும். சரிதானே?”

“போட்டியில் வெல்வதும் தோற்பதும் இயல்பு. அதற்காக உயிரை வேண்டுமானாலும் பணயப் பொருளாக வைத்துக் கொள்வோம். ஆனால் மதம் மாறுவதைப் பணயப் பொருளாக ஏற்க மாட்டேன். எந்த அறிவாளியும் இதை ஒப்ப மாட்டான். மதம் மாறுவது தன்மானவாதிகளுக்கு அழகல்ல. சுய கௌரவத்தை விலை பேசத் துணிந்தவன் அல்லவா மதம் மாறுவான்? வேறு ஏதாவது நிபந்தனை சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் ஒப்புக் கொள்கிறேன்.”

என்ன?”

“சரி. தோற்றவர் இந்தச் சபையிலே தம் பெயரை மாற்றிக்கொள்ளவேண்டும்

இளவரசர் நிபந்தனையை ஒப்புக்கொண்டார், தலை அசைத்து. தர்க்கப் போரும் தொடங்கியது.

“இந்து சமயத்திலே பல கடவுளர் கொள்கைகள் இருக்கின்றன. பல கடவுளர்கள் இருக்கிறார்கள் என்பது எங்ஙனம் பகுத்தறிவுக்குப் பொருந்தும்? ஏகோபித்த ஒரு சக்தியை அன்றி அதற்குச் சமமான மற்றொரு சக்தி எப்படி இருக்க முடியும்?” என்று தொடங்கினார் கவிராயர்.

“வாதம் ஆதாரத்தோடு செய்யப்படவேண்டும். ஆதாரம் காட்டி வாதிடும்போது, பிடிவாதம் செய்வது தோல்விக்கு அறிகுறி” என்று கூறிவிட்டு, வட்டக் கிண்ணம் ஒன்றையும், சதுரக் கிண்ணம் ஒன்றையும் நீர் நிரப்பிக் கொண்டு வரப் பணித்தார் இளவரசர்.

இரண்டு கிண்ணங்களும் நீர் நிரப்பிச் சபை நடுவே வைக்கப்பட்டன.

“கவிராயரே! இதோ இந்தக் கிண்ணம் எப்படி இருக்கிறது?” என்று கேட்டார் இளவரசர், ஒரு கிண்ணத்தைச் சுட்டிக் காட்டி.

“சதுரமாக இருக்கிறது.”

“உள்ளே என்ன இருக்கிறது?”

“தண்ணீர்.”

“இதோ இந்தக் கிண்ணம்?”

“வட்டக் கிண்ணம்”

“உள்ளே?”

“தண்ணீர்.”

“ஒன்று சதுரக் கிண்ணம்; மற்றொன்று வட்டக் கிண்ணம். இரண்டும் வெவ்வேறான வடிவங்களை உடையவைதான். அதற்காக அவைகளில் இருக்கும் தண்ணீர் வெவ்வேறு தன்மை அடைந்து விட்டனவோ?”

“இல்லை.”

''ஆம். வட்டக் கிண்ணத்தில் இருந்தாலும் சதுரக் கிண்ணத்தில் இருந்தாலும் தண்ணீர் தண்ணீர்தான். மாறுபட்டு விடுவது இல்லை. வணங்கும் வடிவங்கள் வெவ்வேறாயினும் வழிபடும் தெய்வம் ஒன்றுதான். இதுதான் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம். அதோடு தாங்கள் கூறும் இறைவன் ஒருவனே என்ற கொள்கையும் எங்களுக்குப் புதியது அல்ல'' என்றார் இளவரசர் கம்பீரமாக.

''பலே! பலே!'' என்ற ஆரவாரம் எங்கும் எதிரொலித்தது. சற்று விழித்தார் கவிராயர். தாமும் சமாளித்துச் சிரித்தார்.

''ஆண்டவன் ஒருவன் என்பது சரி. ஆனால் வடிவத்தோடு இருப்பவன் என்றல்லவா உங்கள் சமயம் கூறுகிறது. எங்கும் நீக்கம் அற நிறைந்த பராபரம், கேவலம் இந்தக் கல் வடிவங்களிலா அடங்கி விட வேண்டும்? இப்படி வடிவத்தோடு இருக்கிறான் என்று உங்களில் யாரேனும் போய்ப் பார்த்தார்களா?'' என்று புதிய தோரணையில் கேட்டார் அந்தக் கவிராயர்.

''சர்வ வியாபகனாக, நீக்கம் அற நிறைந்திருக்கும் ஆண்டவன் காணப்படும் பூத, பௌதிகப் பொருள்களிலும், கண் பார்வைக் கெட்டாத அரூபங்களிலும் இருக்கத்தான் செய்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. காண முடியாத பராபரத்தை மனத்தில் தியானிக்க மனிதன், இவ் வடிவங்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறான். அப்படிப் பயன்படுத்துவதால் ஆண்டவனுக்கு என்ன குளிர்ச் சுரமா கண்டுவிடப் போகிறது? இதை நீங்கள் முதலில் மனத்தில் கொள்ள வேண்டும். வடிவத்தை வைத்து வணங்கும் எவருமே ஆண்டவனைப் போய்ப் பார்த்த இல்லை. ஒப்புக் கொள்கிறேன். ஆண்டவன் அரூபி என்று இட்ட வட்டமாகக் கூறும் நீர் போய் நேரில் பார்த்ததுண்டா? அல்லது உமது யூஸ்வானந்த தீர்க்கதரிசிதான் போய்ப் பார்த்தாரா?''

''அப்படிக் கூறுவது தவறு. எமது குருநாதர் மிகப் பெரிய தீர்க்கதரிசி. ஆண்டவனைக் கண்டு உரையாடிவிட்டு வந்தவர். அவர், சீர் கெட்ட இவ்வுலகைச் சீர்திருத்த இறைவனால் இம்மாநிலத்துக்குக் காரியப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர்.''

''ஆமாம். ஆண்டவன் அரூபி என்கிறீர். அரூபியாக இருக்கும் அவரை இவர் எப்படிக் கண்டாராம்.? கண்டார் என்பதற்கு ஏதாகிலும் அத்தாட்சி உண்டா?''

''அதற்கு ஆதாரம் அவர் வேதத்திலேயே இருக்கிறது. மேலும் அவர் தம் பிரசாரங்களில் பல முறைகள் கூறியுள்ளார்.''

''பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஆதாரம். நம்ப முடியாது. இப்படிப்பட்ட வேதங்களையும், புளுகுப் பிரசாரங்களையும் நம் நாட்டில் சாதாரணப் புலவன் செய்து விடுவானே'' என்று கவிராயரின் முகத்தைப் பார்த்தார் இளவரசர்.

கவிராயருக்கு உள்ளும் புறமும் வெந்து புழுங்கின. ஆத்திரம் தொண்டையை அடைத்தது. முகத்திலே குபுகுபுவென்று வந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

''சரி, கவிராயரே! ஆண்டவன் சர்வ வல்லமையுள்ளவன் என்பதற்கு மறுப்புண்டா?''

''இல்லை.''

''அவனால் முடியாதது என்று ஒன்று உண்டா....?''

''கிடையாது.''

''அப்படிப்பட்ட எல்லாம் வல்ல இறைவன், தான் இருக்கிறபடி இருந்து கொண்டே அண்ட சராசரத்தில் காணப்படும் நடப்பன, பறப்பன, ஊர்வன, செயற்கொண்டு இருப்பன, உயிரற்றன ஆகிய அனைத்துக்கும் தன்னை உணர்த்தி, ஒரு மதமாக்கி, ஒரு முகமாக வழிபடச் சக்தியற்றவனா?''

''இல்லை.''

''சக்தி உடையவன் என்றால், ஏன் அவன் ஒரு சாதாரண மனிதப் பிறவியை இவ்வுலகுக்கு ஒரு காரியப் பிரதிநிதியாக அனுப்பித் தன்னைப் பிரசாரம் பண்ணச் செய்தான்? உமது கூற்றுப்படி ஆண்டவன் தன்னைத் தானே விளம்பரம் செய்து கொள்ளும் சிறுமதி படைத்த விளம்பரவிரும்பி என்றல்லவா ஆகிறது? அவரால் இருந்தபடியே உலகைச் சீர்திருத்த முடியவில்லை போல் இருக்கிறது; ஆகையால்தான் யூஸ்வானந்தரைக் காரியப் பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறார் இல்லையா?''

''ஐயோ! நீங்கள் ஆண்டவனை நிந்திக்கிறீர்கள். பாவம்! பாவம்! நாஸ்திக வாதம் செய்கிறீர்கள்!'' என்று துடித்தார் கவிராயர்.

''அதற்கு நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? எந்த ஆண்டவன் உம்மைப் படைத்தானோ, அதே ஆண்டவன் என்னையும் படைத்திருக்க வேண்டும். எந்த ஆண்டவன் உம்மை ரட்சிப்பானோ அதே ஆண்டவன் என்னையும் ரட்சிப்பான். நான் அவனை விரும்பினால் போற்றுவேன்; வெறுத்தால் தூற்றுவேன். அது எனக்குள்ள உரிமை. நீர் என்ன ஆண்டவன் கையாளா, அவனைப் பற்றி இவ்வளவு அக்கறை கொள்ள? ஆமாம், இதென்ன உமது கட்கத்தில்?'' என்று நெருங்கி வந்து, கவிராயரின் கட்கத்தில் இருந்த சுவடிக்கட்டைச் சுட்டிக் காட்டினார் இளவரசர்.

''இதுதான் எங்கள் ஏக இறைவன், தீர்க்கதரிசி யூஸ்வானந்தரின் வழியே இறக்கி வைத்த வேத நூல். இதன் பெயர்தான் 'இறையருள்' மாந்தரின் திவ்விய மார்க்க நூல்'' என்று சுவடிகளைக் கையால் பொத்திக்கொண்டார், கவிராயர் பயபக்தியோடு.

''பார்க்கலாமா?''

''ஆகா! அதை வேற்று மதத்தார்கள் பார்க்கக் கூடாது. அதிலும் கேள்வி கேட்பவர்கள் அறவே அதைத் தொடக் கூடாது. இது எங்கள் யூஸ்வானந்தரின் திவ்வியத் திருக்கட்டளைகளில் ஒன்று.''

''சந்தேகப்படுவதும், அதை அடிப்படையாகக் கொண்டு கேள்வி கேட்பதும் அறிவாளிகளின் இரு பிரதான குணங்கள். அறிவாளிகளை யூஸ்வானந்தருக்குப் பிடிக்காது போல் இருக்கிறது.''

''எப்படி அந்த முடிவுக்கு வந்தீர்கள்?'' என்று தவித்துக் கேட்டார் கவிராயர்.

''சந்தேகமும் சிக்கலும் வருகிற இடத்தில்தான் கேள்வி தோன்றுகிறது. கேள்விக்கு விடை கண்டால் விளக்க ஞானம் வளர்கிறது; அஞ்ஞானம் அகற்றப்படுகிறது. இப்படி அறிவு வளருமானால் மக்களின் பகுத்தறிவு புளுகுப் பிரசாரங்களைத் தூக்கி வீசி

எரிந்து விடும். அறிவு வளர்ச்சியினால் தனக்கு ஏற்படும் ஆபத்தை நன்குணர்ந்துதான் உமது தீர்க்கதரிசி இவ்விதம் கட்டளை பிறப்பித்திருக்கிறார்.''


கவிராயருக்கு ஒன்றுமே புலப்படவில்லை. இன்னது கேட்பது, சொல்வது என்றே புரியாமல் தவித்தார். விழித்தார். சபையோர் கைதட்டலுக்கும், ஆர்ப்பாட்டத்துக்கும் முடிவே இல்லை. புலவருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ஆழ்ந்து சிந்தித்தார். முயன்றால் முடியாதது ஒன்றுண்டா? 'திடுதிப்' பென்று அவர் முகம் மலர்ந்தது. ஏதோ ஒரு பலமான பிடி கிடைத்து விட்டது. சற்று நிமிர்ந்து நின்றுகொண்டார்.

''சரி. ஆண்டவன் எப்படித்தான் இருக்கிறான்? நீங்களே விளக்குங்கள், உங்கள் மதத்தின் சார்பாக'' என்று புதிய பாணியில் கேட்டார் கவிராயர்.

''ஐயா! நாங்கள் மதப் பிரசாரம் செய்து, ஆள் சேர்த்துப் படை திரட்ட வரவில்லை. நீர் கேட்டதற்காக இந்து சமயத்தின் சார்பாக, ஆண்டவன் தத்துவத்தைத் தெரிந்த மட்டில் கூறுகிறேன். கண் பார்வைக்கு எட்டிய பர வெளியைச் சிற்பரம் என்றும் கண் பார்வைக்கு அப்பாற்பட்ட பரவெளியைத் தற்பரம் என்றும் அழைக்கின்றனர். இவ்விரண்டும் சேர்ந்த பர ஆகாயப் பொருளே பராபரம் ஆகும். இதைத்தான் 'சிவம்' என்று அழைக்கின்றனர் சைவ சமயத்தினர். 'சிவம்' என்றால் 'செம்மை' என்று பொருள். இதனையே 'விஷ்ணு' என்று அழைக்கின்றனர் வைணவர்கள். 'விஷ்ணு' என்றால் 'யாண்டும் வியாபித்து இருப்போன்' என்று அர்த்தம். இப்பராபரத்தையே 'பிரம்மம்' என்கின்றனர் பிரம்ம வழிபாட்டுடையோர். 'பிரம்மம்' என்றால் 'உயர்நிலை' என்று பொருள். பெயர்கள் வெவ்வேறாயினும் ஒன்றையே வழிபட்டிருக்கின்றனர் என்பது அறிவுடையோர்களுக்குத்தான் விளங்கும்'' என்று இளவரசர் விளக்கிக்கொண்டே வருகையில் கவிராயர் குறுக்கிட்டார்.

''பெண் தெய்வங்கள் வேறு இருக்கின்றன.''

''அந்தப் பரவெளியிலே இயக்க சக்தி, தோற்றுவிப்பதும், காப்பதும், அழிப்பதும் ஆகிய முத்தொழிலே



அஸ்திவாரத்திலிருந்தே நமது கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட சில கருத்துக்களின் மீதே சோஷலிஸம் கம்யூனிஸம் முதலிய மேற்கத்திய முறைகள் எழுப்பப்பட்டுள்ளன. மனித இயல்பின் சாரம் சுயநலமே என்ற கருத்தில் அவைகளுக்குள்ள நம்பிக்கை இக்கருத்துக்களில் ஒன்று. இதை நான் ஏற்கவில்லை. —காந்தி அடிகள்

யும் இயக்கி வருகிறது. பரவெளியாகிய சிவம் தோன்றியிருக்குமானால் தோன்றுதலாகிய சக்திக்கு சிவம் கட்டுப் பட்டதே. சித்தர்கள் கூறியதுபோல் பரவெளி தோன்றவும் இல்லை; அழியவும் அழியாது; என்றைக்கும் உள்ளது என்றால், சிவம் சக்திக்குக் கட்டுப்பட்டது இல்லை. இருப்பினும் என்றைக்கும் உள்ளது என்ற சக்தி, பரவெளியுடன் என்றைக்கும் இருந்து வருவதால், சக்தியும் சிவமும் வேறு பிரிக்க முடியாதவை. ஆகையால் ஆற்றலையும் பரவெளியையும் ஒன்றாக்கி அர்த்த நாரீசுவர நிலையையும் வகுத்து வழிபட்டிருக்கின்றனர் நம் முன்னோர். ஆற்றலைப் பெண் என்றும் பரவெளியை ஆண் என்றும் கொண்டு அவைகளை வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு வடிவங்களில் வைத்து வணங்கி வருகின்றனர். இதுதான் இந்துமதத் தத்துவம்!'' என்றார் இளவரசர்.

விடுவாரா கவிராயர்?

''இப்படிப்பட்ட பரசிவத்தை மனத்தால் நினைத்துக் கும்பிட்டு விடுவதுதானே? அதற்கேன் ஒரு கற்சிலை?'' என்று துள்ளினார் கவிராயர்.

''நல்ல கேள்வி! அப்படிக் கேளும். பதில் சொல்லுகிறேன்'' என்று கூறி விட்டு, ''ஆமாம். நீர் இறைவனை வழிபடுகிறவர் தானே?'' என்று கேட்டார் இளவரசர்.

''ஆகா! அவனையே தியானித்து வழிபடுபவன் அல்லவா நான்?''

''இப்போது நீர் ஆண்டவனைத் தியானித்தீரா....?''

''ஆமாம். தியானித்தேன்.''

''அச்சமயம் உமது மனத்திரையிலே தோன்றியது என்ன? அவன் எந்த அமைப்பிலே காட்சி அளித்தான்?''

''ஆண்டவனை எப்படி எடுத்துக் கூறுவது?'' என்று சற்றுத் தயங்கினார் கவிராயர்.

''நான் உம்மை நினைக்க வேண்டுமானால் உமது வடிவத்தை என் மனத் திரையில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தி விட்டால் நான் உம்மை நினைக்கிறேன் என்று கூறலாம். உமது நாமத்தைக் கூடச் சொல்ல வேண்டியதில்லை. சொன்னாலும் தவறில்லை. நினைத்தல் என்பது நினைக்கப்படும் பொருள் மனத்திரையிலே தோன்றுவதுதான். அப்படி நீர் ஆண்டவனை நினைக்கும்போது உமது மனத் திரையிலே தோன்றியது என்ன?'' என்று நுட்பமாகவும் அழகாகவும் கேட்டார் இளவரசர்.

''மிக்க ஆழமாகப் போவதும், தோண்டிக் கேட்பதும் அவ்வளவு அழகல்ல. இருந்தாலும் பதில் சொல்கிறேன். இளவரசே! நிலையாக ஒன்றும் தோன்றவில்லை. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விதமாகத் தோன்றுகிறது. அப்படி இருக்கையில் இதுதான், இப்படித்தான் தோன்றியது என்று எப்படி விளக்குவது?''

''ஆக ஒவ்வொரு சமயத்திலும் ஏதோ ஒன்று தோன்றிக் கொண்டே இருக்கிறது!''

''ஆமாம்!''

''தோன்றியிருக்குமானாலும் புள்ளி, வட்டம், சதுரம், நீண்ட சதுரம், முக்கோணம், ஐங்கோணம், அறு கோணம், எண்கோணம், இவற்றில் எதுவாக இருந்தாலும் அது வடிவத்திலே வந்து அடங்கும். இந்துக்கள் வடிவத்தை வெளியே வைத்திருக்கிறார்கள். ஆனால் அருபத்தை வணங்குவோர் வடிவங்களை அவர்கள் உள்ளங்களிலே வைத்திருக்கிறார்கள். இடம்தான் வேறுபட்டிருக்கிறது. அவ்வளவுதான்; ஆனால் இந்துக்களின் வடிவம் நிலையானது. தியானிக்கும்போது, சிந்தனை தவறி வேறெங்கோ போய்விட்டாலும் மீண்டும் ஐம்புலனை அடக்கிச் சிந்தனையை ஒடுக்கிப் பழைய வடிவத்துக்கே கொண்டு வந்து விடலாம். ஆனால் அருபத்தை வழிபடுவோரின் உள்ளத்து வடிவம் நிலையானதல்ல. ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொன்றாகத் தோன்றும்'' என்றார் இளவரசர்.

''மன்னிக்க வேண்டும். மறந்து கூறிவிட்டேன். தியானிக்கும்போது மனத்தில் ஒன்றுமே தோன்றுவதில்லை'' என்றார் கவிராயர்.

''மனத்தில் ஒன்றுமே தோன்றுவதில்லை என்றால் நீர் நினைக்கவில்லை; இவ்வளவு காலம் கடவுளைத் தியானிப்பது போல் நடித்து ஏமாற்றியிருக்கிறீர். இல்லையா?''

''ஆ! இல்லை..... ஆமாம்.... இல்லை.... ஆமாம்..இல்லை.'' — தடுமாறினார் கவிராயர்.

''தடுமாற வேண்டாம் கவிராயரே! ஐந்து பணமும் ஆறு பணமும் எவ்வளவு என்று கண்டுபிடிக்க இள மாணவன் பணத்துக்காக விரலை விட்டு எண்ணுவதை நீர் பார்த்திருப்பீர். அப்போது 'பணத்துக்குப் பதில் விரலைக் காட்டுகிறாயே? விரல் பணமாக முடியுமா?' என்று ஓர் ஆசிரியர் கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளும். உண்மையில் யார் மடையன்? ஆசிரியரா, மாணவனா? அது போலவே, காண முடியாத பராபரப் பொருளைச் சிந்திக்கக் காணப்படும் இச் சிலை வடிவங்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறான் ஒரு இந்து வீரன். அதற்காக அவனைப் பார்த்து 'நீ சிலையை வணங்குகிறாயே?' என்று கேட்டால் யார் மீது குற்றம்? மாணவன் விரலைத்தான் நினைத்தான் என்றாலும் விரல் வழியே கையில் இல்லாத பணத்தை நினைத்துக்கொள்கிறான். அது போலவே ஒரு இந்து வீரனும் சிலை வடிவத்தைத் தியானித்தான் என்றாலும் சிலை வடிவத்தின் வழியே பார்த்தறியாத பராபரத்தைத் தியானித்துக் கொள்கிறான். இந்துக்களின் வடிவ வழிபாடு, முறையான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது'' என்று கவிராயரைத் தெளிய வைத்தார் இளவரசர்.

''இளவரசர் வாழ்க! மெய்ஞானச் சுடர் வாழ்க!'' என்ற வாழ்த்தொலி எழுந்தது.

மன்னர் சுத்தோதனருக்கு இருப்புக் கொள்ள வில்லை. தம்மை மறந்து கைதட்டி வாழ்த்திவிட்டார். கவிராயருக்கு ஏன் வந்தோம் என்றாகி விட்டது.

மிகச்சிறந்தது!



வீட்டிற்கும் — ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்

ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலேயே

* ஒவ்வொரு பாக்கெட்டும் அதிகப்படியான கோப்பைகள் நல்ல தேநீர் கொடுக்கிறது.
* சரப்படியாதவாறு பாக்செய்யப்பட்டிருப்பதால் புத்தம் புதுமைக்கு உத்திரவாதம் அளிக்கிறது
* லட்சக்கணக்கான வீடுகளில் இதனை விரும்பி அருந்தி ஆனந்தம் அடைகின்றனர்.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்


JWT BB 386

ஆழ்வார் திருநகரி ஆழ்வார்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

நேபாளத்தில் கபிலவாஸ்து என்ற இடத்தில் சுத்தோதனர் என்று ஓர் அரசர் இருந்தார். அவருக்கு மாயாதேவி என்பவள் மனைவி. இவர்களுக்குப் பிள்ளையாகச் சித்தார்த்தர் பிறந்தார். இந்தச் சித்தார்த்தர் யசோதரையை மணந்தார். ராகுலன் என்ற மகனைப் பெற்றார். இல்லறமாம் நல்லறத்திலே வாழ்ந்த இந்த ராஜகுமாரராம் சித்தார்த்தர் உலகிலுள்ள மக்கள் பிணி, மூப்பு, சாக்காடு முதலிய துன்பங்களால் துயருறுவதைக் கண்டு மனம் தளர்ந்தார். பிறவிக் கடலைக் கடந்து இத்துன்பங்களிலிருந்தும் நீங்க வழி எது என்று சிந்திக்கலானார். கடைசியில் ஒரு நாள் இரவு மனைவி மக்கள் எல்லாரையும் உதறி விட்டு அரண்மனையிலிருந்து வெளியேறினார். ஆறு ஆண்டுகள் பல இடங்களில் திரிந்தவர் கடைசியாகக் கயாவுக்கு வந்து அங்குள்ள போதி மரத்தடியில் அமர்ந்தார். அங்குதான் அவர் மெய்யறிவைப் பெற்றார். போதி மரத்தடியிலிருந்து ஞானம் பெற்று உலகுய்ய வழிகாட்டிய இந்தப் பெரு மகனே புத்தர். அவர் காட்டிய வழி நிற்பவர்களே பௌத்தர்.

இவரைப் போலவே தென் தமிழ் நாட்டில் ஒரு புளிய மரப் பொந்திலிருந்து ஞானோபதேசம் செய்த பெருமான்தான் நம்மாழ்வார். தண்பொருநை நதிக்கரையில் முன்பு குருகூர் என்று பெயர் பெற்ற இன்றைய ஆழ்வார் திருநகரி தலத்தில் காரியார் என்ற சிற்றரசருக்கும் உடைய நங்கைக்கும் திருமகனாய்ச் சடகோபர் தோன்றினார். பிறந்ததிலிருந்தே மற்றக் குழந்தைகளைப் போல் பாலுண்ணல், அழுதல் முதலிய செயல்களின்றிக் கண் மூடி மௌனியாக இருந்தார். இது கண்டு வியப்புற்ற பெற்றோர் சில நாட்கள் சென்ற பின் பிள்ளையை எடுத்துக் கொண்டு அவ்வூரில் உள்ள ஆதிநாதர் கோயிலுக்குச் சென்றனர். கோயிலுள் சென்றதும் சடகோபர் மெள்ளத் தவழ்ந்து கோயில் பிராகாரத்திலுள்ள புளியமரத்தடியில் அமர்ந்து கொண்டார். உணவும் நீரும் இன்றி வாழ்ந்தாலும் குழந்தையின் உடல் வளர்ச்சி குன்றவில்லை. பதினாறு வருஷங்கள் இப்படியே கடந்தன. இந்த நிலையில் வடநாட்டுக்கு யாத்திரை சென்றிருந்த மதுரகவி என்னும் அந்தணர் தென் திசையில் ஒரு பேரொளியைக் கண்டார்.



நம்மாழ்வார்

அவ்வொளியை நோக்கி நடந்து வந்து புளிய மரத்தின் பொந்தில் இருந்த சடகோபரைக் கண்டார். மதுரகவியார் கேட்ட வினாக்களுக்கு இவர் அளித்த பதிலைக் கேட்டு அவரை மகாஞானி என்று உணர்ந்தார். இவரே காலக்கிரமத்தில் திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற திவ்யப் பிரபந்தங்களைப் பாடி அருளினார். நம்மாழ்வார் என்னும் புகழ் பெற்றவர் இவரே. ஆழ்வார்களுக்குள் தலையாய ஆழ்வாராக விளங்குபவர். இவரே வேதம் தமிழ் செய்த வித்தகர், வகுள பூஷண பாஸ்கரர். நம்மாழ்வார், உலகுய்யத் தோன்றிய குருமூர்த்திகளுள் முதன்மையானவர். இயல்பாய் மெய்யுணர்வு பெற்று எல்லாவற்றுக்கும் அடிப்படையான வித்தினை உணர்ந்தவர்; உணர்ந்தவாறே உலகுக்கு உணர்த்தியவரும் கூட. இந்த ஆழ்வார் திருநகரிக்கு ஒரு கவிஞர் வந்திருக்கிறார். அவருக்குத் திருநகரி வந்ததும் ஓர் எக்களிப்பே உண்டாகிறது. அந்த எக்களிப்பில் பாடுகிறார்,

இதுவோ திருநகரி ?
　ஈதோ பொருநை ?
இதுவோ பரமபதத்து
　எல்லை ?—இதுவோதான்
வேதம் பகர்ந்திட்ட
　மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர் ?

என்று. இந்த நம்மாழ்வார் பிறந்து வளர்ந்த காரணமாகவே குருகூர், ஆழ்வார் திருநகரி என்ற பெயரோடு வழங்குகிறது.

ஆழ்வார் திருநகரி திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலிக்குக் கிழக்கே இருபது மைல் தொலைவில் இருக்கிறது. திருநெல்வேலி திருச்செந்தூர் ரயில் வழியாகச் சென்று ஆழ்வார் திருநகரி ஸ்டேஷனில் இறங்கலாம். இல்லையென்றால் திருநெல்வேலி- திருச்செந்தூர் ரோடு வழியாக பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம். ரோட்டை அடுத்தே கோயில் இருக்கிறது. ஊருக்கு நடுவில் ஆதிநாதர் ஆழ்வார் கோயில் இருக்கிறது. இந்த ஊரிலே தெற்குமாடத் தெருவிலே திருவேங்கட முடையான் கோயிலும் மேல் புறம்



பொலிந்து நின்ற பிரான்

திருவரங்கநாதன் கோவிலும் வடக்கு மாடத் தெருவிலே பிள்ளை லோகாச்சாரியார், அழகர், தேசிகர், ஆண்டாள் கோயில்களும் இருக்கின்றன. எல்லோருமே நம்மாழ்வாரைக் காணத் தேடி வந்தவர்கள் போலும். பஸ்ஸில் போனாலும் ரயிலில் போனாலும் நாம் முதலில் சென்று சேர்வது ஆதிநாதர் கோயிலின் சந்நிதி வாயிலில்தான். ஒரு நாள் பிரம்மா திருமாலை வைகுந்தத்தில் வணங்க அவர், 'உன்னைப் படைப்பதற்கு முன்னமேயே நாம் தண்பொருநை நதிக் கரையில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அதை எமது வாசஸ்தலமாகக் கொண்டிருக்கிறோம். அதனையே ஆதி க்ஷேத்திரமாகக் கொண்டு வழிபடு' என்று உபதேசிக்கிறார். அதன் பிரகாரம் பிரம்மா வந்திருக்கிறார். அப்படி வரும்போது ஆற்றிலே ஒரு வலம்புரிச் சங்கு மிதந்து வந்து திருச்சங்கணித் துறையில் ஏறி அங்கிருந்த ஆதிநாதரைச் சுற்றி விட்டுச் சென்றிருக்கிறது. இதனைக் கண்ட பிரம்மா இப்படித் திருமால் உகந்து இடம் பிடித்துக் கொண்ட தலத்திலே இருந்த ஆதிநாதரை ஆராதித்து சத்யலோகம் திரும்பியிருக்கிறார். திருமாலே குருவாக வந்து உபதேசித்த தலமானதால் இத்தலம் குருகூர் என்று பெயர் பெற்றிருக்கிறது.

கோயில் வாயிலின் அழகை, ஸ்ரீ வைகுந்தத்தில் போலவே, ஒரு தகரக்கொட்டகை கெடுக்கிறது. அதைச் சேர்ந்தாற்போல் ஒரு பெரிய மண்டபம். அதில்தான் இராமாயணக் குறடு இருக்கிறது. அதைத் தாண்டி மேற்சென்றால் கோபுர வாயில், அதை அடுத்தே கொங்கணையான் குறடு, கிளிக்குறடு எல்லாம். இவற்றையெல்லாம் கடந்தே கருட மண்டபம் வந்து சேர வேணும். இன்னும் நடந்தால் அர்த்த மண்டபம். அங்கு வந்துதான் கருவறையில் உள்ள ஆதிநாதரைத் தரிசிக்க வேணும். இவரும் இவர் பக்கத்தில் உள்ள ஸ்ரீதேவி பூதேவி இருவரும் கனையினாலான வடிவங்களே. இந்த ஆதிநாதருக்கு முன்புதான் உத்சவர் பொலிந்து நின்ற பிரான் என்ற பெயரோடு பொலிகிறார். இவரை நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்திருக்கிறார்.

இலிங்கத் திட்ட புராணத்தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வந்து சொல்வீர்காணும்
மற்றும் நும் தெய்வமாகிநின்றான்
மலிந்து செந்நெல் கவரிவீசும்
திருக் குருகூர் அதனுள்
பொலிந்து நின்றபிரான் கண்டீர்
ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே.

என்பது பாசுரம். பொலிந்து நின்ற பிரானைப் பாடியவர் ஆதிப் பிரானை மறந்து விடுவாரா? அவரையுமே பாடி மகிழ்ந்திருக்கிறார்.

ஒன்றும் தேவும் உலகும் உயிரும்
மற்றும் யாதும் இல்லா
அன்று நான்முகன் தன்னொடு
தேவர் உலகோடு உயிர்படைத்தாய்,
குன்றம் போல மணிமாட
நீடு திருக்குருகூர் அதனுள்
நின்ற ஆதிப்பிரான் நிற்க
மற்று எத்தெய்வம் நாடுதிரே ?

என்பது பாட்டு. பொலிந்து நின்ற பிரான் பக்கத்திலேயே உத்சவர்களாகப் பூதேவி, ஸ்ரீதேவி, நீளாதேவி மூவரும் நிற்கிறார்கள். இவர்களைத் தவிர இக்கோயிலில் தனிக்கோயில் நாச்சியார்களாக ஆதிநாயகியும் குருகூர் நாயகியும் வேறு இருக்கிறார்கள்.

இத்தலத்தில் வராக நாராயணர் ஞானப் பிரானாக முனிவர்களுக்குக் காட்சி கொடுத்திருக்கிறார். அவரது சந்நிதி தெற்குப் பிராகாரத்தை யொட்டிய மேடை மீது இருக்கிறது. இந்தக் குருகூரில், ஆதிநாதரைவிடப் பிரபலமானவர் நம்மாழ்வார்தான். ஆம்! ஊர்ப் பெயரே அவரால் மாறி விட்டதே. ஆழ்வாரது திருநகரியாகத்தானே இன்று விளங்குகிறது! இந்த ஆழ்வார் திருநகரிக் கோயிலிலே நம்மாழ்வார் இருந்த புளியமரமே தல விருக்ஷம். நம்மாழ்வார் அமர்ந்திருந்த மரத்தின் பாகத்தில் தினமும் திருமஞ்சன வழிபாடு நடக்கிறது. ஒரே மரமாக இருந்தபோதிலும் பொந்தாயிரம் புளியாயிரம் என்றபடி பல பொந்துகளோடு தான் விளங்குகிறது. இது ஏழு பிரிவாய்ப் பிரிந்து கோயில் விமானத்தில் எல்லாம் பரவி நிற்கிறது. இம்மரம் காய்த்தபோதிலும் பழுக்காமல் பிஞ்சிலேயே உதிர்ந்து போய் விடுகிறது. இத் தலத்தைச் சுற்றியுள்ள புளிய மரங்களும் பழம் பழுப்பதில்லை. இந்த மரத்தடியிலே தனிக் கோயிலிலே தான் நம்மாழ்வார் சிலை வடிவில் இருக்கிறார். நம்மாழ்வாரது பூத உடலைப் பள்ளிப்படுத்திய இடத்திலேதான் கோயில் அமைத்து ஆழ்வார் உருவைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இத்திருப்புளி ஆழ்வாரைச் சுற்றிய பீடத்தில் மதில் சுவர்களில் நூற்றியெட்டு திருப்பதிப் பெருமான்களும், கீழ் வரிசையில் ஆழ்வாராதியர்களும் அதன் கீழ் வரிசையில் யானை உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உத்சவமூர்த்தமான ஆழ்வார் சோபான மண்டபத்துக்கு எதிரே உள்ள பொன் குறட்டில் எழுந்தருளியிருக்கிறார்.

மற்றைய ஆழ்வார்கள் எல்லாம் பெருமானைப் பாட, நம்மாழ்வாரது சிஷ்யராய்

அமர்ந்த மதுரகவியாழ்வார் மட்டும் சடகோபனையே பாடியிருக்கிறார். 'கண்ணி நுண் சிறுத் தாம்பினால்' என்று தொடங்கும் பதினொரு பாடல்களும் நம்மாழ்வார் புகழையே பேசுகின்றன.

நன்மையால் மிக்க
நான்மறையாளர்கள்
புன்மையாகக்
கருதுவர் ஆதலின்,
அன்னையாய் அத்தனாய்
என்னை ஆண்டிடும்
தன்மையான்
சடகோபன் என் நம்பியே !

என்பது மதுரகவியாழ்வார் பாடல். நம்மாழ்வாரிடத்து ராமானுஜர் ஈடுபாடு எல்லாரும் அறிந்ததே. ராமானுஜர் குருகூருக்கு வரும் வழியில் திருப்புளிங்குடிப் பெருமானைத் தரிசித்து விட்டுத் திரும்பும்போது அங்கு வட்டாடிக் கொண்டிருந்த அர்ச்சகர் பெண்ணை, இன்னும் குருகூர் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்க அவள் 'கூவுதல் வருதல் செய்திடாய் என்று குரைகடல் வண்ணன் தன்னை மேவி நன்கமர்ந்த வியன் புனல் வழுதி நாடன் சடகோபன்' என்று ஆழ்வார் இவ்வூர்ப் பெருமானைப் பாடும்போது சொல்லிய வண்ணம் 'கூப்பிடு தூரம்' என்று கூறியிருக்கிறாள் சடகோபன் பாசுரத்தை. அப்பெண் கூறியதைக் கேட்டு ராமானுஜர் அவளையே ஆழ்வாராக எண்ணித் தரையில் வீழ்ந்து வணங்கியிருக்கிறார் என்பது வரலாறு. கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கும் சடகோபரிடத்து ஈடுபாடு இருந்திருக்கிறது. சடகோபர் அந்தாதியே பாடியிருக்கிறாரே. இராமாவதாரம் பாடுமுன், நம்மாழ்வார் திருவடிகளை நினைந்து வணங்கியிருக்கிறார்.

தருகை நீண்ட தயரதன் தாள்தரும்
இருகை வேழத்து இராகவன் தன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிட
குருகை நாதன் குரைகழல் காப்பதே

என்பதுதானே அவரது பாடலாயிருந்திருக்கிறது! விஷ்ணு கோயில்களில் உள்ள ஆழ்வார்கள் சந்நிதிகளிலெல்லாம் நம்மாழ்வார் சிலை வடிவிலும், செப்பு வடிவத்திலும் காட்சி கொடுப்பதைக் கண்டிருக்கிறீர்கள். அங்கெல்லாம் கூப்பிய கையராய் இருக்கும் இவர் இந்தக் குருகூர் தலத்தில் மட்டும் உபதேசிக்கும் ஞான முத்திரையோடு விளங்குகிறார் என்பதைக் கூர்ந்து கவனிக்கவும்.

குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியை விட்டுக் கிளம்புமுன் ஆற்றுக்கு அக்கரையிலுள்ள காந்தீசுவரம் சென்று அங்குள்ள ஏகாந்தலிங்கரையும் வணங்கியே திரும்பலாம். ஆழ்வார் திருநகரியில் ஒன்பது சிவன் கோயில்கள் இருந்தன என்றும் அவற்றை ஒரு சாத்தாதுவர் அழித்து ஆற்றுக்கு அணைகள் கட்டினார் என்றும், அது காரணமாக அவருக்கு வயிற்றில் நோவு உண்டாக அதற்கு ஒரு பரிகாரமாகவே ஆற்றின் வடகரையில் காந்தீசுவரம் கட்டி ஏகாந்தலிங்கரைப் பிரதிஷ்டை செய்தார் என்பதும் வரலாறு. இந்தக் காந்தீசுவரத்தில் கரூர் சித்தர் வாழ்ந்திருக்கிறார். அவரிடம் ஒரு நாய் இருந்திருக்கிறது. அது நாள்தோறும் குருகூர் வீதிகளில் விழும் எச்சிலையே உணவாக அருந்தியிருக்கிறது. ஒரு நாள் குருகூரிலிருந்து நதியைக் கடந்து வரும்போது வெள்ளத்தின் நீர்ச் சுழலில் அகப்பட்டு உயிர் இழந்திருக்கிறது. பின்னர் அதன் உயிர், ஒளி பெற்று விண்ணுலகு எய்திருக்கிறது. இதைக் கண்ட சித்தர்,

வாய்க்கும் குருகைத்
திருவீதி எச்சிலை வாரி உண்ட
நாய்க்கும் பரமபதம் அளித்தாய்
அந்த நாயோடு இந்தப்
பேய்க்கும் பதம் அளித்தால்
பழுதோ ? பெருமாள் மகுடம்
சாய்க்கும்படி கவி சொல்லும்
ஞானத் தமிழ்க் கடலே.


என்று பாடி அருள் பெற்றிருக்கிறார். குருகூரை விட்டுக் கிளம்பிக் கிழக்கே இரண்டு மைல் நடந்து மதுரகவி பிறந்த திருக்கோளூர் சென்று அங்கு கிடந்த கோலத்தில் உள்ள வைத்தமாநிதியையும் வணங்கித் திரும்பலாம்.

புரூக்பாண்ட் ஸ்தாபனத்தார் லண்டனில் நடத்திய கலை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பதினாறு நாட்கள் இந்திய நாடெங்குமுள்ள கலைச் சிறப்புமிக்க நகரங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். பரிசு பெற்ற நான்கு மாணவர்களோடு இரண்டு ஆசிரியர்களும் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் கலந்து கொண்டனர். இதேமாதிரி இந்தியாவிலும் புரூக்பாண்ட் ஸ்தாபனம் நடத்திய கலை, கட்டுரைப் போட்டிகளை நீதிபதிகள் பரிசீலித்து வருகிறார்கள்.





மக்கள்
பலரும்
விரும்புவது
தங்க பஸ்பம்
புகையிலை
M/S N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS



THERE'S
A BENTEX
STRAP
TO SUIT
YOUR
REQUIRE-
MENT.
"Bentex"
WATCHES ★ STRAPS ★ BRACELETS
Sole Agents :
"Bentex" SALES CORP.,
Bentex Bldg., Bombay 7.
Mfg. : Collins & Co. Bombay 7.
AVAILABLE AT ALL WATCH DEALERS

நெருப்பினை நெருங்கி....

வே. கோவிந்தராசன்

அந்தக் குற்றத்தைச் செய்தே பார்ப்பது என்ற ஒரு அசட்டுத்துணிவு அவனுக்கு உதித்து, உருவாகி விட்டது.

மங்கலாக மனத்தில் எப்போதோ தட்டுப் பட்டதின் விளைவு. அது விளைந்து விளையாகிச் செழித்த சர்ப்பமாகக் கண்ணெதிரே சுருட்டிக் கொண்டு கிடந்தது. அதை விரலால் தீண்டிப் பார்க்கும் துணிவு விளையாட்டாக வளர்ந்து விட்ட விசித்திரம்.

தீமைகளின் பரிச்சயமற்ற கன்னி மனம் ரங்கனுக்கு. அவன் முகமெல்லாம் வேர்த்து விட்டது. விசாலமான விழிகளில் இரத்தச் செம்மை. மெலிந்த விரல்களில் மெல்லிய நடுக்கம். நெஞ்சு படபடத்து அதிர்ந்தது.

பார்த்த 'பைல்' கட்டையே மீண்டும் மீண்டும் பிரித்துப் பார்ப்பதும் பிறகு கட்டி வைப்பதும் திரும்பவும் பிரிப்பதும் இப்படியான ஒரு தவிப்பு. விசாலமான விழிகளில் மேலும் கீழும் சுற்றிலும் சுழன்றாலும் அவற்றில் எதுவும் பதியாத மயக்கம். அவன் எதிரே கட்டடம் கட்டும் கண்டிராக்டர் கந்தையா எழுதித் தந்த செலவு விவரங்கள் கலக்க மூட்டும் கணக்குகளாய்ப் பிரிந்து விரிந்து கிடந்தன. அவன் படித்த தனிப் படிப்பைக் கொண்டு அவன் அவற்றைப் பரிசீலிக்க வேண்டும். பரிசீலனை நேற்றே முடிந்தது. ரங்கன் கையொப்பமிட்டு மேலதிகாரிக்கு அனுப்பினால் அன்றே கண்டிராக்டருக்குத் தொகை கிடைத்து விடும். ஐயாயிரத்து இருநூறு ரூபாயை அவன் பெற்றுக் கொள்ளுவான். எப்போதும் ரங்கன் தாமதமின்றிப் பரிசீலனை செய்து அனுப்பிவிடுவான். சுறுசுறுப்பு அவனுக்கு இயற்கையாய் வாய்த்த இயல்பு. ஆனால் இந்த முறை இரண்டு நாட்களாகியும் அந்தப் பைல் கட்டு அவன் மேஜையை விட்டு நகரவே இல்லையே!

நியமத்துக்கு எதிராக அவன் செலுத்தக் கூடிய செல்வாக்கு அது. அந்தப் 'பைலை' அனுப்பாமல் அவன் தாமதப்படுத்தலாம். இல்லாத குறைகளைக் கற்பித்தும் கூறலாம். அந்தக் கண்டிராக்டரை அவன் தயவை நாடும்படி செய்து எப்படி வேண்டுமானாலும் அலைக்கழிக்கலாம். அவனுடைய தனிப் படிப்பு அதற்குத் துணை நிற்கும்.

அது குற்றமா? பலருக்கு அது தினசரி நடப்பாகிப் போனாலும் அது குற்றம்தானே?

கள்ளம் தவிர்த்த பளிங்குப் பாதையின் வழி வந்த ரங்கனுக்குக் குற்றம் செய்து பலன் பெறும் கீழ்மை தோன்றுமே! மனத்தில் எப்போதோ அரும்பிய ஓர் ஆவல். அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து அவனைச் செயல்படுத்தியது. அந்தக் கண்டிராக்டரிடம் மற்றவர்களைப் போல் அவனும் ஆதிக்கம் செலுத்த வேண்டும்; அவனை ஆட்டி வைக்க வேண்டும். அவன் அஞ்சுவதையும் கெஞ்சுவதையும் காண வேண்டும். அவ்வளவும் உள் நோக்கம் எதுவும் அற்ற விளையாட்டு. வெறும் பரீட்சை.

ரங்கனுக்குச் சிரிப்பு. அவன் மஞ்சள் முகத்தின் சிவப்பு இதழ்கள் சற்று மலர்ந்து 'சட்'டெனச் சுருங்கின. இடப் பக்கத்தில் இருந்த மின்விசிறியை அவன் விரல்கள் மீட்டி விட அது 'ஜில்' லென்று சுழல ஆரம்பித்தது. காற்றிலும் அனலின் வீச்சு. முடியை அவிழ்த்து ஓரிரு முறை தட்டி விட்டுப் பிறகு சிலும்பலின்றி அணைத்துப் பிடித்து முடித்து கொண்டான். முன் தலையில் அரை அங்குல மட்டத்தில் 'கரு கரு' வென்றிருந்த மயிர்க் கால்களிடையே வேர்வை துளித்து வளர்ந்தது. வேட்டியின் நுனியால் அதை அழுத்தித் துடைத்தான். நெற்றியை இருகூறாய்ப் பிளந்த திருச் சூர்ணம் கலைந்து விடாமல் மெள்ள அதை ஒற்றிக் கொண்டான்.

அவனுக்கு எதிர்த்தாற் போல் இரண்டு மேஜைகள் இருந்தன. ஒன்று பகபதியினுடையது. அவன் நான்கு நாட்கள் லீவில் இருந்தான். மற்றொன்று டைபிஸ்ட் பாருகுட்டியினுடையது. அவள் எப்போதுமே தாமதமாகத்தான் வந்து சேருவாள். மேலதிகாரிக்கு வேண்டியவள்.

அந்த அறையை ஒட்டினாற் போல் ஒரு வராந்தா உண்டு. அதற்கப்பால் உள்ள பெரிய ஹாலில் மற்றவர்கள் எல்லாரும் இருந்தார்கள். ஹாலின் மூலையில் இருந்த மற்றோர் அறை அதிகாரியினுடையது. அனைவருக்குமே மூச்சு முட்டும் வேலை. எப்படியோ சமாளித்து விடுவார்கள். பொறி சுமப்பதில் ஓர் அசுரத் தன்மை போதும்!

அறைக்கு வெளியே கலகலவென்ற பேச்சும் சிரிப்பும் கேட்டன. பாருகுட்டி வந்திருக்க வேண்டும். குளிர்ந்த காற்று வீசுவது போல் அவள் வந்தவுடனேயே எங்கும் ஓர் இனிமை சூழ்ந்து விடும். தினமும் அவள் மல்லிகை சூடி வருவாள். அந்த மணத்துக்கு ரங்கன் ஒரு கணம் மயங்குவான்; வையத்து இன்பக் கவர்ச்சியில் எப்போதாவது இறுகிறுத்து நின்றுவிடும் யோகியைப் போல.

பாரு குட்டி உள்ளே வந்தாள். நவநாகரிகத்தின் முழுச் சுருக்கம் அந்தப் பெண்ணுருவில் உள்ளே வந்தது. பகபதி இருந்திருந்தால், "ஹல்லோ, பாரு!" என்றோ, "குட் மார்னிங் மிஸ் பாரு!" என்றோ கூறி அவளோடு பேச ஆரம்பித்திருப்பான். அது தானே நாகரிகம். ரங்கனால் அப்படியெல்லாம் பேச முடியாதே. பெண்ணைக் கண்டதும் உடலைக் குறுக்கிக் கொள்வதும், தலையைக் கவிழ்த்துக்கொள்வதும், தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பதும்...

"குட் மார்னிங், மிஸ் பாருகுட்டி!"

தன்னாலும் அப்படிப் பேசிப் பழக முடிய வேண்டும் என்ற ஆதங்கத்தில் 'சட்'டென்று அவன் வார்த்தைகளை உதிர்த்துவிட்டான்; மலர்கள் சிதறினாற் போல.

அவள் அயர்ந்து நின்றாள். ஒரு விநாடி தான். உடனே விழித்துக் கொண்டு "வெரி குட் மார்னிங் மிஸ்டர் எம். என். ரங்கசாமி!" என்றாள்.

ரங்கனுக்கு மேலும் ஏதாவது பேச வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் ஒன்றுமே தோன்ற



வில்லை. பகபதியைப் போல் பேசவும் சிரிக்கவும் கலகலப்பாகப் பழகவும் அவனுக்கு வரவே வராதோ! அவளோடு பேசிப் பழகி ஆகப் போவது ஒன்றுமில்லைதான். இருந்தாலும் இப்படி ஊமையாக அவன் இருக்கலாமா?

பாருகுட்டியைக் கண்டதில் வேறு ஏதோ முக்கியமானதை மறந்து விட்டாற் போன்ற பிரமை அவன் மனத்தை உறுத்தியது. எவ்வளவோ நினைத்துப் பார்த்தும் அது என்னவென்று தோன்றவில்லை. அவன் எதை மறந்து விட்டான்? 'சட்'டென அவன் நினைவைத் தூண்டிற்று எதிரே இருந்த பைல்கட்டு. ஆம்! அவன் வேண்டுமென்றே அன்றைக்கு ஒரு குற்றத்தைச் செய்யப்போகிறான். அந்தக் கண்டிராக்டரைப் பொய்க் காரணம் காட்டி அலைக்கழிக்கப் போகிறான். அதன் விளைவு களைப் பரீட்சை செய்யப் போகிறான்.

மெள்ள எட்டிப் பார்த்த அந்த நினைவின் வீச்சு அவன் உடலை ஒரு முறை குலுக்கியது. அவன் இட்டப்படி அவனால் நடந்து கொள்ள முடியுமா? அதுவும் பாரு குட்டியின் எதிரிலேயே. அவள் இல்லா விட்டாலும்...!

எதையோ 'டைப்' செய்து கொண்டிருந்த பாரு குட்டி, அதைக் கையில் எடுத்துக் கொண்டு வண்ணப் பூவொன்று காற்றில் அசைவது போல் மெள்ள நடந்து அறையை விட்டு வெளியேறினாள். மேலதிகாரியிடம் அவள் ஏதாவது குறிப்பெடுக்க வேண்டியிருக்கும். அறையில் ரங்கன் மட்டுமே இருந்தான். அவளுந்தான் சென்று விட்டாளே; கண்ணைக் கவர்ந்த வான வில் இடீரென்று மறைந்து போனாற் போல.

ஏதோ விடுதலை கிடைத்தாற் போல நாற்காலியில் சிறிது நேரம் சாய்ந்திருந்தான் ரங்கன். பிறகு மின் விசிறியை நிறுத்தி விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். கந்தையா வந்ததும் அவனிடம் எப்படிப் பேசுவது, எப்படி விரட்டுவது, தன்னுடைய புதுப் போக்கைக் கண்டு அவன் என்ன செய்வான்? பகபதியிடம் குழைந்து நயந்து பேசுவது போல் அவனிடமும்......

'எதற்கு இந்த வம்பெல்லாம்? கையெழுத்தைப் போட்டு அனுப்பி விட்டால் என்ன?'

இயல்பான கோழைத்தனம். என்னதான் புதைத்து வைத்தாலும் விலக்கிக்கொண்டு எட்டிப் பார்த்தது. அது கோழைத்தனம் தானா? அல்லது நிலைமையைத் தின்னடத் தயங்கும் சுபாவமா?

வெளியே 'சரக், சரக்' கென்று தயங்கித் தயங்கி எழுந்த நடை வரவம். அது கந்தையாவின் குழைந்த நடைதான். அவன் வந்துவிட்டானே! கதவின் ஒரு பக்கத்திலிருந்து அவன் தலைமட்டும் தெரிந்தது. ஒழுங்காகக் கட்டிய தலைப்பாகை, சந்தனப் பொட்டு முகத்தில் பளிச்சென்று தென்படும் பிரகாசம், அழகிய வெட்டு மீசை, காவிப் பற்கள் தெரியும் பொய் நகை-இத்தனையும் அவன் முகத்துக்கு எப்போதும் உண்டு.

கொஞ்சம் கொஞ்சமாகத் தயங்கித் தயங்கி நகர்ந்து தன் முழு உருவமும் தெரிய அவன் ரங்கன் முன்னால் நின்றான்.

ஒரு பத்து நிமிஷங்களுக்காவது அவனை நிற்க வைக்க வேண்டும் என்பது ரங்கனின் திட்டம். எதிரே தனக்கு வணக்கம் செய்து தன்னை இறைஞ்சும் பணிவுடன் நிற்கும் ஒருவனிடம் கடுகடுப்பைக் காண்பிப்பது • எத்தகைய அநாகரிகம்! அந்த அநாகரிகத்தில் ஒரு பெருமையா? அந்தப் பெருமையா ரங்கனுக்கு வேண்டும்? அவன் முயற்சியின் தொடக்கமே சரிந்து விட்டது. அவனால் பேசாமலிருக்க முடியவில்லை.

''என்ன கந்தையா, என்ன விஷயம்?''

''எல்லாம் நம்ம தயவுங்க!''

ரங்கனுக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது. பகபதியிடம் இப்படித்தான் இந்தக் கண்டிராக்டர்கள் பேசுவார்கள்.

''தயவு என்னய்யா? என் வேலையை நான் செய்யறேன்!''

''நம்ம கேஸைக் கவனிச்சீங்கன்னு.....''

''அதெல்லாம் இப்ப முடியாது. நெறையத் தப்பு இருக்கு. நாளாகும்!''

அவன் சாதாரணமாகத்தான் கூற முயன்றான். ஆனால் குரலுக்கும் முகத்துக்கும் அவனை மீறிக் கொண்டு வந்து விட்ட கலவரம். அவன் கூறியது எவ்வளவு பெரிய பொய்! அப்படி அவன் பொய் சொல்லலாமா?

'விளையாட்டுத்தானே! வெறும் பரீட்சை தானே....!'

''ஐயா! அப்படிச் சொல்லக் கூடாது.. தொகை பெரிசு. நானே நொடிச்சுப்போயிருக்கேன். நீங்க கொஞ்சம் தவக்கப்படுத்தினால் எனக்கு வேறே வழியிலே நிறைய நஷ்டமாகும். கொஞ்சம் பெரிய மனசு செய்யுங்க. நீங்க நெனச்சா செய்ய முடியும்!''

''அதெல்லாம் முடியாது. மெதுவாகத்தான் ஆகும். நீ போயிட்டு ஒரு வாரம் கழிச்சுத் திரும்பி வா!''

பேலே பேச மனமற்ற தோரணையில் ரங்கன் 'பைலை'ப் புரட்ட ஆரம்பித்தான்.

கந்தையா நகரவில்லை. சிறு குறிப்பையும் சட்டெனப் புரிந்து கொள்ளும் நரித் தன்மை. கோட்டுப் பையைத் துழாவி, சிறு கவர் ஒன்றை அவன் வெளியே எடுத்தான். அவன் கைகளில் நிலை கொள்ளாத தவிப்பு. விரல்களை நிரடியும், முகத்தைக் கோணியும் அவன் என்ன சைகை செய்கிறான்? அந்தக் கவரில் இருப்பது பணமாக இருக்குமோ?

ரங்கனுக்குச் சொரேலென்றது. அவன் மஞ்சள் நிற முகத்தில் செம்மை இறைந்தது. பொங்கி எழுந்த பரபரப்பை அவன் அடக்கிக் கொண்டான். அந்தக் கண்டிராக்டர் ஏதோ சொல்லப் போவதையோ, செய்யப் போவதையோ அவன் எதிர் பார்ப்பதுபோலிருந்தது.

''கொஞ்சம் தயவு செய்யுங்க. ஒருத்தருக்கு ஒருத்தர் செய்கிற உதவி.''

கந்தையா அந்தக் கவரை ரங்கன் முன்னால் வைத்தான்.

படீரென்று சம்மட்டியால் தலையில் அடித்தாற்போல் சுவர்க் கடிகாரம் 'டங்'கென்று ஒரு முறை அதிர்ந்து அலைந்து அடங்கியது. ரங்கன் நிமிர்ந்து விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தான். மின் விசிறியின் இடையறாத மெல்லிய ஒலியும், கடிகாரத்தின் 'டிக்,டிக்' என்னும் நிதானமான தாளமும், அஞ்சி, அடங்கி அசைவற்று நிற்கும் கந்தையாவின் தோற்றமும் அனைத்துமே பிரமையாகத் தோன்றின. வராந்தாவில் நடமாட்டமே இல்லை. சன்னல் வழியாகத் தெருவில் ஓர் ஆள் முண்டாசு கட்டிக் கொண்டு நிற்பது தெரிந்தது. தெருவில் கூட நடமாட்டமில்லை.

மிகப் பெரிய பிரச்னையின் கூரிய விளிம்பு திடீரென்று ரங்கனுக்கு முன்னால்நின்றது. லஞ்சம் வாங்குவதா? அந்தக் கேவலமான செயலை அவன் செய்வதா? இத்தனை நாட்களும் நெருப்புப் போல் அந்த நினைவை அண்ட விடாமல் இருந்த வைராக்கியத்தில் இப்போது மட்டும் ஏன் இந்தச் சறுக்கல்? அல்லது இத்தனை நாட்களும் நேர்மை, பண்பு என்றெல்லாம் எண்ணிக் கொண்டு காலத்தை ஓட்டியதெல்லாம் வெறும் கோழைத்தனத்தினால்தானா? வாய்ப்பு ஏற்படாததால்தானா?

வெளியே அரவம் கேட்டது. வில்லைப்பட்டி அணிந்த சேவகன் வந்து கொண்டிருந்தான். இன்னும் சில விநாடிகளில் அவன் இவர்கள் அருகில் வந்து விடுவான்.

ரங்கனின் முகம் வெளுத்தது. அதரங்கள் துடித்தன. விரல்கள் நடுங்கின. அந்தக்கணமே எதையாவது செயல்படுத்தும் நிர்ப்பந்தம். அவன் 'சட்'டென்று அந்தக் கவரை எடுத்து டிராயரில் போட்டு மூடினான்.

''நான் வரேனுங்க!'' என்று கூறிக் கந்தையா புறப்பட்டான். 'நீயும் இவ்வளவுதானா?' என்று கேட்பது போல் உடலைக் குலுக்கிக் கொண்டு அவன் ரங்கனை நிமிர்ந்து பார்த்த பார்வை! அதில்தான் எவ்வளவு அலட்சியம் தெரிந்தது!

சிக்கல் நிறைந்த உணர்வில் ரங்கன் சற்று நேரம்செயலற்று உட்கார்ந்திருந்தான். ஏதோ ஒரு வகை வருத்தம் அவன் மனத்தைப் பற்றியது. அவனுக்கே விளங்காத வேகத்தில் என்னென்ன நிகழ்ந்து விட்டன. அவன் கந்தையாவைக் கொஞ்சம் அலைக்கழிக்கத்தானே இட்டு மிட்டான்? இப்படிப் பணம் வாங்க வேண்டுமென்று அவன் எண்ணியதில்லையே!

ஆனால் கந்தையாவைக் கெடுபிடி செய்தால் அவன் பணம் தருவான் என்னும் உண்மை ரங்கனுக்குத் தெரியாதா என்ன? அதை மட்டும் ஏன் அவன் எண்ணிப் பார்க்கவே இல்லை? அப்படியானால் அவனுடைய செய்கை உண்மையில் களங்கமற்ற விளையாட்டுத்தானா? அந்தப் பரீட்சை உண்மையில் கந்தையாவுக்குத்தானா? அல்லது அவனுக்கேதானா?

கூச்சத்துடன் அந்தக் கவரை எடுத்து அவன் பிரித்தான். அதில் தெரிந்த பத்து ரூபாய் நோட்டுக்கள் அவனைத் திகிலடையச் செய்தன. நடுக்கத்துடன் அவற்றை எண்ணினான். ஐம்பது ரூபாய்! மலைப்புடன் அவற்றைப் பையில் போட்டுக் கொண்டு அந்தக் கவரைக் கிழித்து எறிந்துவிட்டான்.

அவன் செய்ய வேண்டும் என்று பூசி மெழுகி மறைமுகமாக எண்ணிய குற்றம் முழுமை அடைந்தது.

குற்றம் செய்வதைவிட அதை மறைக்கும் முயற்சிதான் கடினமென்று தோன்றிற்று ரங்கனுக்கு. வெளியே முண்டாசு கட்டிக் கொண்டு நின்ற ஆள் இன்னும் அங்கேயேதான் இருந்தான். அவன் ஏன் அங்கேயே நிற்கவேண்டும்? ரங்கனைக்கூட அவன் அடிக்கடி திரும்பிப் பார்த்தானே! அவனும் ஒருவேளை கவனித்திருப்பானோ?

அதெல்லாம் வீண் பிரமை என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாலும் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அறையின் மூலையில் இருந்த பானைத் தண்ணீரை அருந்திவிட்டுத் திரும்பவும் வந்து அமர்ந்தான். குழப்பமான பல எண்ணங்கள் அவனைச் சுற்றிச் சுழலத் தொடங்கின.

சில விநாடிகளில் அவனுடைய குழப்பம் மடிந்து தெளிவு பிறந்தாற் போல இருந்தது. அந்தப் பணத்தைத் திருப்பித் தந்தாலும் கந்தையா வாங்கிக் கொள்ளப் போவதில்லை.



இந்த விஷப் பரீட்சையில் இறங்கியிருக்கவே கூடாது. தவறு செய்த பின் அதை மேலும் குழப்பிக் கொள்வது விபரீதத்தில்தானே முடியும்? வீணைப் பதற்றப்பட்டுத் தன்னைத் தானே காட்டிக் கொடுத்து விடலாமா? மிகவும் இயல்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

நீரில் நன்றாக நனைந்து விட்ட பிறகு எழும்

அலட்சியம். குளிர் விட்ட பின் எழும் ஒரு வகையான கணக்கம். அந்தச் சுகத்தின் லயம் விலகாது அவன் மெள்ளக் கண் திறந்தான். எதிரே பாரு குட்டி வந்து கொண்டிருந்தாள். ஒலிலாய் நடந்து சென்று தன்னிடத்தில் அமர்ந்தாள்.

தன்னை மறந்து அந்த அழகு உருவத்தை ஒளிவின்றிப் பார்த்த ரங்கன் வெளியே 'டக், டக்'கென்ற ஒலி கேட்டுத் திரும்பினான். அவனுக்குச் சொரேலென்றது. வாயிலருகே ஒரு போலீஸ் அதிகாரி நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மருண்டு நிலைகுலைந்த ரங்கன் மறு கணமே சமாளித்துக் கொண்டான். ஒரு போலீஸ் அதிகாரியைக் கண்டு அவன் ஏன் அஞ்சவேண்டும்? எத்தனையோ முறை ஏதேதோ வேலைகள் நிமித்தமாக அங்கு போலீஸ் அதிகாரிகள் வந்து போயிருக்கிறார்களே!

தான் இயல்பான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது ரங்கனுக்கு நினைவு வந்தது. அதற்குப் பாரு குட்டியோடு தான் பேச்சுக் கொடுப்பது சிறந்த உபாயமாக அவனுக்குப் பட்டது.

''என்ன, மிஸ் பாரு குட்டி.....''

அவளோடு பேச ஆரம்பித்தாலும் எதைப் பற்றி என்ன பேசுவது என்ற திகைப்பில் வார்த்தைகள் சண்டித்தனம் செய்தன. அதற்குள் அந்தப் போலீஸ் அதிகாரி அங்கிருந்து நகர்ந்து ஹாலை நோக்கிச் சென்று விடவே அவன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

அவனையே சற்று நேரம் வியப்புடன் கவனித்த பாருகுட்டி பிறகு பேசினாள். வீணையை உள்ளம் உருக மீட்டினாற் போன்ற இன்குரல்.

''எந்தா, அதிசயமாயிட்டு என்டே அடுத்துச் சம்சாரிக்குன்னு!''

கேரளத்துப் பேச்சின் தடையற்ற சரளம். ரங்கனுக்குப் பாதிபுரியும், பாதி புரியாது. இப்போது அவள் கேட்டதும் உண்மைதானே! அவன் பேசினான்: ''ஏன் பேசக் கூடாதா?''

''நோ, நோ! நாட் தட்! வெறுதே வாய் கொண்டு பறஞ்சா பிரயோசனமில்லா!''

''ஏன்?''

''இன்னு என்டே பிறன்னாள் ஆனு! மை பார்த் டே!''

''ஓ!''

''இது பகபதி எனிக்குத் தன்ன சம்மானமானு....!''

அவள் தன் அழகுப் பையைக் காண்பித்தாள். அது என்ன விலையாக இருக்கும். பகபதி பரிசளித்தாளுமே! இதெல்லாம் அவளுக்கு எப்படி முடிகிறது? எல்லாம் 'அப்படி'க் கிடைக்கும் பணந்தானே!

''என்னுடைய பிரசன்டேஷன் இன்னைக்கு சாயங்காலம். ஆபீஸ் முடிஞ்ச உடனே கடைக்குப் போவோம்!''

''அதெல்லாம் ஒன்னும்வேண்டா! இன்னு ஞான் சினிமாக்குப் போகாமென்னு விசாரிக்குன்னு. நிங்களும் வருன்னுவோ?''

ஏதோ ஒரு வகை உணர்வைப் பிரிந்து மற்றொன்றைப் பற்றும் மயக்கம். அவள் என்ன கூறுகிறாள்? அவள் கூறுவது உண்மைதானா? அவளோடு தனியாகசினிமாவுக்குப் போவதா?

அவள் மேல் அவன் மனத்தில் எழுவது அளவற்ற வெறுப்பா அல்லது தணியாத கவர்ச்சியா? அவன்தான் எவ்வளவு சரளமாகப் பழகுகிறான்? இவனுடைய குடுமி வைத்த பழமைத் தோற்றத்தைக் கண்டு அவனை அவள் அலட்சியப்படுத்த வில்லையே!

''எந்தா, நிங்களும் வருன்னுவோ?''

''ம்.... வர்றேன்... போகலாம்!''

உணர்ச்சிகளின் ரம்மியமான அலங்காரத்தில் அமைதியாக இருந்த அந்த அறையின் மௌனத்தை அழித்துக் கொண்டு பில்லைச் சேவகன் பதற்றத்துடன் வேகமாக வந்து ரங்கன் அருகில் நின்றான். பிறகு தணிந்த குரலில், ''உங்க மேலே ஏதோ லஞ்சப் புகாராம்.... போலீசு வந்திருக்கு!'' என்றான்.

''என் மேலேயா?''

''ஆமாங்க... உங்க மேலேதான்!''

ரங்கன் மேல் லஞ்சப் புகாரா? கரவும் கள்ளமும் அறியாத பழைமை மாறாத தோற்றத்துடன் உலகத்தின் இல்லுமல்லுகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்ற தோரணையில் இத்தனை ஆண்டுகள் எளிமையின் பெருமையாய் விளங்கிய ரங்கன் மேல் லஞ்சப் புகாரா?

இள நகை அவன் கள்ளமற்ற மலர் முகத்துக்குக் கனிவூட்டியது.

''அதனால் என்னப்பா? விசாரிக்கட்டுமே!''

பில்லைச் சேவகன் வியப்புடன் திரும்பிச் சென்றான். பிறகு, தடதட வென்ற ஒலியையும் அதைத் தொடர்ந்து திபுதிபுவென்று பலர் உள்ளே நுழைவதும் மங்கலாக அவன் உணர்வுப் பொறிகளில் தட்டுப்பட்டன. அவனுடைய மேலதிகாரி, அவரோடு மற்றொரு போலீஸ் அதிகாரி, அவர்களுக்குப் பின்னால் வளைந்து குழைந்து நிற்கும் கந்தையா, அவனுக்குப் பின்னால்......ரங்கன் அதிர்ந்து போனான்.

கந்தையாவுக்குப் பின்னால் நின்ற மனிதன் தானே அவ்வளவு நேரம் தலையில் முண்டாசுடன் வெளியே நின்று கொண்டிருந்தான்! அப்படியானால் ரங்கனைக் கவனிப்பதற்காகத் தான் அவன் அங்கே நின்றானோ? இட்டமிட்டு விரித்த வலையொன்று ரங்கனை வளைத்துப் பிடித்துக் கொண்டாற் போலிருந்தது.

''மிஸ்டர் ரங்கசாமி! ஐ ஆம் வெரி சாரி! நம்ம ஹெட் ஆபீசிலிருந்து விஜிலன்ஸ் ஆபீசர் வந்திருக்கிறார். சம் பிரைமரி கம்ப்ளெயின்ட்!''

ரங்கனுக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

''எனக்கு உங்கமேலே நம்பிக்கை உண்டு. இருந்தாலும் நான் விசாரணை செய்தாகணும். நீங்க ஏதாவது பணம் வாங்கினீர்களா?''

''இல்லையே சார்!''

மனமறிந்த பொய். அவன் அனுமதியின்றி அது சட்டென்று உதிர்ந்து அவனையே திடுக்கிட வைத்தது. போலீஸ் அதிகாரி குறுக்கிட்டார். ''உங்க பையில் இப்போது ஐம்பது ரூபாய் இருப்பது உண்மைதானே?''

ரங்கன் கலங்கினான். 'ஆம் என்று ஒப்புக் கொண்டுவிடுவதா? அடடே! பையில் ஐம்பது ரூபாய் மட்டுமில்லையே! மேலும் பதினைந்து ரூபாய் இருப்பதை மறந்தே விட்டானே!'

''இல்லே சார்! ஐம்பது ரூபாய் இல்லே, அறுபத்தைந்து ரூபாய் இருக்கிறது. நான் ஊருக்கு அனுப்ப வேண்டிய பணம்.''

மேலதிகாரி முகத்தில் நிம்மதி பிறந்தது. ஆனால் போலீஸ் அதிகாரி அலட்சியத்துடன்





நமது எல்லைப்புறப் பாதுகாப்பு

எல்லைப்புறங்களில் பழக்கப்பட்ட பாதைகளுக்கு அப்பால் மலைகளின்மேல் புதுப் புது மலை ரஸ்தாக்கள் துரிதமாக நிர்மாணிக்கப்படுகின்றன. வீரத்திற்குப் பெயர் பெற்ற நமது ராணுவப் படையினர் இம்மாபெரும் புராதன நாட்டின் புனிதமான எல்லைப்புறப் பிரதேசங்களுக்கு உடனுக்குடன் சென்று பாதுகாக்கும் பொறுப்பைச் சிறப்பாக நடத்தவே இந்த ஏற்பாடுகள்.

நாட்டின் தற்காப்புக்கு அத்யாவசியமான உயிர்நாடிகளைப் போன்ற இத்தகைய ஏராளமான பாதைகள் ஸிமெண்டினாலேயே நிர்மாணிக்கப்படுகின்றன. இக்காலத்தில் கட்டிட சாதனங்களில் அடிப்படையான ஒன்று ஸிமெண்டு.

இத்தகைய மலை ரஸ்தாக்களை நிர்மாணிப்பது மலைப்பைத் தரும் சிரமமான பணியாகும். நிர்மாண என்ஜினியர்கள் மிக மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டே செய்யவேண்டிய பணி.

தரமான நிர்மாண வேலை எதுவாயிருந்தாலும் டால்மியா ஸிமெண்டையே அநேகமாக எல்லோரும் நாடுகின்றனர்.

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

சமுதாயத்தின் சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனம்

டால்மியாபுரம் (சென்னை ராஜ்யம்)

தலைமை ஆபீஸ்: 4, ஸிந்தியா ஹவுஸ், புதுடில்லி–1



சிரித்தார். "எங்கே அந்த ரூபாயை எடுங்கள், பார்க்கலாம்!"

ரங்கன் ஒரு கணம் தயங்கினான். பிறகு எதற்கும் துணிந்துவிட்ட உறுதியுடன் பையிலிருந்த அறுபத்தைந்து ரூபாயை வெளியே எடுத்து நீட்டினான்.

அதை வாங்கிய போலீஸ் அதிகாரி கள்ளச் சிரிப்புடன், "நீங்கள் வாங்கிய இந்த அஞ்சு பத்து ரூபாய் நோட்டிலும் நாங்கள் அடையாளம் செய்து வைத்திருக்கிறோம், மிஸ்டர் ரங்கன்!" என்றார்.

ரங்கனுக்குப் பொறி கலங்கினாற் போலிருந்தது. உண்மையிலேயே லஞ்சம் வாங்குவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் எவரும் இதைப் போல் அகப்பட்டுக் கொள்ளவில்லையே! ஏதோ விளையாட்டாக எழுந்த மன உணர்வு இப்படிப்பட்ட விபரீதத்தை விளைவிக்க வேண்டுமா? சீலமும் ஆசாரமும் உயிராகக் கொண்ட அவனுடைய பெற்றோர் இதை அறிந்தால்.....

ரங்கனின் செவ்வரி படர்ந்த விழிகள் கலங்கின. அடர்ந்து கறுத்து நீண்டிருந்த இமைகள் ஓரம் நீர் முத்தாகத் துளித்தது.

ரூபாய் நோட்டுக்களைப் பரிசோதித்த போலீஸ் அதிகாரியின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து கடுமை தோன்றியது. அவர் திரும்பத் திரும்ப அவற்றை ஆராய்ந்தார். பிறகு தம் ஆட்களை அழைத்து அவர்களிடம் ஏதேதோ கேட்டார். கந்தையாவை அழைத்து ஏதேதோ முணுமுணுத்தார். கடைசியில் அந்த நோட்டுக்களை ரங்கனிடமே திருப்பித் தந்தார்.

"எக்ஸ்க்யூஸ் மீ! ஏதோ தப்பு நடந்து போச்சு! 'மார்க்' செய்த நோட்டுகள் மாறிப் போயிருக்கு! ஆனால் நீங்க பணம் வாங்கினதைக் கண்ணால் பார்த்ததாக நம்ம சி.ஐ.டி. சொல்கிறார்..."

ரங்கனின் மேலதிகாரி அவரை அதற்கு மேல் பேச விடவில்லை. "அதெப்படி சார் மாறிப் போகும்? உங்க ஆள் சொல்வதாலே பொய் நிஜமாயிடுமா? இந்த ரங்கசாமியை எனக்குப் பத்து வருஷங்களாகத் தெரியும். அவரைப் போல நேர்மையான இன்னொர் ஆள் இருக்க முடியாது."

அவன் அப்படிப்பட்ட நேர்மையாளன் தானா? ரங்கன் விழி நீரைத் துடைத்தான். நடந்தவை அனைத்துமே ஏதோ கனவு போல் அவனுக்குத் தோன்றின.

மேலதிகாரி கண்டிப்பாகப் பேசிப் போலீஸ் ஆட்களை அனுப்பி வைத்துவிட்டார். அந்த அலுவலகம் முழுதும் ரங்கனைப் பற்றிய பேச்சுத்தான். அத்தனை பேருக்கும் அவன் மேல் அனுதாபம். பரபரப்பு அடங்கி அமைதி ஏற்படவே வெகு நேரமாயிற்று. அவன் மனமறிந்து செய்த குற்றம் மறைந்தே விட்டது.

குற்றம் மறைந்து விட்டாலும் அதனால் கிடைத்த பலனை என்ன செய்வது? பலன் கருதி அவன் குற்றம் செய்ய எண்ணவில்லை. என்றாலும் கையிலிருக்கும் ஐம்பது ரூபாயை என்ன செய்வது? அந்தநோட்டுக்களில் எப்படி அடையாளம் இல்லாமல் போயின? அது இயற்கையாக நிகழ்ந்த தவறுதானா? அச்சமும் குழப்பமும் நிறைந்த எண்ணங்கள் அவன் மனத்தில் அலைமோதின.

> அந்நிய அரசாங்கமாயினும் சரி, தேசிய அரசாங்கமே ஆயினும் சரி, அதன் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதற்கு இடையறாமல் முயன்று கொண்டிருப்பதுதான் உண்மையான சுயாட்சியாகும். வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கத்தையே மக்கள் எதிர்பார்க்க நேரிட்டால், சுயராஜ்யம் என்பது ஒரு துக்கிக்க வேண்டிய விஷயமாகி விடும். —காந்தியடிகள்

அறைக்கு வெளியே கந்தையா நிற்பது தெரியவே ரங்கனுக்குச் சட்டென்று விளக்கம் பிறந்தாற் போலிருந்தது. அவசரமாக எழுந்து அவனிடம் சென்றான்.

"என்ன சார்! இத்தனை வருஷமா கை நீட்டி ஒரு பைசா வாங்காத நீங்க இன்னைக்கு இப்படிச் செய்தீங்களே?"

அவன் மெள்ளப் பேசினாலும் தான் செய்த தவற்றை அவன் நேருக்கு நேர் சொல்வதைக் கேட்டு ரங்கனின் உடல் நடுங்கிற்று.

"அந்தண்டை சி. ஐ. டி. நின்னு கவனிக்கிறான். நான் எப்படி விஷயத்தை உங்ககிட்டே சொல்றது? அவங்க நோட்டை மறைச்சிட்டு என் சொந்தப் பணத்தைக் கவரிலே வைச்சேன். அது நல்லதாப் போச்சு!"

அவனுக்கு நன்றி கூறக்கூட எண்ணாமல் அந்த நோட்டுக்களை எடுத்து அவனிடம் கொடுத்தான் ரங்கன்.

"எனக்கு எதுக்கு? வாங்க மாட்டேன்!"

"பின்னே என்ன செய்யறது?"

"என்ன செய்யறது? போலீஸ்காரங்க கிட்டே திருப்பிக் கொடுக்கப் போறீங்களா? நல்ல ஆளுங்க சார் நீங்க! பேசாமல் பையிலே போட்டுக்கிட்டு உள்ளே போங்க!"

யாரோ வருவதுபோலத் தெரியவே அவன் வேகமாக நடந்து சென்று விட்டான். ரங்கனும் அவசரமாகத் தன் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டான். அவனுடைய பொன்னிற முகம் சிவந்து கன்றிப் போயிருந்தது. இனி அவனுக்கு ஆபத்து ஏதும் இல்லை என்ற மிகப் பெரியதோர் அமைதி அவனுக்கு ஏற்பட்டது. அதே போன்று மிகப் பெரியதோர் அமைதியின்மையும் அவனை ஆட்கொண்டது: அந்தப் பணம்—?

'டங்'கென்று ஒலியுதிர்த்து மணி ஐந்தரையைக் காட்டிற்று. அலுவலகத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் வெளியேறி விட்டார்கள். அதிகாரியும் புறப்பட்டு விடுவார். ரங்கன் அந்தப் பணத்துடனேயே வீட்டுக்குச் செல்ல வேண்டியதுதானா?

"எந்தா, நமக்குப் போவோமா?"

துயிலகன்று கண் விழித்தாற்போல் ரங்கன் பாருகுட்டியை வியப்புடன் நோக்கினான். அதிகாரியிடம் ஏதோ குறிப்புகளைத் தந்து விட்டு அவள் அப்போதுதான் வந்தாள்.

ரங்கனுக்குச் சட்டென்று எதுவும் விளங்கவில்லை. வழக்கத்துக்கு மாறாக அவள் ஏன் அவனை அழைக்க வேண்டும்? எங்கே அழைக்கிறாள்? அவனுக்கு நினைவு வந்து விட்டது. அவளோடு அவன் முன்பு பேசியதையும்,

திரைப் படம் செல்லத் திட்டமிட்டதையும் எண்ணிப் பார்த்தான். அவனுக்கே வியப்பாக இருந்தது. பலருடன் அவன் வெளியே செல்வதையும், கலகல வென்று பேசிச் சிரித்து ஆண்களுக்குச் சமமாகப் பழகுவதையும் கண்டு அவன் வெறுப்படைவதுண்டு. இன்று என்ன நூதனமான உணர்ச்சிக்கு உட்பட்டு அவனோடு படம் செல்ல ஒப்புக்கொண்டான்!

''எந்தா....போகாம்....''

''ம்..... போவலாம்!''

அவர்களுடைய அலுவலகத்துக்கு மிக அருகிலேயே ஒரு திரைப்படக் கொட்டகை உண்டு. ரங்கன் அதற்குச் சென்றதே இல்லை. ஏனோ அதில் அவனுக்கு ஈடுபாடு ஏற்படாமற்போயிற்று. இப்போது அவனோடு செல்வதென்றால்?



சேஷசாயி பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் டைரக்டர் திரு கே.கே. ராமன் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் செப்டம்பர் 17ந் தேதி பிரயாணமானார்.

தயங்கித் தயங்கிக் கூச்சத்துடன் அவன் அவனுடன் நடந்தான். அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வதைக் கண்ட சிலர் அவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். தெருவோரத்தில் நின்ற காலிகள் சிலர் ஏதோ பேசிச் சிரித்தார்கள். சில இடங்களில் கும்பலில் முட்டி மோதிச் செல்ல வேண்டியிருந்தது.

தியேட்டரை அடைந்ததும் எந்த வகுப்பு 'டிக்கட்' வாங்குவது என்று ரங்கன் தயங்கினான். பிறகு அவ்வாறு யோசனை செய்ததைப் பற்றி அவனுக்கே வெட்கமாக இருந்தது. முதல் வகுப்புக்குத்தானே போக வேண்டும்? இதில் தயக்கம் என்ன ?

தயக்கம் அவனை விட்டு அகல வில்லை: இன்று விளையாட்டாகச் செய்யத் துணிந்த ஒரு செயல் என்னென்ன விளைவுகளை உண்டாக்கி விட்டது! இது இரண்டாவது விளையாட்டா? ஏதாவது சமாதானம் கூறிப் படத்துக்குப் போகாமலிருந்துவிட்டால் என்ன ?

''எந்தா....''

அவன் சிந்தனை கலைந்தது:

எதிரே தழைத்து நிற்கும் சோலை போல் கம்பீரமாக நின்ற பாரு குட்டியை அவன் வியப்புடன் பார்த்தான். வேலை முடிந்ததும் வீட்டுக்குச் செல்லாமல் அவனோடு சினிமாவுக்குப் புறப்பட்ட அவன் போக்கு அவனுக்கு விசித்திரமாகத் தோன்றியது. விகல்பமற்ற அவளது பார்வை உண்மையானதுதானா?

''எந்தா.... மிஸ்டர் ரங்கன்!''

''ஒன்னுமில்லே...டிக்கட் வாங்கி வறேன்!''

அந்த முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழி தோன்ற வில்லை ரங்கனுக்கு. காலையில் அவனை ஆட்கொண்ட அத்தகைய உணர்வு இப்போதும் அவனைப் பற்றுவது போலிருந்தது. விட்ட கனவை மீண்டும் தொடர்ந்து காணும் மயக்கம். அவன் அவனோடு சினிமாவுக்குப் போக வேண்டியதுதான். அவன் அருகிலேயே அமர்ந்து உறுத்தும் உள்ளத்துடன் திரைப்படத்தில் மனம் பதித்தும் பதியாமலும் நேரத்தைப் போக்க வேண்டும். எவ்வளவு குழந்தைத் தனமான ஆசை அவனுக்கு! அதற்கு உடன்பட்டு விடுவதில் எழும் பரபரப்பு.

பணத்தை எடுக்கப் பையில் கைவிட்டான்.

''ஐயோ!'' — அவனை மீறிய கலவரத்துடன் வார்த்தை தெறித்தது.

''எந்தா.... எந்தா! வாட் இஸ் ராங்?''

''பணம் போச்சே! கும்பலிலே எவன் எடுத்தானோ தெரியவில்லையே!''

''ஓ! மை காட்!'' அவளுடைய தெளிந்த மனத்தில் அளவற்ற வேதனை.

செய்வதென்ன வென்று அறியாத திகைப்புடன் இருவரும் சற்றுநேரம் நின்றார்கள். தெருவெல்லாம் அள்ளி வீசி விட்டாற்போன்ற ஜனத்திரள் பொங்கிப் பாய்ந்து சென்றது.

வாழ்க்கையில் எதையோ சாதிப்பதுபோல் ஒவ்வொருவரும் வேகமாகச் சென்று கொண்டிருந்தார்கள். உணர்ச்சிகளைத் தம்மை அறியாமல் தங்கள் முகத்தில் தேக்கிக் காண்பிக்கும் பலவகை மக்கள். தம்மைத் தவிர வேறு எவருமே அறிய முடியாதபடி பலவித எண்ணங்களைத் தமக்குள் சுமந்து சென்ற பல்வேறு மனிதர்கள். இவர்களில் யார் அவன் பணத்தை எடுத்திருக்கக் கூடும்?

மேலும் அது அவன் பணமா?

அப்படி எண்ணுவதே எவ்வளவு கேவலம்! திக்குத் தெரியாத வனத்திலிருந்து மீண்டு சீரான பாதைக்கு வந்தது போலிருந்தது அவனுக்கு. தீய கனவு கண்டு விழித்த உணர்வு. சுமை, தானே விலகிக் கிடைத்த விடுதலை.

''போலீசில் நமள் ரிப்போர்ட் செய்யாம்.''

ரங்கன் அவளை அமைதியாகப் பார்த்தான்: போலீசில் ரிப்போர்ட் செய்வதாவது? விலகிய துன்பத்தை வலிய வருவித்துக் கொள்வதா?

''சரி, நான் போய் ரிப்போர்ட் செய்யறேன். நீங்க படத்துக்குப் போங்க!''


''நிங்களுக்குச் செலவின பணம் ஞான் தரா. கேதிக்காண்டா!''

ரங்கன் அவளை அன்புடன் நோக்கினான்: சுழன்று வீசிய காற்றில் அவள் பட்டுக் கொடி ஒன்று படபடத்துக் கம்பத்தில் பறப்பதுபோல் நின்றான்.

''பணம் ஒன்றும் வேண்டாம். நானும் இதற்குக் கவலைப்படவில்லை. நான் வரேன்.''

அவன் வேகமாக நடந்தான். மனத்தில் நிறைந்த அமைதி. அவன் முகத்தில் எப்போதும் நிலவும் நிறைவு. அவன் தந்த மேனியை மாலை வெய்யில் மெருகிட்டது.

நிமிர்ந்த நோக்குடன், நிமிர்ந்த தோற்றத்துடன், நிமிர்ந்த உள்ளத்துடன் தனக்குப் பழகிய தூய உலகத்துக்குத் திரும்பி வந்த பிரக்ஞையுடன் அவன் நடந்து சென்றான். விளக்குச் சுடரை ஆவலுடன் தீண்டிவிட்டுப் பிறகு அஞ்சி ஒதுங்கிச் செல்லும் அறியாத பிள்ளையாய் அவன் நடந்து சென்றான்.



படித்துப் பாருங்கள்



பச்சைக் கனவு

இந்தச் சிறுகதைத் தொகுதியில் ஐந்தாவது கதையாகிய 'தாக்ஷாயணி' என்னும் கதையில் கதாநாயகன் தன் மனைவியிடம் பேசுவதாக ஓர் அழகிய வாக்கியம் வருகிறது:

"உன் பாஷைக்குத் தலை வணங்குகிறேன்." இந்த உயர்தரமான சிறுகதைத் தொகுதியை நோக்கி, இதன் ஆசிரியர் லா. ச. ரா. அவர்களை நோக்கித் தைரியமாக இந்த வாக்கியத்தைச் சொல்லிப் போற்றலாம். கவிகள் மிக நுணுக்கமான நிகழ்ச்சிகளையும் கண்ணால் பார்த்து, மனத்தால் நினைத்து, சொல்லாம் புனைவதைக் கண்டிருக்கிறோம். ஆனால் சிறுகதைகளிலும் கவிநோக்கு, கவிச் சொற்கள், கவியழகு அமைய எழுதும் தனித்திறன் இந்தத் தொகுதியின் ஆசிரியருக்கு வாய்த்திருக்கிறது. 'பச்சைக்கனவு' என்பது கண்ணிருந்த காலத்தில் ஊமைப் பெண்ணை அறியாது மணந்து, அறிந்த பின் தூரத்திவிட்டுக் கண்ணிழந்த காலத்தில் அவளுடன் உறவு கொண்டு அவமானத்தால் அவள் இறந்தபின் ஏங்கும் பேதை மனிதனைப் பற்றிய கதை. 'அபூர்வ ராக'த்தில் வருகிற பெண் சிறந்த கதாபாத்திரம். உலகத்தின் மெதுவைத் தாங்கப் பொறுமையற்று விரையும் பெண் அவள். செவிட்டுப் பெண் அம்முலு, தன் கணவனின் ஒவ்வொரு நிமிஷத்திலும் ஆச்சரியங்கள் விளைவதாகக் காணும் தாக்ஷாயணி, 'பாற் கடல்' என்கிற கதையில் வரும் காந்திமதி, 'மேக ரேகை'யில் வருகிற நோயாளி, 'மண்' என்ற கதையில் ஊருக்கே சாபமிடும் குயத் தம்பதிகள், சுமங்கல்யன் கதையில் பின்னோக்கி ஓடும் கழிவிரக்க நினைவுகள், மனைவியை இழந்த கணவனும், கணவனை இழந்த மனைவியுமாகச் சந்தித்து நெருங்கி விலகும் 'சாட்சி' கதையின் பாத்திரங்கள், சஷ்டியப்த பூர்த்தியின் போது பழைய நினைவுகளை நினைக்கும் சாவித்திரி, 'பேசும் விரல்' கதையில் வரும் துணிச்சல்காரப் பெண், எல்லாருமே அற்புதமான கதாசிரியருக்கு அற்புதமான முறையில் பயன்பட்டிருக்கிறார்கள்.

மனித உணர்ச்சி ராகங்களின் மிக நுணுக்கமான ஸ்வரங்களையும் சுயமாக ஒலிக்கச் செய்யும் தரமான கதைகளைப் பச்சைக் கனவில் படிக்கிறோம். பாராட்டுகிறோம்.

ஆசிரியர்: லா. ச. ராமாமிருதம், வெளியீடு: கலைஞன் பதிப்பகம், தியாகராயநகரம், சென்னை—17. விலை: ரூ. 3.

'நாள் வழி நற்சிந்தனைகள்'

ஓர் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரை ஒவ்வொரு நாளும் தியானம் செய்வதற்குரிய சிந்தனைகளை 'ஜேம்ஸ் ஆலன்' ஆங்கிலத்தில் எழுதியவற்றிலிருந்து மொழிபெயர்க்கச் செய்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் வெளியிட்டுள்ளனர். இதே வகையில் 'தினசரி தியானம்' என்று சித்பவானந்த அடிகள் இயற்றி வெளியிட்டிருக்கும் நூல் ஒன்றும் வந்திருக்கிறது.

தெளிவான மொழிபெயர்ப்பால் அமைந்த நாள்வழி நற் சிந்தனைகளைத் தினந்தோறும் படித்துப் பயனடையலாம். ஒவ்வொரு நற் சிந்தனைக்கு மேலும் கீழும் பெரிய எழுத்தில் பொன்மொழிகளைச் சுருக்கியும் அளித்திருக்கிறார்கள்.

மொழிபெயர்ப்பு: கு. பரமசிவன். எம். ஏ. வெளியீடு: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். பிராட்வே, சென்னை—1. விலை: ரூ. 5.

The Experiments of Mahatma Gandhi

முப்பத்தைந்துகோடி மக்களின் அடிமைத் தனத்தை அகற்றி, பாரத புண்ணிய பூமி மீண்டும் விடுதலை பெற வழிகாட்டிய மகாத்மா காந்தியைப் போற்றிப் புகழ்வதுடன் மக்களின் கடமை முடிந்து விடாது; குறிப்பாக மாணவர்கள், காந்திஜி தமது வாழ்க்கையில் செய்த அரிய சோதனைகளை அலசி ஆராய்ந்து, அவற்றைப் பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதே இந்த ஆங்கில நூலின் நோக்கமாகும். காந்திஜி தமது வாழ்க்கையில் பல முறைகளைச் சோதனை செய்த பின்னரே கைக்கொண்டார்; சோதனைக்குப் பின் தவறு என்று கண்டவைகளைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு கைவிட்டார் என்பதற்குப் பல உதாரணங்கள் கூறலாம். உணவு, கல்வி, குடும்ப வாழ்க்கை, சமூகத் தொண்டு முதலிய பல்வேறு பிரச்னைகளையும் காந்திஜி அணுகிய விதம், அவை சம்பந்தமான பரிசோதனைகள், சோதனைகளின் பலனாகக் காந்திஜி கண்ட முடிவுகள் முதலியவை இந்த நூலில் கோவையாகவும் சுருக்கமாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரச்னையையும் பற்றிய விவரங்கள் அடங்கிய காந்திஜியின் நூல்களுடைய பெயர்கள், பக்கங்கள் முதலியனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெரிய விஷயங்கள் அடங்கிய இந்தச் சிறு நூல் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

கிடைக்குமிடம்: ஆசிரியர் கே. அருணாசலம். Tamil-Nad Gandhi Smarak Nidhi, Madurai-2. விலை: 50 ந. பை.

Printed & Published by R. Ananthana rayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

